ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன்பணம் — ரூ.	3—0
6-மாத சந்தா „ — „	1-12
வெளி நாட்டிற்கு „ — „	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது

ஆசிரியர்:— ஈ. வெ. இராமசாமி

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7	ஈரோடு, பிரஜோத்பத்தி௵ சித்திரை௴ 27௳ (10—5—1931)	மலர் 2

அரசாங்க இரசாயன பரிசோதகர்களாலும், ஆங்கில வைத்திய நிபுணர்களாலும், ஐக்கோர்ட்டு ஜட்ஜுகளாலும், அரசர்களாலும், அநுபவித்துக்கொண்டாடப்படுகிறதும், வைத்திய மகாநாடுகளில் நற்சாட்சி, பரிசு முதலியன பெற்றவைகளுமான

வைத்திய பாஸ்கர பண்டிட் எஸ். எஸ். ஆனந்தரின்
புகழ்பெற்ற சித்த மருந்துகள்.

மகாசந்தனாதித்தைலம்

வெட்டைச்சூடு, மேகச்சூடு, மூலச்சூடு, மூளைச்சோர்வு, நரம்பு பலவீனம், தலைவழுக்கை, இளமையில் நரைத்தல், மயிர் உதிர்தல், கண்ணோய், காதுநோய், மூக்கைப்பற்றிய பீநச நோய் முதலான வற்றை நீக்குவதில் இது நிகரற்றது. மூளையை அதிகமாக உபயோகிப்பவர்களுக்கு ஞாபக சக்தியை அதிகப்படுத்திக்குளிர்ச்சி தருவதில் இன்றியமையாதது. தலைமுழுகுவதற்கும், தலைமயிரை வாரிக்கொள்வதற்கும் மனோகரமானது. பொதுவாக கழுத்திற்கு மேற்பட்ட எல்லாப்பிணிகளையும் கண்டிக்கவல்லது. ஒரு முறை பரீட்சித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

6 அவுன்சு ரூ. 1— 0—0. 24 அவுன்சு 3—12—0.
12 „ ரூ. 1—14—0. மாதிரி புட்டி 0—3—0.

மேக நோய் மருந்து

இது கருப்பத்தில் உண்டான நோய்கள், நடுவில் தனது செய்கைத்தவறால் வந்த மேக நோய்களாகிய கிரந்திகள், கல் அடைப்பு, சதையடைப்பு, தொண்டையிற் சதை வளர்ச்சி, கருமேகம் செம்மேகம், வெண்மேகம், வெடிமேகம், தோல் தடித்து தினவெடுத்தல் முதலிய மேக நோய்களைப் போக்கும் அருமருந்தாகும். இதையுபயோகிக்கும் விதத்தை நமது கேட்லாக்கில் காண்க.

40 நாள் மருந்து ரூ. 3—8—0.
20 „ ரூ 2—0—0.

அமுத சுரபி
[மகாகாய கற்பம்]

இது ஆண் பெண் இருபாலர்க்கும் ஏற்பட்டுள்ள இருதய பலவீனம், மூளை பலவீனம், சோம்பல், வெட்டைச்சூடு, மூலச்சூடு, உடம்பு மெலிவு, கை கால் அசதி, அகாலமூப்பு, கண் மங்கல், மலட்டு நோய் முதலியவைகளை நீக்கி உடம்பின் உள்ளுறுப்பு, வெளியுறுப்புகளை வலிமையடையச் செய்யும், கஞ்சா அபின் முதலிய மயக்கப் பொருள்களைச் சேர்த்துச்செய்யும் லேகியங்களைப் போல் இது ஒன்றும் கெடுதிகளைச்செய்யாது.

1 பவுண்டு விலை ரூ. 3—8—0.
1(2 „ ரூ, 1—14—0.

ஜீரணி லேகியம்

இக்காலத்தில் வரும் நோய்களுக்கு அடிப்படையாகவுள்ளது மலச்சிக்கலே யாகும். இதுவே பிணிகளுக்கெல்லாம் மூலகாரணமாகயிருக்கிறது. எனவே, அவ்வித மலச்சிக்கலை யொழித்து நோய் வரவொட்டாது செய்வதற்கு நமது ஜீரணி லேகியம் முதன்மையானதாகும். மற்றும் பசியின்மை, பித்தவாயு, புளியேப்பம், சூலை யெரிச்சல், வயிற்று நோய், குன்மம், மார்பு நோய், மயக்கம், வாந்தி, நாவிற் சுவையின்மை முதலிய நோய்களை நீக்கும். வாய்க்குமதுரமானது.

பெரிய டப்பி ரூ. 2—0—0.
சிறிய டப்பி ரூ. 1—2—0.

முக்கிய அறிவிப்பு.

எமது முன்னோர்கள் சாஸ்திர விதி தவறாது, பரம்பரையாய்க்கையாண்டுவந்த நமது மகாசந்தனாதித் தைலம் ஒன்றே சுமார் 24 வருஷங்களுக்குமுன் வியாபார முறையில் முதன் முதல் வெளிவந்தது. நமது தைலத்தின் பெருமை இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பரவி மிகுதியாய் வியாபாரம் நடைபெற்று வருவதைக்கண்டு பலர் தற்காலம் மகா சந்தனாதித்தைலம் என்ற பெயரால் விளம்பரம் மிகுதியாகச் செய்கின்றார்கள். இதனைக்கண்ணுறும் அன்பர்கள் நமது பெயரையும் "பாரதமாதா" (டிரேட் மார்க்) வியாபாரக்குறியையும் கவனித்து வாங்கும்படியாக எச்சரிக்கை செய்கின்றோம்.

நோயைப்பற்றி விரிவாக ஒரு கடிதம் எழுதினால் அதற்குச் செய்யவேண்டிய பக்குவங்களையுடனே தெரிவிக்கப்படும். எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

இனாம் விலாசம் தெரிவிப்போர்க்குச் "சுகவழி" என்னுஞ் சிறு புத்தகமும், கேட்லாக்கும் இனாமாக அனுப்பப்படும்.

தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலைத்தெரு, சென்னை.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

"சன்மார்க்கன்"

பொதுநலங் கருதி வெளிவரும்

ஓர் உயர்தரத்தமிழ் மாதப்பத்திரிகை

கொங்கு மண்டல சமரச சன்மார்க்க சங்கத்தின் சார்பாகப் பழனியிலிருந்து ஒவ்வொரு தமிழ்மாத முதலிலும் எளிய தமிழ் நடையில் அரிய கட்டுரைப் பொருள்களுடன் வெளியிடப்படுகின்றது. உடனே சந்தாதாரர்களாகச்சேருங்கள். வருட சந்தா:—உள்நாடு ரூ. 1. வெளிநாடு 1-4-0.

ஆசிரியர்—(நாவலூற்று)

சி. சுவாமிசிவநேசம்,

'சன்மார்க்கன்' பத்திரிகாலயம், பழனி.

சுத்தகதர்! உயர்ந்தகதர்!!

நேர்த்தியான கதர்!!!

அகில இந்திய (கதர்) காங்கிரஸ் சங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. எங்களிடம் கதர் சம்மந்தப்பட்ட எல்லா ரகங்களும் இருக்கின்றன. வெளிநாட்டு ஆர்டர்கள்கிரயம் முழுமையும் அனுப்பினுல் கவனிக்கப்படும்.

நா. மு. ஸ்ரீ ஈ. ரு. வே. ஸ்ரீ Co.,

கதர் ஸ்டோர்,

சேன்னிமலை ஈங்கூர் (S I. Ry.)

குணமில்லாவிடில் பணம் வாப்பீஸ் செய்யப்படும்

சித்தரசம்

சகல வியாதிகளுக்கும் உள்ளுக்கும், வெளியிலும் உபயோகிக்க நிமிஷக்கணக்கில்குணமாகும்

புட்டி 1-க்கு ரூ. 1—8—0

சி. பி. சாமி, சித்தமருந்து செய்சாலை பழநி S. I.

டேலிபோன் நெ. 3789 தந்தி விலாசம்:—கோர்சேய்ன்.

ஹெல்விட்டியா பிரைவேட் வைத்தியசாலை ஸ்ரீ சம்ரக்ஷணை விடுதி,

வேப்பரி தபால் ஆபீஸ் (சமீபம்) சென்னை.

மிஸஸ். மார்த்தா ஒகஸி ஆரியா சூப்பரிண்டெண்ட்

அடக்க முடியாத தாது புஷ்டியினுல் யானை பலத்தை அடையலாம்

மதயானைக்குளிகை

தண்ணீர் போல் உடைந்தோடும இந்திரியத்தை இறுக்கிக்கட்டி மணியாக்கி நாடி நரம்புகளை முறுக்கேற்றி மதங்கொண்டயானையைப்போல் இல்லற இன்பத்தில் நீண்டநேரம் முறைத்து போராடும் வல்லபம் இதற்கே உண்டு ஒவ்வொருவரும் பரீக்ஷித்து ஆனந்தமடையக்கூடியது. 100 குளிகை ரூ. 12. 50 குளிகை ரூ. 7. (மாதிரிக்கு 30 குளிகை ரூ. 4-8-0)

விலாசம்:— கே. எஸ். பதி, வைத்தியசாலை, பழனி S I Ry.

ஏழு தலைமுறைகளாய் கையாண்டனுபவம் வாய்ந்ததும், வைத்திய மகாநாடுகளிலும், கண்காட்சிகளிலும் மதிப்பு பெற்றதுமான சிறந்த ஒளஷதங்கள் எங்களுடையது. எவ்வகை வியாதிக்கும் ஏற்றது. எல்லோராலும் புகழ்பெற்றது. உண்மையும் உத்திரவாதமுமான மருந்து.

நீங்கள் என்றுமழியாத இளப்பருவத்தை அடையவேண்டுமானுல் பழனி சி. எம். சாமி

மகா வீரிய தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்

தாதுபுஷ்டியில் மன்மதனுக்கொப்பாவீர்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம் வயோதிக தசையாலும், வாலிபபருவதுர்க் கிருத்தியங்களாலும் நீங்கள் இழந்த பலம், தாதுநஷ்டம், போகசக்திக்குறைவு, மனஉற்சாகம் இவைகளை திரும்பக்கொடுத்து, இல்லற ஒற்றுமை, வீரிய விர்த்தி முதலியவைகளைக் கொடுப்பதில் இணையற்றது. 24 நாள் பஸ்பம் விலை ரூ 10

காமரூபிலேகியம்

தாதுபுஷ்டிக்கு மிக உயர்ந்தது இதில் தங்கபஸ்பம் வைத்துச் சாப்பிடலாம் சேர் ரூ 15

குருதாளக பஸ்பம்—இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. 24 நாள் புட்டி 1க்கு ரூ, 8.

குருநாக பஸ்பம்—மூலத்திற்கு

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும், கீழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை மலபந்தம் முதலிய ஒன்பதும் அதிசீக்கிரத்தில் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஒளஷதம். புட்டி 1-க்கு ரூ. 4.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கெர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனேநிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும். மிக்க அநுபவமானது. புட்டி 1க்கு ரூ. 2

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன் பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C மஹலயப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

சைவத்தின் உண்மையும், ஜீவகாருண்யத் தன்மையும்.

(திரு அ. இராகவன்)

சென்ற வாரத்தொடர்ச்சி.

மனித உடல்தாங்கியுள்ள உயிர்களிடத்தில் காட்டும் ஜீவகாருண்யம்:- உலகிலுள்ள எல்லாச் சீவப்பிராணிகளுள்ளும் மனிதப்பிராணியே உயர்ந்தது என்று எல்லாச்சமயமும் ஒத்துக்கொள்கின்றது. சைவம் அதை எவ்விடத்திலும் மறுக்கவில்லை. எனவே மனிதப்பிராணிகளிடம் ஜீவகாருண்யம் காட்டுதலே மக்களின் தலையாய கடன் என்பதை யாவரும் அறிவர். பிறசமய மஹான் ஒருவர் "தன் கண்முன்காணப்படும் சகோதரனிடம் அன்புகாட்ட முடியாவிட்டால், தன் கண்முன் காணப்படாத கடவுளிடம் அன்பு பாராட்ட முடியா"தென்று கூறியுள்ளார். ஆகையினால்தான் கடவுளிடம் அன்பு பாராட்டி மோட்சசாம்பிராஜ்யத்தை யடைய அவாவுற்று நிற்கும் ஆஸ்திகப் பைத்தியக்காரனும் மனிதர்களிடத்தில் காருண்யம் காட்டினால்தான் ஆண்டவனிடம் அன்பு பாராட்ட முடியுமென்பதை அறிந்திருக்கக் கடமைப்பட்டிருக்கிறான். இதை யெல்லாம் கவனியாது நமது முன்னோர்கள் முட்டாள்களா? அவர்களுக்குத் தெரியாததையா தற்கால சீர்திருத்தக்காரர்களறிந்து விட்டார்கள்? பசு (உயிர்கள்) அன்பை விட பதி (கடவுள்) அன்பே சிறந்தது என்று, மக்களுக்கு அளவிடற்கரிய அருந்துன்பங்களெல்லாம் அல்லும் பகலும் இடைவிடாது புரியும் கொடிய துஷ்டனும் காலையிலெழுந்து குளித்து திருநீறணிந்து நித்யகாமானுஷ்டானங்களைச் சரிவரப்புரிந்து உருத்திராக்கம் பூண்டு ஆலயம் புகுந்து 108 முறைவலம் வந்து சிவ,சிவ என்று கோடிமுறை யுச்சரித்து தாம் கொண்டுவந்திருக்கும் தேங்காய் பழம் கர்ப்பூரம் முதலியவற்றை அர்ச்சகப் பாப்பான் கையிற் கொடுப்பதோடு இரண்டணா தட்சணையும் கொடுத்து தீபாராதனையைக் கண்குளிரக்கண்டு மகிழ்ந்து அப்பார்ப்பான் கொடுக்கும் பிரசாதத்தை கண்ணிலொற்றி விபூதிப்பிரசாதத்தை வாயிலும், தலையிலும் போட்டு நெற்றியிலணிந்து குரள்வளையை இறுக்கி பிடித்துவிட்டு சந்தனம் முதலியவைகளை யணிந்தும் ஆங்கு போந்த தாசியின் கடைக்கண் பார்வையில் மயங்கி உடலெல்லாம் புளகாங்கிதம் பூண்டு நிற்கும்போது ஒரு கோயிற் பார்ப்பான் விலகிநிற்கும்படி வாழைமட்டையால் முதுகில் அடிக்கும் அடியையும் பெற்றுக்கொண்டு வெளிவந்து ஆஹா! இன்று என்ன பிரமானந்தம் அந்த எம்பெருமான் காட்சியை என்னென்று மொழிவது என்று கூறிக்கொண்டிருப்பது உயிர்களிடத்தில் காட்டும் கருணையிலும் மேலானது. இதைத்தான் நமதுமுன்னோர்களும் அனுட்டித்தார்கள். நாமும் அனுஷ்டித்துக்கொண்டிருக்க வேண்டுமென்று கூறினால் நாங்கள் சிறிது கடுமையாக அவர்கள் வடிகட்டின முட்டாள்களாயிருக்கிறார்களென்றே சைவத்தின் உண்மையையும் ஜீவகாருண்யத் தன்மையையும் ஒருசிறிதும் உணராத "சமயப் புல்லுருவிகளென்றே" கூற வேண்டியது நேரிடுகின்றது என்ற வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு எடுத்ததற்கெல்லாம் முன்னோர்சென்ற வழி, முன்னோர் சென்ற வழி, என்று பகுத்தறிவைப் புறக்கணித்து வாழும் மக்களைக் குறித்துத்தான் சுவாமி விவேகானந்தர், "ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஏற்பட்ட பயிற்சியின், நாம் ஸ்திரமான ஒரே மாதிரியில் உண்டு குடித்து குளித்து உறங்கி நடக்கும்படி நமது முன்னோர்கள் நம்மை அவ்வளவு ஒழுங்காகவும் சரியாகவும் பயிற்றுவைத்திருக்கிறார்கள்; பலன் யாதெனில், நாம் மெல்ல மெல்ல வெறும் யந்திரங்களாய்விட்டோம்; ஜீவன் நம்மிடத்தினின்றும் வெளியே போய் விட்டது. "ஆம்" என்றோ, அல்லது "இல்லை" யென்றோ சொல்லாத, முன்னோர்கள் சென்ற வழியிலேயே சென்றுகொண்டிருக்கின்ற, கடைசியில் அழுகி மரிப்பதற்குத் தயாராகி ஆலோசனைக்குள்ள ஸ்வதந்திர சக்தியையெல்லாம் இழந்துவிட்ட, அத்தனை அசையும் யந்திரங்கள் மாத்திரமேயாயிருக்கின்றோம்" என்று கூறியுள்ளார்கள். உயர்திரு ருஷி அவர்கள் "......ஒரு கொள்கையைப் பலபேர் வழிபட்டிருப்பதாலும், அல்லது அதை நூற்றாண்டுகளாய் நம்பி வருகிறபடியாலும், அல்லது ஜனங்கள் பூஜிக்கத்தக்க புஸ்தகத்தில் அது எழுதப்பட்டிருப்பதாலும் நீயதை ஏற்றுக்கொள்ளக் கூடாது; விஷயத்தை நீயே யோசித்து அது சரிதானா என்பதை நீயே மதிக்கவேண்டும்" என்று மொழிந்துள்ளார். பெரியார் கௌதமபுத்தர், அங்குத்திர நிக்கியாவில் காலமாசூத்திரத்தில், "எது ஒரு விஷயத்தையும் அதை சும்மா சொன்னதினாலும் சரி, அல்லது பண்டைய நாட்களிலிருந்து வந்த ஐதீகமானாலும் சரி, அதற்கியானாலும் சரி, பெரியார்கள் எழுதிவைத்த சாசனமாக விருந்தாலும் சரி, ஏதோ ஒரு சுவாமியின் அருள் வாக்காயிருக்கலாம் என்று நிதானிக்கக் கூடியதானாலும் சரி, தெய்வாதீனமான ஒரு முடிவாக நாம் அனுமானித்துக்கொண்டிருந்தாலும்சரி, நமது ஆசாரியர்கள, குருக்களாகிய இவர்களுடைய பிரமாணமாக விருந்தாலும்சரி அதைநம்பக்கூடாது. ஆனால், சாசனம், கொள்கை, போதனை எதுவும், நம்முடைய சுயபுத்திக்கும் மனச்சாக்ஷிக்கும் ஒத்துவருமானால் அப்போது அதைநம்பவேண்டும்" என்று கூறிவிட்டு கடைசியாய் "இதற்காகத்தான் நான் சொல்லக்கேட்டதால் நீங்கள் வெறுமையில் நம்பக்கூடாது. ஆனால் உங்கள் மனச்சாட்சி அறிவு நம்பினீர்களானால் அப்போது அதன்படி தாராளமாய் நடந்து கொள்வீர்கள்" ளென்று கூறியுள்ள மொழிகளெல்லாம் ஆராய்ச்சி செய்தற்குரியது. ஜீவகாருண்யம் காட்டும் முறையிலும் முன்னோர் வழியைப்பின்பற்ற முயற்சித்தல் மூடத்தனம், முன்னோர் வழியில் நல்லதுமுண்டு தீயதுமுண்டு. எனவே அறிவையுபயோகித்து நலமானதைக் கைக்கொள்ளலே சிறப்புடையது. இதை யுன்னித்தான் சைவசமயப் பெரியார்களிலொருவரான உமாபதி சிவாசாரியார்,

> தொன்மைய வாமெனுமெவையு [நன்றாகா வின்று
> தோன்றியநூலெனு மெவையுந் [தீதாகா"

என்றுமொழிந்துள்ளார்கள். எனவே உண்மைசைவர்கள் பழமை,புதுமைகளைப்பற்றி ஆராயாது எப்பொழுதும் அன்பைச்செல்வமாகவும், அறிவைச்சத்தியாகவுங்கொண்டு வாழக்கடமைப்பட்டுள்ளார். சைவர்கள் மக்களை விலங்கினும் இழிந்ததாய் கருதாது மனிதர்களாய்க் கருதுவார்களாயின், உண்மைச்சைவ ஒழுக்கத்தைப்பின்பற்றி நடப்பார்களாயின் லட்சக்கணக்காய், கோடிக்கணக்காய் மக்கள் உண்ண உணவின்றி தவிக்க பாழான கல்லுக்கு ஆண்டிற்கு ஒருமுறைகோடிக்கணக்கான பொருள் செலவுசெய்து தற்கோவிலமைத்து பழம்,பாயாசம், தயிர், பால், பன்னீர், தேன் முதலிய பொருள்களால் அபிஷேகம் செய்வதும், லட்சக்கணக்கான நம் நாட்டு மக்கள் தங்கள் மானத்தை மறைக்க சுத்தமான துணியற்று கந்தையாடைக் கட்டி அரை நிர்வாணதலங்கோலமாய்த்திரியும் பொழுது அறிவிலாக் கல்லுக்கு விலையுயர்ந்த பட்டாடை புனைகின்ற முட்டாள்தனமும், லட்சக்கணக்கான குழந்தைகள் பால் கிடையாது நெய் கிடையாது நோய்வாய்ப்பட்டிறக்கும் பொழுது பாலபிஷேகம் செய்வதும் நெய் அபிஷேகம் செய்வதும் சுருக்கமான செலவில் மிகப்பிரகாசமான மின்சார விளக்குகள் போடுமிக்காலத்தில் மிக மங்கலான நெய்விளக்கும் நெய்த் தீவட்டிகள் போடுவதும் உண்ண உணவும், உடுக்க உடையும் வசிக்கவீடுமற்ற பல்லாயிர மக்கள் தெருவினின்று அலைய அவர்களுக்கு ஒரு சிறிதும் உதவிபுரியாது ஏராளமான சொத்தும அழகிய மாளிகையும நிருபதியான உணவும் உள்ள பார்ப்பானுக்கு அன்னதானம் பற்பல சதிருங்கள் மூலமாய்ச் செய்தும் வருவார்களா? இஃது ஜீவகாருண்யச் செயலாகுமா? அறிவுடையோரால் போற்றப்படும் கொள்கையாகுமா? ஐரோப்பாவில் பெரும்போர் நிகழும்போது நம்நாட்டுச் சைவர்கள் எங்கு சென்றார்கள்? இவர்கள் உண்மைச்சைவர்களாயிருப்பின் ஒருசில மக்கள் தங்களின் உயிரைத்தியாகஞ் செய்து சத்யாக்கிரகத்தினால் கோடிக்கணக்கான மக்கள் இறவாது அப்பெரும்போரை நிறுத்தியிருத்தல் வேண்டாமோ? அதுவன்றோ உண்மைச் சைவம். அறிஞர் புத்தர் பிரான் ஆடுகளை யாகத்திற்காகக் கொண்டு போகும் பொழுது, தமது உயிரைத்துரும்பென நினைத்துப் போந்து ஆடுகள் ஒன்றும் கொலைபுரியாமல் காப்பாற்றினாரே! அவ்வழி நின்று சைவர்களும் மக்களுயிர் விலங்குகளின் உயிரைவிடச் சிறந்தது என்றும் தாங்கள் ஜீவகாருண்ய முடையோர்களென்றும் காட்டக் கிடைத்த "பெரும்போரின்" சந்தர்ப்பத்தையிழந்து விட்டார்கள். பின்னர் யுத்தத்தில் காயப்பட்ட கோடிக் கணக்கான மனிதர்களுக்கு பல வழியில் உதவி புரிந்திருக்கலாம். அதையும் விட்டு விட்டார்கள். ஜீவகாருண்யப் பெருக்கினால் தெருவில் நடக்கக் கூடாதென்று கொடுஞ்சட்டம் செய்ததிருவாங்கூர் அரசாங்கத்தின் சட்டத்தைமாற்றி மனிதருரிமையைஸ்தாபிக்க வைக்கத்தில் உயர் திரு இராமசாமி அவர்களால் ஆரம்பிக்கப்பெற்ற அறப்போரில் (சத்யாக்கிரகத்தில்) சைவர்களும் சைவத்தலைவர்களும் கலந்து தங்கள் சமயம் ஜீவகாருண்ய சமயம். தாங்கள் ஜீவகாருண்யச் சீலர்களென்று உலகிற்குக் காட்டியிருக்கலாம். அஃதில்லா விட்டாலும் சமீபத்தில் செட்டி நாட்டில் மேல்சாதித்திமிர் கொண்ட சிலமக்களால் தாழ்த்தப் பட்ட ஆண்கள் சட்டையும்மேல்வேஷ்டியும்போடக்கூடாதென்றும் பெண்மக்கள் தோள்மேல் சேலைபோடக் கூடாதென்றும், ரவிக்கை போடக்கூடா தென்றும் கொடிய இம்சைகள் செய்து வருவது உலகமறிந்த விஷயமாயிருக்க எந்தச் சைவசமயியாவது ஜீவகாருண்யத்தோடு அக்கொடுமைகளை யொழிக்க முயற்சித்தானா? எந்தச் சைவனாவது சட்ட சபையில் இதைப் பற்றி பிரஸ்தாபித்தானா? எந்தச்சைவபத்திரிகையாவது இதுவிஷயமாய் கிளர்ச்சிசெய்ய மக்களைத்தூண்டிற்றா? எந்தச்சைவக்கழகமாவது (சங்கமாவது) இதைப்பற்றிசிரத்தை எடுத்ததா? சில பல சீர்திருத்தக்கொள்கைகள் மிளிரும் தீர்மானங்கள் மூலமாய் உலகத்தை ஏமாற்றி விடலாமென்று நினைத்த சில சைவப் பெரியார்களால் நடத்தப்பெற்ற திருநெல்வேலிசீமைச் சைவர் முதலாவது மகா நாட்டிலாவது இதைப்பற்றி ஏதாவது தீர்மானங்கள் செய்யப்பட்டதா? செய்கையில் ஒன்றும் புரியாது இப்போலிச் சைவர்கள் ஜீவகாருண்யம்! ஜீவகாருண்

[தொடர்ச்சி 21ம் பக்கம் பார்க்க]

திரு. காந்தியின் சாஸ்வத கொள்கை எது?

(பட்டுக்கோட்டை திரு. K. V. அழகர்சாமி)

ஜனநாயகமும் ஏகநாயகமும்.

திரு. காந்தியவர்களின் திட்டமானதும், சாஸ்வதமானதுமான கொள்கை இன்னதுதானென சொல்லுவதற்கு அவராலாகிலும் கூடுமா? என்பதுதான் கேள்வி. திரு. காந்தியவர்களிடம் ஏற்பட்டிருக்கும் பக்தி, அதனால் மக்களால் அவருக்கு கொடுக்கப்பட்ட பணம் ஆகியவைகளின் செல்வாக்குயெனும் திரைகள் அவரது கொள்கை என்ன என்பதைத்தெரிய மக்களுக்கு இடங்கொடுப்பதில்லை. எங்கு பார்த்தாலும் சுயராஜ்யம் சுயராஜ்யம் என்கின்ற பேச்சும் மகாத்மா மகாத்மா என்கின்ற பிரமையும் தான் தாண்டவமாடுகின்றனவேயன்றி அவரது கொள்கைகளைப்பற்றிய கவலையே மக்களுக்கு சிறிதுமில்லை யெனக்கூறுவது மிகையாகாது.

நமக்குத்தெரிந்த வரையில் அரசியலில் ஈடுபட்டு உழைத்து வருகின்ற மற்ற பலரும் ஏதாவதொரு கொள்கையைப் பின்பற்றி நடந்தவர்களாகவோ, நடப்பவர்களாகவோ காணமுடியவில்லை என்றாலும் மக்கள் பொதுவில் "நமக்கு ராமராஜ்யம் வரப்போகிறது" என்ற ஒரே ஆகாயக்கோட்டையின் மீது வைத்திருக்கும் நம்பிக்கைதான் அரசியல் செல்வாக்குகளுக்கு காரணமாயிருக்கின்றன. வைதீகர்கள் தங்கள் வைதீகத்திற்கு ஆதரவு தேடி தங்களை உயர்த்திக்கொள்ளவும் பணக்காரர்கள் தங்கள் செல்வத்தை நிலை நிறுத்தி ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்ளவும், படித்தவர்கள் தங்கள் பிழைப்புக்கு உத்தியோகம் தேடவும், வக்கீல்கள், டாக்டர்கள் முதலியவர்கள் தங்கள் தொழில்களை உயர்த்திக்கொள்ளவும்தான் காங்கிரசின் அரசியலிலும் திரு. காந்தியின் கொள்கையில்லாத் திட்டமில்லா கிளர்ச்சியும் உபயோகப்படுகின்றனவேயன்றி ஓர் குறிப்பிட்ட லட்சியத்தை உலக, தேசமக்கள்சார்பில்நிறைவேற்றி அதன் மூலம் வெற்றியடைந்து விடுதலையும் சமாதானமுமான வாழ்க்கையையடைய உபயோகப்பட முடியுமென எண்ணுவதற்கு இடமில்லை. நாம் இப்படிச்சொல்லுவதற்குக் காரணமில்லாமலில்லை. ஆகையால்ஒவ்வொன்றாய் அவைகளை அமைதியாக ஆராய்தல் அவசியமாகும். திரு. காந்தியின் முதற்கொள்கை (Democracy) "ஜனநாயக் தத்துவம் இதற்காகத் தம்மால் கூடுமான வரையில் அவர் பாடுபட்டு வந்திருக்கின்றார்" என்று ஜனங்கள் கருதுகின்றார்கள். ஆனால் எங்கே ஜனநாயகத் தத்துவம் தோன்றவேண்டுமோ அங்கு "ஏகநாயகத்தத்துவம்" அழிதல் வேண்டும் அல்லவா? அவ்வாறில்லையாயின் ஜனநாயகத்தத்துவம் வெற்றியடைய முடியாதென்பது கண்கூடு. ஆனால் திரு. காந்தியவர்கள், தான் கருதும் ஜனநாயகத்தத்துவத்தையடைய கராச்சி காங்கிரசில் ஏகநாயகத் தத்துவத்தை கைக்கொண்டிருக்கிறார் என்பதையும் இன்றும் அவர் காங்கிரசின் ஏதேச்சாதிகாரியாய் ஏகநாயகனாய் விளங்குகின்றார் என்பதையும் மற்றும் இட்டாலி சர்வாதிகாரியாகிய திரு. முசோலினியின் (Facisim) ஏதேச்சாதிகாரத் தத்துவத்திற்கும் இதற்கும் என்ன வித்தியாசமிருக்க முடியுமென்பதையும் ஜனங்கள் உணரவில்லை. திரு. முசோலினி ஓர் தேசத்தின் சர்வாதிகாரியாயிருந்து அத்தேசத்தை முன்னேற்றமடையச் செய்யவேண்டுமெனக் கருதுகின்றார். திரு. காந்தியோ ஓர் இயக்கத்திற்கு சர்வாதிகாரியாயிருந்து அவ்வியக்கத்திற்கு செல்வாக்குண்டாக்கப் பிரயத்தனப்படுகின்றார். இவ்விருவர் கொள்கையில் மாற்றமேதாயினுமுளதாவென்பதைத்தான் யோசித்தல் வேண்டும். ஆகவே ஜனநாயக ஆட்சி வேண்டுமெனக்கூறும் திரு. காந்தியவர்கள் ஏதேச்சாதிகாரத்துவத்தைக் கைக்கொண்டால்திரு. காந்தியவர்கள் கருத்து என்று சொல்லப்பட்ட ஜனநாயக ஆட்சி எத்தகையதாகவிருக்கும் என்பதையும் கூர்ந்து கவனித்தல் வேண்டுமென்பதோடு கூட திரு. காந்தியவர்களின் ஜனநாயகத் தத்துவக் கொள்கையுடன் இப்பொழுது ஏதேச்சாதிகாரக்கொள்கையும் சேர்ந்து கொண்டது எனக்கூறுவதை இலகுவில் மறக்க முடியுமா?

வைதீகமும்—சீர்திருத்தமும்

நாட்டையும், நாட்டின் மக்கள் அறிவையும், பொருளையும், ஒற்றுமையையும் கெடுப்பதாயிருக்கின்ற வைதீகத்தைப் பொருத்த வரையில் திரு, காந்தியவர்கள் மனபான்மை எத்தகையதாயிருக்கிறது என்பதைப்பற்றி சற்று யோசிப்போம். திரு. காந்தியவர்கள் தமது தென்னாட்டுப் பிரயாணத்தில், பிறப்பினால் பிராமணனென்பவனுளனெனவும், வருணாசிரம தர்மம் மக்களது வாழ்க்கைக்கு இன்றியமையாததெனக்கூறியதையும் உப்புச்சத்தியாக்கிரககாலத்தில் ராமநாம பஜனையுடன், சத்தியாக்கிரக வெற்றியை கடவுள் மீது சுமத்தி, மங்கள ஆர்த்திகள் குங்குமதிலகங்களுடன் புறப்பட்டது போன்ற இன்னோரன்னவைகளை நினைப்பூட்ட விரும்புகின்றனம். இவைகளிலிருந்து திரு. காந்தியவர்களின் வைதீக தர்மப் போக்குத் தென்னென விளங்கவில்லையா? வைதீகரான திரு. காந்தியவர்கள், பால்ய விவாகத்தைக் கண்டிப்பதும், சாரதா சட்டத்திற்கு ஆதரவு காட்டுவதும், தீண்டாமையைப்பற்றிப் பேசுவதும் போன்றகாரியங்களைசெய்து சீர்திருத்த நோக்கத்திலும் தமக்கு ஆர்வம் அதிக முளது என்பதைக் காட்டிக்கொள்ளவும்தவறிவிடவில்லை. ஆகவே வைதீகத்தை ஒரு பக்கமும், அவ்வைதீகத்தை ஒழிக்கும் சீர்திருத்தத்தை மற்றொரு புறத்திலும் ஆதரிப்பதுபோல் ஜனங்கள் நினைக்கும்படியும் நடக்கிறார் என்பதில் தவறுதல் ஏதாவதுளதா?

முதலாளிகளும்— தொழிலாளிகளும்.

பணக்காரரிடத்தில் திரு. காந்தியவர்களுக்குச் செல்வாக்கு அதிகம் உண்டு. பணக்காரரின் பலமும், ஆதரவும் இதுவரையிலும் திரு. காந்தியவர்களுக்கில்லாமலிருந்திருக்குமேயாயின் இவரது கதர் வேலையும், சத்தியாக்கிரக தொண்டர் அமைப்பும் இதற்குள்ளாக சிதறுண்டு அழிந்தொழிந்து போயிருக்குமென்பது திண்ணம். திரு. காந்தியவர்கள் சென்றவிடமெல்லாம்,செல்லுமிடமெல்லாம், பணக்காரர்களின் ஆதரவுதான் அதிகம். இன்னும் திருவாளர் காந்தியவர்கள்,பிர்லா,நேரு, சமன்லால்டஜாஜ் போன்றபிரபுக்கள் அரண்மனைகளில் தான்தங்குவதை வழக்கமாக வைத்துக் கொண்டிருக்கிறார். மேலும் கதரையே பிரதானமாகக கருதி,அதைத்தவிர வேறெதையும் அணிதல் தேசீபத்திற்கு விரோதமென பிரசாரம் செய்து வந்த திரு. காந்தி ஆலைமுதலாளிகளுக்குச் சலுகைகாட்டுவான்வேண்டி ஆலைத்துணியையும் ஆதரிக்கலாம் என்னும் அபிப்பிராயத்திற்குஇன்று வந்துவிட்டார். மேலும் இன்று திரு. காந்தியவர்களின் ஏதேச்சாதிகாரிததுவத்திற்குட்பட்ட காங்கிரசின பெருந்தலைவர்களாயுள்ளவர்களெல்லாம் பெரும் பணக்காரர்கள் தான் என்பது மறக்க முடியாதஉண்மையாகும். அறிவையோ, திறமையையோ, விட்டு பணத்தை மாத்திரம் மதிக்கும் குணம் திரு. காந்தியவர்களை விட்டு இன்னும் போகவில்லை என்பதற்கு காங்கிரசில் திரு. சுபாஸ் சந்திர போஸ் போன்றவர்களின் நிலையே போதுமான உதாரணமாகும். இம்மாதிரியாக பணக்காரரிடத்தே தாசானுத்துவம் பாடும் திரு. காந்தியவர்கள் தொழிலாளர்கள் நிலையைப்பற்றிப கவலையுள்ளவர்கள் போல்காண்பித்துக்கொள்ளவும் பின்வாங்குவதில்லை. தொழிலாளர் க்ஷேமத்தைக்குறித்துப் பேசுவதிலும், எழுதுவதிலும், தீர்மானங்கள் போடுவதிலும் முதன்மையான ஸ்தானம் பெறும் முயற்சியிலும் என்றும் தோல்வியடைந்ததில்லை. ஆனால் தனது ராஜியில் இன்று சிறையில் கிடந்து வாடும் தொழிலாள நண்பர்களாகிய திரு. ஜாப்வாலா, டாக்கே, நிம்க்கார் போன்றவர்கள் விடுதலையைப் பற்றிய பேச்சையே காணோம் என்றால் இவரது நோக்கம் எத்தகையதாகவிருக்க முடியுமென்பதை நாம் கூறவேண்டியதில்லை.

அஹிம்சையும்—ஹிம்சையும்.

திரு. காந்தியவர்கள் அகிம்சா தர்மத்திற்குக்கூறியுள்ள வியாக்கியானங்கள் பல உள. அவைகள் எல்லாவற்றிலும் தலை சிறந்தது எது வெனின் "நோம்பிஞ்சகா,தா ஞேவகதப் பிஞ்சுகோனே வாடு தன்யடு சுமதி" என்னும் சுமதி சதக சுலோகத்திற்கிணங்க "பிறரை நோகப்பண்ணாமல் தன்னையும் நொந்து கொள்ளாமலிருப்பவன் தான் இவ்வுலகில் பாக்கியவானுவான் நல்ல அறிவே" என்றும் "செய்கையில் மாத்திரம் அகிம்சா தர்மம் காட்டி விட்டால் போதுமானதென்று எண்ணி விடாதீர்கள். மனத்திலும் அகிம்சா தர்மம் தோன்றுதல்வேண்டு" மெனவும் கூறியுள்ளார். மேலும் எங்கு கோபம் பிறக்கிறதோ அங்கு அகிமசா இறக்கிறது என்றும், இம்மாதிரியான பல வியாக்யானங்கள் கூறியுள்ளார். இவைகளின்படி பார்த்தால் திரு. காந்தியவர்கள் தமது தர்மத்தை விட்டுக்கடந்து விட்டாரெனக் கூறுவது தவறுனதாகாதெனத்தான் கருதுகின்றனம். காரணமென்னவெனில் சில நாட்களுக்கு முன்பு மகமதியர்களையும் இந்துக்களையும் ஒற்றுமைப்படுத்தும் வேலையில் இறங்கித்தோல்வியடைந்தவுடன், சலிப்படைந்தமனத்துடன் "மகமதியர்கள் ஒற்றுமைக்கு இணங்காவிடில் எனக்குத் தெரியும் இனி எப்படி மீண்டும் ராஜீயப் போரை ஆரம்பிப்பதென்பது" எனக்கூறியுள்ளார். இதன் பொருளென்ன என்பதைக் கவனித்தல்வேண்டும். மகம்மதியர்கள் ஒரு வழிக்குவராவிடில் அவர்களையும் சட்டை செய்யாமல் தான் ராஜீயப்போரை நடத்துவது என்பது தானே. இதிலிருந்து திரு. காந்தி அவர்கள் மகமதியர்களை பயமுறுத்துகின்றார் அல்லது பயமுறுத்தப்பிரயத்தனப்படுகின்றார் என்பது தெளிவாகவில்லையா? சிலர் கருதலாம் அம்மாதிரி கூறியது தேச க்ஷேமத்தைக்குறித்துத் தானே. ஆகையால் அது குற்றமாக முடியாதென. ஆனால் இங்கு பிரச்சினை எதுவெனில் எது குறித்தாயினும் சரி அவரது அகிம்சா தர்மத்திற்கு விரோதமான உணர்ச்சி தோன்றியது என்பதுதான். ஆகையால் திரு.காந்தியவர்கள்பேசுவது அகிம்சா தர்மமாயினும் பிறரை பயமுறுத்தும் தொழிலையும் விட்டுவிட்டவரல்லவெனும்பொழுது அஹிம்சை-ஹிம்சையாக மாறிவிட்டது எனக்கூறுவது பொருந்தாமல் போகாதல்லவா?

சர்வமத சம்மதமும்- மதவாதமும்.

திரு. காந்தியவர்கள் தான் எல்லா மதங்களையும் ஒன்றுபோல் கருதுவதாகக்கூறிவந்துளார். தான் அனுஷ்டித்துவரும் அஹிம்சா தர்மக்கொ

தொடர்ச்சி 21ம் பக்கம் பார்க்க.

மாமதியோ மழைமுகிலோ.

[உ. க.]

"வேண்டியவற்கு வேண்டியவாறே வரமளிக்கும் சாசுவதத் பரம்பொருளின் பாதார விந்தங்களிலே தமது மனதை லயிக்கச் செய்து நிராசையாய் வீற்றிருக்கும்தபோமுனிவர்களும்," "இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பர் என்றெண்ணவோ திடமில்லையே" என்று பாடி அவர்களது நிலையற்ற தன்மையை நினைத்துப் புலம்பும்போது, சர்வ வல்லபமான கடவுளது ஸ்தானப் பெருமைக்கும், அவரது சர்வ வல்லமையுள்ள உயிருக்கும் அம்பு தொடுத்தெய்து நிற்கும் என் சுயமரியாதை இயக்கமே! நீபிறந்து ஏழாவதாண்டு ஆகியும் சிரஞ்சீவிப் பதமடைந்து, அழிவே இன்னதென அறிய முடியா வரம்பெற்று உலாவுதல் போல தனிச்சுடராய் விளங்குகிறாய்! இதனின்றே உன்னிடம் தனிமதிப்பும், பிறரால் பாதிக்கப் படாத சக்தியுமிருக்கிறதென்று தெளிதல் தானே முறை உலகுக்குநீஇழைத்த உதவியேஅதுஉனக்குப்பூர்ணசக்தியைத் தந்தது எனச் சொல்லவும் வேண்டுமா? இவ் ஆறு ஆண்டுகளாக உனது பெரும் உழைப்பின் பயனாய் எழுந்த நலன்கள் வெள்ளிடை மலைபோல் நிற்க உலகம் கண்கூடாகக் காண்கிறது. உனது பலமான—சோர்வில்லா முயற்சியின் பயனாய் எழுந்த சாசுவதமான நன்மைகள் இனி என்றென்றும் மங்காமல் சுடர்விட்டெரிந்து அவ்வொளியின் மகிமை உலகில் நெடுந்தூரம் பரவி நிலைத்து நிற்பதால், ஒளியின் மூலமான நீ இனி மறைவதென்றால், அது முடியாக் காரியம்.

உலகில் நிறைந்து நிற்கும் காரிருளைப் போக்கி வெண்மையான ஒளியைப் பரப்பி, அவ்வொளி கிரணங்களினாலே மாந்தருக்கு இனிமை, குதூகலம், உற்சாகம் முதலியவைகளை நல்கி உலகத்தாருக்குப் பேரானந்தம் தருவது பூரணமா மதியாகும். அம்மாமதியேபோல் மடமை, அடிமை நிலை, என்னும் அஞ்ஞான இருளிலே மீள வழியின்றிக் கண் இழந்தார் போல் வீற்றிருந்த மாக்களுக்குப் பகுத்தறிவான ஒளியைத்தந்து, உண்மை நிலையான ஞானஜோதியைத் தோற்றுவித்து, அவ்வொளியினின்றெழும் "விடுதலை" சுதந்திரம்" தன்மதிப்பு" முதலியகிரணங்களை அவர்கள்மேல்பலமாக மோதவைத்து அதனாலே அவர்களை மக்களாக்கிப்பரிபூர்ண ஆனந்தமடையச்செய்கிறாய்: உலகிலுள்ள அண்ட சராசரங்களெல்லாம் தாங்கள் ஜீவித்து எவ்விதத் துன்பமின்றி உலகில் நிலைத்து நிற்பதற்கு வானுலகை அண்ணாந்து பார்த்துக் கார்முகிலைப் பேராவலோடு எதிர் பார்த்து நிற்கையில், நில உலகில் ஏராளமான நீர்வளத்தை உண்டாக்கி அணுமுதல் அண்டம் வரை உள்ள பொருள்களைத்தண்மை நிலையிலாழ்த்தி அவைகளை உய்விப்பது மழை முகிலேயாகும். அத்தன்மையே போல், அன்னியரால் நசுக்குண்டு, "கடவுள் ஆக்கினை" 'கர்மபலன்' "மதக்கட்டுப் பாடு" என்னும் மூன்றும் தலைமீது ஏறி அழுத்திக் கொண்டிருப்பதால் எழுந்து நிற்கச் சக்தியற்று, அடிமை நிலையான பாதாள லபியில கிடந்துழன்று ஆவலோடு விடுதலையை எதிர் நோக்கிப் பரிதாபக் காட்சியாய் நம் நாட்டார் விளங்குகையில் விடுதலை யடையத் தடையாய் எதிரே நின்ற கோடானுகோடித்துன்பங்களைப் பிரத்தியட்சப் பிரமாணங்காட்டி, அவைகளைத் தகர்த்தெறிந்து, உண்மையைக் கடைப்பிடித்து, சாசுவதமான சுதந்திரத்திற்கு நேர்வழி காட்டியமைத்து, பிரதிபலன் கருதாதுவருஷிக்கும் மழை முகில் போல் மனிதரை உய்விக்கஉழைத்து நிற்கும் தனிப்பொருள்- என் சுயமரியாதை இயக்கமான- நீயே யன்றோ!

நீ புஷ்பித்த மலரான குடிஅரசின் இடைவிடா உழைப்பு, பரிசுத்தமான தண்ணீரில் பாசிபடர்ந்து நீரைமறைத்து நிற்பது போல், உண்மைத் தத்துவத்தை மறைத்து நின்ற எண்ணிறந்த மாயைகளை மறையச்செய்து தெள்ளிய சத்தியமான நிலையை உலகுக்கு நேரேகாட்டி, தமிழ்நாட்டில் ஒருதனி பிம்பமாய் மிளிர்கிறது.

உனது குடிஅரசின் சொல்நடை முறையோ இதுவரை நம் நாட்டில் தமிழ் பாஷை கையாடப்படாமுறையில் உபயோகப்பட்டுக் கல்லார், கற்றார், பெண்கள், ஆண்கள், ஏழைகள், செல்வவான்கள் முதலிய சகல பாலருக்கும் எளிய முறையில் உண்மை நிலையைத் தெளிவாய் ஓதி அவரவர்கள் ஸ்திதியைச் செவ்வனே யறிவித்து, விமோசனமும் காட்டி, சரிதப்புகளைச் சரிப்படுத்தப்பூரண உதவி செய்கிறது. இதுவரை தமிழ் பாஷையில் அலட்சியமாய்க் கருதப்பட்டு சாதாரணப் பதங்கள் எனவிடப்பட்ட "சூழ்ச்சி" சுயமரியாதை "சுயநலம்" "அயோக்யத்தனம்" "முட்டாள் தனம்" மூட நம்பிக்கை" 'கடவுள்' மதங்களின் பேரால் நடக்கும் அட்டூழியங்கள்" கற்பு என்னும் கட்டுப்பாடு" பெண்கள் கடைச் சரக்கா? "பணக்காரர்களின்ஏமாற்று" "பார்ப்பனீயப் புரட்டு'; தேசீயவியாபாரம் மோட்சநரகக் கற்பனைகள்" முதலிய எண்ணிறந்த தமிழ்ப் பதங்கள் அணுவைத் துளைத்து ஏழ்கடலைப்புகட்டியது போல் மகத்தான உட்பொருளையும், மேலான தத்துவார்த்தக் கொள்கைகளையும் தன்னுள் அடக்கி, எப்பிரசங்கிகளும் ஷேவாக்கியங்களை தள்ளிவிட்டு—தனது பிரசங்கத்தில் கலக்காமல்— பேசமுடியாவாறு அமைந்து புத்துயிர் பெற்று உனது அகராதியில் முரசத் தொனி செய்யலாயின.

உயர உச்சியையடையச்செல்வோர் எதிரே படிப்படியாய் உயர்ந்து தடையாய் நிற்கும் படிகளைக் காலால்மிதித்து அடிமையாக்கி அதன் உதவியாலேயே உன்னத நிலையை அடைந்து வருவதுபோல், உனது வழிக்குத்தடையாக எதிரே நின்ற எண்ணிறந்த இடைஞ்சல்களை உனது காலால் மிதித்து அடிமையாக்கிக் கொண்டு அவைகளையே படிகளாகக்கொண்டு மேலும் மேலும் ஏறிச்செல்கிறாய். அநாதிகாலந் தொட்டு நாட்டினரின் அறிவை பாழாகச்செய்து கொண்டிருந்த பிராமணீயத்தை வேரோடு அழிக்க அரும்பாடு பட்டாய். பிராமணீயத்தாலேயே தமது ஐம்புலன்களும் களிக்க ஒப்பற்ற சுகத்தில் வீற்றிருந்த பிராமணப் பத்திரிகைகளும் அதன்வால்களும் உன்னை நோக்கித் தொடுத்த கணைகளுக்கு அளவு சங்கையுண்டா? அக்கொடுங்கணைகளுக்குமார்பைக்காட்டி அவைகளைமழுங்கவைத்துபிராமணீயத்தில்மக்களுக்கிருந்தபிரமையை நீக்கி, உண்மைநிலையையும் சமத்துவத்தையும் பெரிய அஸ்திவாரத்தோடு நாட்டில்நீநாட்டிவிடவே, தற்சமயம் பிராமணப்பத்திரிகைகள் உன்னை நினைத்தாலே சிம்மசொர்ப்பனமாகக்கருதிநடுங்குகின்றன. 'தேசீயம்' பிராமணீயமிருந்த இடத்தில் தோன்றவே உனது கருணாகடாட்சம் அதன் மீது செலுத்துவது வலுக்கட்டாயமாய்ப்போயிற்று. அத்தேசீயத்தின் தன்மையை உலகுக்கெடுத்துக்காட்டும் போது, அதன் உள் புரட்டு—ஏமாற்று—நாட்டினருக்கு வெட்ட வெளிச்சமாய்ப் புலப்படவே, அதனை உயிரோடு சமாதிவைக்கப் பலர் தோன்றினர். தாம் அழிந்தால் தமது தேசீய வியாபாரம் க்ஷீணதசையடைந்து தம்சந்ததிகள் அத்தேசீயத்தின் பேரால் இந்தியாவில் வாழ முடியாதே என மனம் பதறி, 'தேசத்துரோகி' என்னும் "பாசுபதாஸ்திரத்தை" உன்மேல் ஏவினர். அக்கொடிய அம்புக்காவது உனது புறமுதுகைக்காண்பித்தாயா? உனது வலிமை பொருந்திய மார்பிலே அவ்வாஸ்திரம் பட்டு கூர்மழுங்கி வெட்கித்திரும்ப வேண்டியதாயிற்று. மக்களது அறிவு விர்த்தியாகாமலும், முற்போக்கிற்குத் தடையாகவும், காரணகாரியங்களை அறிய ஹேதுவில்லாமலும், வஞ்சக உருவாகவும் புத்தக வடிவாகவும் விளங்கிய புராணம், இதிகாசம், வேதம், சாஸ்திரம் முதலியவைகளை பூமியிலிட்டு மூடவேண்டியது உனது வேலையின் முக்கிய அம்சமாய் விடவே, அக்காரியத்தில் துணிந்து இறங்கினாய். அப்புத்தகங்களையே தமது மூளையாகவும், அப்புத்தக மூளையினின்றிறங்கும் இரத்தத்தையே தமது வயிற்றாகாரமாகவும் கொண்டிருந்த எண்ணிறந்த புலவர்கள் 'தமிழ்பாஷையின் மகிமை தொலைந்ததே! எனக்கூக்குரலிட்டு புலம்பி "தனித்தமிழ்ப் பாஷையின் எமன்' என்னும் 'மோகனாஸ்திரத்தை'ப்பிரயோகித்தனர். அதனாலாவது உனது ஐம்புலன்களும் கர்ம இந்திரியங்களும் மயங்கி வேதனையுற்றதா? இல்லை! பயனற்றவைகளின் மேலுள்ள பற்றையும், பிரமையையும் ஒழித்து உண்மைப்பொருளைக்காரணங்களோடு அடைய வழி தேடி விட்டே நின்றாய். "சுயராஜ்யம் வந்தால் அதனை ஏந்தித்தாங்கி நிற்கும் பாத்திரம் சமூகமேயாதலால், அதனைச்செ

(தொடர்ச்சி 20ம் பக்கம் பார்க்க)

சரியாய்வந்திருக்கத்தக்க கோட்டாறு புதிய மெற்றிராசனத் தலைவர் அவர்கள் முதலில் என்ன செய்யவேண்டும்?

(ஓர் கத்தோலிக்கன் எழுதுவது)

1. தம் ரூபதையில், கத்தோலிக்கர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்? என்றும், அவர்களில் எழுதவாசிக்கத்தெரிந்த அறிவுடைய ஆண்களும் பெண்களும் எத்தனைபேர்? என்றும், எழுதவாசிக்கத் தெரியாத ஆண் பெண் எத்தனைபேர்? என்றும், இப்போது படித்து வருகிற ஆண்பெண் எத்தனைபேர்? என்றும் படிக்கத்தகுந்த வயதுடைய ஆண்பெண் எத்தனை பேர் என்றும் கண்டறிந்து யாவருமறிய வெளியிட வேண்டும்.

2. தம் ரூபதையுலுள்ள கத்தோலிக்கர்களில், கூலிவேலை செய்து காலங்கழிக்கும் ஏழைமக்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? என்றும், பணக்காரர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்? என்றும், பெரிய உத்தியோகங்களிலமர்ந்து காலங்கழிப்பவர்கள் எத்தனைபேர் உளர்? என்றும், ஏழைகளின் பொருளை ஏமாற்றிக் காலங்கழிப்பவர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்? என்றும் ஆராய்ந்தறியவேண்டும்.

3. தம் ரூபதையிலுள்ள கத்தோலிக்கர்களில் மத உண்மைகளைக் கற்றவர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்? என்றும், அதன்படி நடந்து வருபவர்கள் எத்தனைபேர்? என்றும், மத உண்மைகளைச் சற்றுமறியாதவர்கள் எத்தனைபேருளர்? என்றும், குருட்டுநம்பிக்கையும் மூடபழக்கவழக்கங்களும் கொண்ட மக்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்? என்றும் பகுத்தறியவேண்டும்.

4. தம் ரூபதையிலுள்ள கத்தோலிக்கர்களனைவரும், மற்ற மதத்தினர்களைப்போல் வசதியான இடங்களில் வசதியான வீடுகளைக்கட்டி சுத்தமாகவும் சுகமாகவும காலங்கழிக்கின்றார்களா? என்றும், அவர்களுக்குத் தகுந்த ஜலவசதிகளிருக்கின்றனவா? என்றும், அவர்களில் வறுமையுற்று வாடுவோர் எத்தனைபேர்? என்றும் கவனித்தறியவேண்டும்.

5. தம் ரூபதையிலுள்ள கத்தோலிக்கர்கள், எத்தனை ஜாதிகளாகப் பிரிந்து வாழ்கிறார்கள்? என்றும், அவர்களனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்களா? என்றும், அவர்களை ஒற்றுமைப்படுத்தக் கூடிய ஏதேனும் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனவா? என்றும், ஒவ்வொரு ஜாதிக் கிறிஸ்துவர்களையும் மத குருக்கள் ஒன்று போல் நடத்திவருகிறார்களா? என்றும், ஒவ்வொரு ஜாதியாரிடத்தும் ஒன்றுபோல் ஏற்றத்தாழ்வின்றி மதவரிகள் வாங்கப்படுகின்றதா? என்றும் கண்டுணரவேண்டும்.

6. தம் ரூபதையிலுள்ள கத்தோலிக்கர்கள், கல்விகற்க, எத்தனை ஆண் பெண் பாடசாலைகள் இருக்கின்றன? என்றும், அப்பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் எத்தனை வகுப்புகள் வரையிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன? என்றும், அவற்றில் இங்லீஷ் பாடசாலைகள் எத்தனை? என்றும் தமிழ்ப்பாடசாலைகள் எத்தனை? என்றும் கணக்கெடுத்து அறியவேண்டும்.

7. தம் ரூபதையில், கத்தோலிக்க உபாத்தியாயர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்? என்றும், அவர்களில் தமிழ் பரீக்ஷையில் தேறினவர்கள் எத்தனைபேர்? என்றும், இங்லீஷ் பரீக்ஷையில் தேறினவர்கள் எத்தனை பேர்? என்றும், பி. ஏ. பட்டதாரிகள் எத்தனைபேர் இருக்கிறார்கள்? என்றும் ஆராய்ந்தறிய வேண்டும்

8. தம் ரூபதையிலுள்ள பாடசாலைகளில் கத்தோலிக்க உபாத்தியாயர்கள் எத்தனைபேர் வேலைபார்த்து வருகிறார்கள்? என்றும், பிறமதத்தவர்கள எத்தனைபேர் வேலைபார்த்து வருகிறார்கள்? என்றும், வேலையில்லாமல் கஷ்டப்படும் கத்தோலிக்க உபாத்தியாயர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்? என்றும். கன்னியர் மடங்களில் எத்தனை இந்து ஆண்கள் வேலைபார்த்து வருகிறார்கள்? என்றும், கத்தோலிக்கப் பெண்களில், பட்டதாரிகள், இந்த ரூபதையில் இருக்கிறார்களா? என்றும், அவர்கள், பெண்பாடசாலைகளில் வேலை பார்க்கிறார்களா? என்றும் நன்குகவனித்தறிய வேண்டும்.

9 தம் ரூபதையிலுள்ள கத்தோலிக்கர்கள், வடதிருவிதாங்கூரிலுள்ள கிறிஸ்துவர்களைப்போல், உயர்தரக் கல்விபெற்று கவர்ன்மெண்டில் உயர்ந்த பதவிகளைப் பெற்றிருக்கிறார்களா? என்றும், காருண்ய கவர்ன்மெண்டாரிடம், தம் குறைகளைத் தெரிவிக்கத்தகுந்த அறிவையோ, ஆர்தலையோ, பெற்றிருக்கிறார்களா? என்றும், ஆராய்ச்சிசெய்து அறிய வேண்டும்.

10. தம் ரூபதையிலுள்ள கத்தோலிக்கர்களில், தம்மக்களுக்குக் கல்வி கற்பிக்கப் போதுமான செல்வம் படைத்தவர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்? என்றும், படிக்கப் பொருளில்லாமல் வருந்தும் ஏழைமக்கள் கல்விகற்க, மத அதிகாரிகள், என்ன உதவி செய்கிறார்கள்? என்றும் உய்த்துணர வேண்டும்.

11. தம் ரூபதையிலுள்ள கத்தோலிக்கர்கள், மற்ற மதத்தார்களைப்போல் முன்னேற்றமடைந்து சுகமாய் வாழ்ந்துவர, எத்தனை கல்விச்சாலைகளும், தொழிற்சாலைகளும், புத்தகசாலைகளும், ஆஸ்பத்திரிகளும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன? என்றும், எத்தனை ஐக்கிய நாணயச்சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன? என்றும், அவர்களின் குறைகளை எடுத்துக்கூற எத்தனை சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன? என்றும் கண்டறியவேண்டும்.

12. தம் ரூபதையைச் சேர்ந்த ஒவ்வொரு பங்குகளிலுமுள்ள கத்தோலிக்கர்களும், வருஷத்தில் எவ்வளவு பணம் குருக்களிடம் கொடுக்கிறார்கள்? என்றும், ஒருவருஷத்தில் ரூபதை குருக்களிடம் கொடுக்கும் மொத்தப்பணம் எவ்வளவு? என்றும், ஏழைமக்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் பொதுப்பணத்தில், அவர்களின் கல்விக்காக எவ்வளவு செலவாக்கப்படுகிறது? என்றும், தேர், திருவிழா முதலிய வீண் ஆடம்பரங்களுக் கெவ்வளவு செலவாக்கப்படுகிறது? என்றும், அவர்களின் சுகாதார வசதிகளுக்கு எவ்வளவு செலவாக்கப்படுகிறது? என்றும், கோவில் தொழிலாளிகளுக்கும், குருக்களுக்கும், கோவில்கட்டுவதற்கும், கோவிலுக்கு வேண்டிய துணிமணி முதலிய சாமான்கள் வாங்குவதற்கும் எவ்வளவு செலவாக்கப்படுகிறதென்றும் அறிந்து கொள்ள வேண்டும்.

13. தம் ரூபதையிலுள்ள குருமார்களில் எத்தனைபேர் ஜனங்களை முன்னேற்ற உழைக்கிறார்கள்? என்றும், எத்தனைபேர் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்து தன்னலம் கருதாமல் உண்மைத் துறவியாய் வாழ்ந்து வருகிறார்கள்? என்றும், எத்தனைபேர் உண்டு, உடுத்து, உல்லாசமாய்த்திரிந்து, உலகத்தார் நகைக்க போலித்துறவியாய் வாழ்ந்து வருகிறார்கள்? என்றும், எத்தனைபேர் நம் கத்தோலிக்கர்களை அடிமைகளைப்போல் கருதி மரியாதைக்குறைவாய் நடத்தி வருகிறார்கள்? என்றும் கண்டறியவேண்டும்.

14. தம் ரூபதையிலுள்ள குருமார்களில், மத உண்மைகளைக்கற்றுத் தமிழில் நன்றாகப் பிரசங்கம் புரியவல்லவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? என்றும், நம்மக்களை நல்வழிப்படுத்தும் மார்க்கங்களை எளிதாய் எடுத்துக்காட்டிப் பிரசங்கம் புரியும் திறமவாய்ந்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? என்றும், மக்களின் மனதைப் புண்படுத்தும் கடுஞ்சொற்கள் நிறைந்த அறிவற்ற பிரசங்கங்களை தம்மனம் போனபடி செய்பவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? என்றும் நன்றாய் ஆராய்ந்தறிய வேண்டும்.

15 தம் ரூபதையில் 40 வயதிற்குமேற்பட்ட குருக்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? என்றும் 30 வயதிற்கு மேற்பட்ட குருக்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்? என்றும், 30 வயதிற்குக் கீழ்ப்பட்ட குருக்கள் எத்தனைபேருளர்? என்றும், 20 வயதுக்குட்பட்ட குருக்கள் எத்தனை பேருளர்? என்றும், அவர்களில் தம்பதவிக்குப் பொருத்தமாக வாழ்ந்து வருவோர் எத்தனை பேருளர்? என்றும் கவனித்தறிய வேண்டும்.

16. தம் ரூபதையிலுள்ள கோயில் தொழிலாளிகளில், நன்றாக எழுத வாசிக்கத்தெரிந்தவர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்? என்றும் மதநூல்களைக்கற்று, மதஒழுங்கின்படி நடந்து பிறருக்கு முன்மாதிரியாக வாழ்ந்து வருவோர் எத்தனை பேர் இருக்கிறார்கள்? என்றும், மத ஒழுங்குக்கு விரோதமாய் மதுபான மருந்தி, மதியீனராய் மற்றமதத்தார் இகழக்காலங் கழித்து வருபவர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்? என்றும், ஒழுங்கீனமாய் நடக்கும் கோயில் தொழிலாளிகளை, அவ்வேலையிலிருந்து நீக்கி நல்லொழுக்கமும் நல்லறிவும் பெற்ற வேறொருவரை ஏற்படுத்தும் வழக்கமுண்டா? என்றும், கோவில் பொருட்களனைத்தும் நன்றாகப்பாது காக்கப்பட்டு வருகின்றனவா? என்றும் கவனம் செலுத்தித் தெரிந்துகொள்ள வேண்டும். இன்னும் மக்களின் நலத்திற்கான யாவற்றையும் கவனித்தறிந்து கொள்ள வேண்டும். "மக்களை முன்னேற்றவே மதம் வந்தது" என்பதையும் மனத்திலிருத்த வேண்டும்.

கருத்தரியாமலிருக்க மாதர் உரிமை

ஒரு மாது குழந்தைகளைப் பெற மறுக்க உரிமை உண்டுஎன்பது அமெரிக்க நியூயார்க் அப்பீல் கோர்ட்டில் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இந்த வழக்கில் அமெரிக்காவிலுள்ள எல்லா மாதர்களும் கவனம் செலுத்தினர். மிஸஸ் மிரியன்கான் என்னும் மாது விவாகம் செய்து கொள்ளும் போது குழந்தைகளைப்பெறச் சம்மதிப்பதாகச் சொல்லிவிட்டுப் பின்னர் பெற மறுப்பதாகவும் ஆதலின் அவ்விவாகத்தை ரத்துசெய்துவிட வேண்டுமென்று அவர் கணவன் வழக்குத்தொடர்ந்தார். ஆனால் கீழ்க்கோர்ட்டில் மனைவியின் சார்பில் தீர்ப்புக் கிடைத்தது. அப்பீல் கோர்ட்டில் ஜட்ஜ்கள், தனக்குத் தேகத்தில் சக்தி இருக்கும் பட்சத்தில் கருதரித்துப் பிள்ளைகளைப் பெறுவதாக விவாகத்தின் முன் கூறியது ஒரு முக்கிய நிபந்தனையல்லவென்றும், இப்போது கருத்தரிக்க மோசடியல்லவென்றும் மறுப்பதுமுடிவுகூறினர். மிஸஸ்கான் தன் அறிக்கையில் தன் கணவனுக்கு இப்போது கிடைக்கும் சம்பளத்தில் தனக்குக் குழந்தைகள் பிறந்தால் அவற்றை விருத்திக்குக் கொண்டுவருவது சாத்தியமில்லை யென்ற காரணத்காலேயே தாம் கர்ப்பத்தடை செய்வதாகக் கூறினர்.

மாதரின் கர்ப்பதடையும் மறுமணமும்.

(பிறுங்கு பண்டிதை ஜானகி)

பெண்களுக்கு கற்பத்தடை அவசியம் என்பதைப் பற்றிய தொண்டை சுயமரியாதை இயக்கப்பெரியார் யேற்றுக்கொண்டதினால் எமது கருத்துகளுக்கெட்டியதை இவ்விடம் விவரித்தெழுத ஆசித்துள்ளோம்.

உலகில் எல்லா ஜீவஜந்துக்களுக்கும் பல இயற்கை இன்பங்களிருப்பதை யாவரும் அறிந்தவையாகும். அவ்வின்பங்களில் முக்கியமாக புணர்ச்சி இன்பம் ஒன்றாகும். ஆண், பெண்ணை ஆசிக்கவும், பெண், ஆணை ஆசிக்கவும் அமைந்திருப்பவை உலக இயற்கையமைப்பாகும். இவ்வியற்கையமைப்பு மிருகங்களுக்கும் அமைந்திருக்கின்றன. மிருகங்கள் பருவ வயதடைந்தபின் காலமறிந்து ஒன்றையொன்று அளாவ ஆசிக்கின்றன. விலங்குகள் கர்ப்பமேற்பட்ட நாளிலிருந்து குட்டிகளீன்று நல்ல இரத்தம் ஊறி கர்ப்பப்பை வன்மையடைந்தபின்னரே ஒன்றையொன்றுவிரும்பும். ஆனால் மனிதவகுப்பினர்களோ, காலமோ! வயதோ!! பருவமோ!!! கவனியாது ஒருவரையொருவர் பலவந்தப்படுத்தி வரைமுறையில்லாது தம் இச்சையை பூர்த்தியாக்கி கொள்ள முற்படுவதினால் 10, 12 வயதுடைய மதலைச்சிறுமிகளெல்லாம் கர்ப்பநோய்க்குள்ளாகி கையிலொரு பிள்ளையும், வயிற்றிலொரு பிள்ளையுமாய் வருடம் தவறாது பிள்ளைப்பெற துவங்குகின்றார்கள். இவர்கள் இவ்விதம் பிள்ளைப்பெற துவங்குவதால் வயிற்றிலிருக்கும் சிசு 10 மாதத்திற்குள் தாயின் இரத்தத்தை முக்கால் பங்கு உறிந்துவிடும். கையிலிருக்கும் குழந்தையோ! பாக்கியாயுள்ள இரத்தத்தை தாயின் மார்புவழியால் உறிந்துவிடும். இதனாலேயே நம்நாட்டு பெண்களின் உடல்நலம் குன்றி ஒட்டிய கன்னமும் உட்குவிந்த கண்ணுமாய் குறுகிய ஆயுளுக்குள்ளாகிறார்கள். குழந்தைபெற விவரமே தெரியாத சின்னஞ்சிறுமிகளெல்லாம் வரைமுறை இல்லா[illegible] பிள்ளைபெற துவங்குவதால் சிசு [illegible]ரணங்களும் அகாலமரணத்திற்குட்படு[illegible]தல்லாமலும் பலவீனமும் ஊக்கமில்[illegible]வாலமயும்தேரைக் குஞ்சுகள் போல் எ[illegible]ம்பும் தோலுமாயும் பிள்ளைகளைப்பெ[illegible]றுவறுமைப் [illegible]டு தவிக்கின்றார்கள். பிள்ளையை [illegible]ப்படி வளர்ப்பதென்பதே சிறிதும், ஆரா[illegible]ச்சியும் அறிவுமில்லா பெண்களெல்லாம் பிள்ளைப்பெறுவதினாலன்றோ நமது நாட்டை அன்னியநாட்டினர் எள்ளி நகையாட தலைப்பட்டார்கள். இவ்வனியாயத்தை சுட்டி காட்டி கேட்டால் நம்மவர்கள் கடவுள் கொடுத்த பிச்சை என்றும் கடவுளால் கொடுத்த பிள்ளை வரத்தை யாரால் தடுக்க முடியுமென்றும், கடவுள் பெயரில் பழி சுமத்துகின்றார்கள். பெண்கள் பிள்ளைபெறுவதற்கு ஆண்கள் சம்மந்தமா? அல்லது கடவுள் சம்மந்தமா? வென்பதை நாம் ஆராயவேண்டிய வேலையும் நேரிடுகின்றன.

மேல் நாட்டில் ஆண்கள் சம்மந்தமில்லாமல் பெண்கள் பிள்ளைபெற கருவிகண்டு பிடித்திருப்பதோடும் கடவுளால் கொடுத்த பிள்ளை வரம் என கூறும் வார்த்தை மனிதரால் அழிக்கப்படுவதோடும் தற்பொழுது மனிதனால் சேர்க்கை மனிதர்களை யுண்டாக்கவும் கண்டுபிடித்திருக்கின்றார்கள். நாம் இந்த இடத்தில் மனிதனைவிட கடவுள் பெரியவரா? அல்லது மனிதன் பெரியவனா? என்பதை யோசிக்கவேண்டும். ஆகவே மனிதவர்க்கத்தினர்களுக்கு இயற்கையினாலேற்படும் நோயின் துன்பங்களை மனிதனின் அறிவைக்கொண்டு எவ்விதம் அழிக்க முற்படுகின்றானோ, அவைபோல் பெண்களுக்கு இயற்கையினாலேற்படும் கர்ப்பநோயின் துன்பங்களை அழித்தே தீரவேண்டும். இக்கடமைகளை மேல் நாட்டார்கள் கண்டுபிடித்து ஒவ்வொருவர்களும் அனுசரித்து வருவதினால் அவர்கள் உயர்ந்த நிலைமையுடையவர்களாயும், பலசாலிகளாயும் பெரிய அறிவுடையோர்களாயும், வீரர்களாயும், தீரர்களாயும் வாழ்கின்றார்கள். உதாரணமாக மேல்நாட்டுப்பெண்களை எடுத்துக்கொள்வோம், அவர்கள் எல்லாத் துறைகளிலும், ஆண்களோடு சரிநிகர்வகித்து குத்துச்சண்டை. நீந்தல் பந்தயம், உதைபந்து விளையாட்டு, ஓட்டபந்தயம், குதிரைப் பந்தயம் போன்ற இன்னும் அனேக வகைகளில் ஆண்களோடு பெண்களீடுபட்டு வாழ்கின்றார்கள். சில சமயம் ஆண்கள் செய்ய இயலாத செய்கைகளை செய்து வெற்றிபெற்று பெரும் பெயரும் புகழுமடைந்திருக்கின்றார்கள். இன்னொரு உதாரணமாக இவ்வருடம் ஜனவரி மீ பிறுக்கில் பெண்களுக்கென ஓர் தனிப்பட்ட குதிரை பந்தயம் நேமித்தார். அப்பந்தயத்தில் (ஜாக்கி உடைதரித்து) ஆணுடை தரித்து 40, 45 வயதுடைய மேல் நாட்டு பெண்கள் கையில் சவுக்கு கொண்டு மிக கெம்பீரமாய் குதிரை ஏறி பந்தயம் விட்டார்கள். இவையைநாம் நேரில் கண்டவையாகும். இவையை நம் வைதீகர்களுக்கு உதாரணம் கூறினால் "என் முற்காலத்தில் நம் நாட்டுப் பெண்களெல்லாம் யானை ஏறவில்லையா? குதிரை ஏறவில்லையா? பாண்டிய அரசனின் குடலைப்பிடுங்கி மாலையாய்போட்ட வீரப்பெண்களில்லையா? என் கூறமுற்படுகிறார்கள். இவைகளைத்தவிர மேல் நாட்டு பெண்களின் சரீரக்கட்டு தளராமலும் லட்சணம் குறைவு படாமலும் ஆண்களைப்போல் பெண்கள் வீரமும், பலமும் பெற்றிருப்பதற்கு காரணம் அவர்களின் கர்ப்பத்தடையும் பிள்ளைகளுக்கு தாய்பால் கொடுக்காதிருப்பதேயாகும். இவைகளைப்பற்றி நம்மவர்களுக்கு எடுத்துரைத்தால் "ஆ! தாய் பால் கொடுக்காவிட்டால் பிள்ளைகள் உறம் பெற்று ஓங்கி வளராதெனவும் கூறுவதோடும் கர்ப்பத்தடை பெரும் பாவமென்றும், தோசமென்றும், நரகமென்றும், நரகத்திற்கு ஆளாகவேண்டுமென்றும், சொல்லத்தலைப்படுகின்றார்கள். இவர்கள் கூறுவதை ஓர்புறம் உண்மையாகவே வைத்துக்கொள்வோம். அப்படியானால் விதவைகளுக்கும், கணவன் ஊரில்லா சமயம் பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பத்தையும், அண்ணன், தம்பி, அக்காள், தங்கை, பெற்றோர்களெல்லாம் ஒன்றுகூடி நாட்டு மருத்துவச்சிகளை ரகசியமாய் அழைத்து எருக்கலையில் படர்ந்திருக்கும் சாம்பலைக்கொண்டும் பூறத்தைக்கொண்டும் கருப்பை துவாரதினுள் செலுத்துவதினால் உள்ளுருப்புகளெல்லாம் வெந்து அகால மரணத்திற்குள்ளாகிய பெண்கள் கணக்குண்டா? இவைகளெல்லாம் நரகமில்லையா? தோசமில்லையா? பாவமில்லையா? என்று கேட்பதோடும் தாய்பால் அருந்தாது வளர்த்தமேல் நாட்டார்களும் சீனர்களும் உறம் பெற்று வளரவில்லையா? வீரமில்லையா? பலமில்லையா? அல்லது அறிவில்லையா? வென்று வினவுகின்றோம். மேல் நாட்டு பெண்கள் மணம் முடித்து இரண்டொரு வருடம் கழித்த பின்பே பிள்ளைப்பெற விரும்புவார்கள். அதுவரையிலும் கர்ப்பத்தடை செய்து கொள்வார்கள். காரணம், கணவன் துஷ்டனோ அல்லது அதிகக் குடிகாரனோ அல்லது எவ்வகையிலாகிலும் கணவன் தம்மனதிற்கு பிடித்தமில்லாவிட்டால் உடனே கல்யாணரத்து செய்து விட்டு மறு மணம் செய்து கொள்வார்கள். கணவன் தம்மனதிற்குப்பிடித்த பின்பே பிள்ளைப்பெற பிரியப்படுவார்கள். அப்படிப்பிரியப்பட்டாலும் 2, 3 வருடத்திற்கொரு முறை பிள்ளைபெற விரும்புவார்கள். இவர்கள் ஆயுள் காலம் வரையிலும் 2, 3 அல்லது 4 பிள்ளைகளுக்குமேல் பெற பெரும்பாலும் விரும்பார்கள். இவர்கள் இவ்விதம் செய்து கொள்வதற்கு உதவியாய் இருப்பது ஒவ்வொருவர்களும் கர்ப்பத்தடை முறைகளை அறிந்தே இருப்பார்கள். ஆனால் நம் நாட்டு வைத்தியர்கள் ஓர் யூக முறைகளை கூறி இருக்கின்றார்கள். அதாவது பெண்கள் மாத விடாயி இரண்டு வாரங்களுக்குப்பிறகு கருப்பையின்வாய் துவாரம்சுரிங்கிவிடுவதினால் ஆண்பெண் இச்சைகளை நிறைவேற்றிக்கொள்வதினால்கர்ப்பநோய்க்குள்ளாகாரென கூறுகின்றார்கள். ஆனால் இவ்யோசனை வாய்ப்புக்கு பெரும்பால் மனித வர்க்கத்தினர்கள் கட்டுப்படாரென்பது எமது துணிவு. ஆகவே மேல் நாட்டாரின் கர்ப்பத்தடை பழக்கமே உசிதம் என்பது எமது கருத்து. பெண்களுக்கு மறுமணம் வேண்டிய அவசியமிருப்பதுபோலவே கர்ப்பத்தடையும் அவசியமாகும். மனபிடித்தமில்லா கணவன்களுக்கு பிள்ளை பிறக்குமாகில் தம் இயற்கை அழகையும் இழக்கநேரிடுவதால் மறுமணம் செய்து கொள்வதற்கு பெரும் தடைகளாக ஏற்படுகின்றது. ஆகவே பெண்களுக்கு கர்ப்பத்தடை தெரிந்து இருக்குமாகில் அவர்கள் பெரும் கொடுமைகளினின்று விடுபட்டதைபோலாகும். நமது நாட்டுப்பெண்கள் அகால மரணத்திற்குள்ளாகாமலும். சிரமப்படாமலும், நீடிய ஆயுளும், நல்ல பலமும், நல்ல அறிவும், வீரமும், தைரியமும், பிள்ளைகள் உறம் பெற்று ஓங்கி வளரவும் வேண்டுமென்ற நல்லெண்ணம் இருக்குமாகில் மேல் நாட்டுப்பெண்கள் கையாண்டு வரும் கர்ப்பத்தடையையும் தாய்பால் பிள்ளைகளுக்குக்கொடுத்துப்பழக்காதிருப்பதையும் அனுசரியுங்கள்.

குறிப்பு:—மேல் நாட்டு பெண்கள் அனுசரித்துவரும் கர்ப்பதடை முறைகளை அறிந்த கனவான்கள் யாரேனும் நம் "குடி அரசில்" எழுதிவருவார்களாகில் மக்களுக்கு நன்மை பயக்கும். நாம் அறிந்த சில முறைகளை மறுமுறை எழுத ஆசித்துள்ளோம்.

கதர்போர்டு நிவாணத்தது முடிந்தது.

உப்பு சத்தியாக்கிரகத்தின்போது வேதாரண்யத்திற்கு சென்று சிறைசென்ற திருப்பூர் உதவி ஸ்டேஷன் மாஸ்டர் வேலையிலிருந்த திரு. சிதம்பரய்யர் என்னும் பார்ப்பனர் இப்பொழுது திருப்பூர் அகிலபாரத சர்க்கா சங்கத்தைச் சேர்ந்த காதி வஸ்திராலயத்தில் ரூபாய் 50 சம்பளத்தில் காஷியர் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார். ஷையாரை வேதாரண்யத்திற்கு அனுப்பும் போது ஷையாரை உபசரித்து அனுப்புவதற்காக கூடிய கூட்டத்தில் திரு. N. S. வரதாச்சாரியார் திரு. சிதம்பரய்யரைப்பற்றி வானமளாவப் புகழ்ந்தது எல்லோருக்கும் தெரியும், "திரு. சிதம்பரய்யர் அவர்கள் ரயில்வே உத்தியோகத்தில் இருந்த போதிலும் ஒழிந்த நேரங்களில் கதர் வாங்கிக்கொ

கிரேக்ககவி ஹோமரும், கவிச்சக்கரவர்த்தி கம்பரும்.

(மயிலை. சீனி. வேங்கடசாமி)

கவிச்சக்கரவர்த்தி எனப்படும் கம்பர் இராமாயணத்தைத் தமிழில் பாடியவர். 'ஹோமர்' என்பவர் கிரேக்கபாஷையில் இலியம் (Iliad) என்னும் காவியத்தை இயற்றியவர். இந்த இலியகாவியம் மேல் நாடுகளில் ஆதிகாவியம் என்று கொண்டாடப்படுகிறது. இந்த இலிய காவியத்தைப் பார்த்துத் தான் இராமாயணத்தைப் பாடியிருக்கவேண்டும் என்று அறிவாளிகள் நினைக்கிறார்கள். ஏனென்றால் இலிய காவியத்தின் கதைப்போக்கும், இராமாயணத்தின் கதைப்போக்கும் முக்கிய அம்சங்களில் பொருந்தியிருக்கின்றன. அதாவது இலியகாவியத்தில் ஹெலனா என்பவளை பாரீசன் என்னும் அரசன் கவர்ந்து கொண்டு இலிய நாட்டில் கொண்டுபோய் விடுகிறான். கிரேக்க நாட்டரசர்கள் தங்கள் நாட்டிற்கு நேர்ந்த அவமானத்தைத் தீர்த்துக்கொள்ள அகமெம்னன் என்பவனைத் தலைவனாக்கிக்கொண்டு இலிய நாட்டில் படை எடுத்துச்சென்று 10 வருஷம் போராடிக் கடைசியில் அந்த நாட்டைத் தீயிட்டுக் கொளுத்தி ஹெலனாவை மீட்டுக்கொண்டு போகிறார்கள். இதைப்போலவே இராமாயணமும், சீதையை இராவணன் கவர்ந்து கொண்டுபோக இராமன் இலங்கைக்குச் சென்று தீ மூட்டி எரித்து சீதையை மீட்டு வருகிறான் என்று சொல்லுகிறது. ஆனால், இரண்டிக்கு முள்ள வித்தியாசம் என்னவென்றால், இலிய காவியத்தில் பகைவர் கட்சியை இழிவு படுத்திக் கூறாமல் தகுந்த மரியாதை கொடுத்து எழுதப்பட்டிருக்கிறது. இராமாயணத்திலோ பகைவர் கட்சியை மிக இழிவாகவும், கேவலமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும் இலிய காவியக்கதையையும் இராமாயணக்கதையையும் வாசித்தால் இலிய காவியத்தின் உயர்வும் இராமாயணத்தின் இழிவும் நன்கு விளங்கும். இராமாயணத்தைவிட இலிய காவியம் ஆயிரம் மடங்கு சிறப்புடையது என்று தைரியமாகச் சொல்லலாம். காவியங்களையும், கதைகளையும் இயற்றுவதற்கு கிரேக்கர்கள் மிகவும் சமர்த்தர்கள் என்பது உலகமறிந்த விஷயம்.

நிற்க நாம் இங்கு எழுதப்புகுந்த விஷயத்தைச் சொல்லுவோம். அதாவது கதாநாயகியை கம்பர் எவ்விதமாகப்புகழ்கிறார், ஹோமர் எவ்விதமாகப்புகழ்கிறார் என்பதே இங்கு கவனிக்கத்தக்கது.

கம்பர் கதாநாயகியாகிய சீதையைப் புகழும்போதெல்லாம் பாதாதி கேசம் அல்லது கேசாதி பாதம் வரையில் வர்ணிக்கிறார். அதாவது உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் ஒன்றையும் விடாமல் பாராட்டிப் புகழ்கிறார். அப்படிப்புகழும்போது சீதையம்மாளின் மறைத்து வைக்கவேண்டிய உறுப்புகளையும் வெளிப்படையாக அநேக உபமானங்களுடன் எடுத்துரைக்கிறார். கதாநாயகியாகிய சீதை இப்போது உயிருடன் இருந்து தன்னைப்பற்றி கம்பர் வர்ணித்திருப்பதைப்படித்துப்பார்ப்பாளானால் அவள் வெட்கித்தலை குனிவாள் என்பது திண்ணம். அன்றியும் கம்பர்மேல் மானநஷ்டத்திற்கும் கோர்ட்டில் வழக்குத் தொடர்வாள் என்பதும் திண்ணம். கம்பர்மேல் மட்டும் அல்லாமல் இராமாயணத்தை அச்சிட்டு வெளிப்படுத்துகிறவர்கள் மேலும் இராமாயணப்பிரசங்கம் செய்கிறவர்கள் மேலும் மானநஷ்ட வழக்கு கொண்டுவரப்படும் என்பதும் உண்மை. சீதை தன் மர்மஸ்தானங்களையும் கம்பர் பாடியிருப்பதையறிந்தால் இராவணனால் நேர்ந்த அவமானத்தைவிட கம்பரால் நேர்ந்த அவமானத்தையே பெரிதென்று எண்ணித் தற்கொலை செய்து கொண்டாலும் செய்து கொள்வாள். ஆனால் இராமாயணக் கதாநாயகியாகிய சீதை மறுபடியும் வரப்போகிறதில்லையாகையால் மானநஷ்டவழக்குக்கும் தற்கொலைக்கும் இடமில்லை. வால்மீகிமகாரிஷியோ கம்பரைவிட ஒருபடி அதிகமாகவே சீதையைப்புகழ்ந்திருக்கிறதாகச் சொல்லுகிறார்கள்.

இனி ஹோமர் தன் கதாநாயகியைப்பற்றி என்ன சொல்லுகிறார் என்பதைக் கவனிப்போம். கதாநாயகியாகிய ஹெலனா என்பவளின் உறுப்புகள் ஒன்றைப்பற்றியாவது இவர் வர்ணிக்கவில்லை. ஆனால் கதாநாயகி மிகுந்த கட்டழகு வாய்ந்தவள் என்பதை ஒரு வாக்கியத்தில் வெகுசாதுர்யமாகவும் நாகரீகமாகவும் சொல்லியிருக்கிறார். அது எப்படியென்றால் சொல்லுவோம்.

இலிய நாட்டில் போர் நடக்கிறது. கிரேக்க சேனைகளும் இலிய நாட்டுச் சேனைகளும் போர்க்களத்தில் போர் புரிய தயாராய் நிற்கிறார்கள். இந்தச் சண்டையைப்பார்ப்பதற்காக இலிய நாட்டு, கோட்டைச் சுவற்றின் மேல் பெண்மக்களும் சிறு குழந்தைகளும் உட்கார்ந்திருக்கிறார்கள். இன்னும் மிகுந்த வயோதிகர்களான கிழவர்களும் கோட்டைமதிலின் மேல் உட்கார்ந்து, "ஒரு பெண்ணுக்காக இரண்டு தேசங்கள் போர் செய்வது அறிவீனமாகும். ஒரு பெண்ணுக்காக எத்தனையோ பேர் சாகப் போகிறார்களே" என்று வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் கதாநாயகியாகிய ஹெலனா கோட்டை சுவற்றின் மேல் (போர் நிகழ்வதைப்பார்க்க) வருகிறாள் அவளைக்கண்ட அந்த வயோதிக கிழவர்கள் அவள் அழகைக்கண்டு பிரமித்து "இவ்வளவு அழகான பெண்ணுக்காக இரண்டு தேசத்தார் போர் புரிவது ஆச்சரியமல்ல" என்று சொல்லியதாக ஹோமர் மகாகவி பாடுகிறார். மிகுந்த வயோதிகர்களான கிழவர்களே கதாநாயகியின் அழகைக்கண்டு மெச்சினார்கள் என்று சொல்லியபடியால் கதாநாயகி மிகாற்ற அழகுள்ளவள் என்பது வெளிப்படையாயிற்று. இவ்விதம் கதாநாயகியின் அங்கங்களை வர்ணிக்காமலே அழகாகவும் நாகரீகமாகவும் கௌரவமாகவும் இக்கவிவாணர் புகழ்ந்து இருப்பது அவருடைய மனப்பான்மையை நன்கு விளக்குகிறது. மேல் நாட்டார் பெண்களை கௌரவமாகவும் மரியதையாகவும் நடத்துகிறபடியால் அதற்கிணங்க இவர் கதாநாயகியை மரியாதையாகப் புகழ்ந்திருக்கிறார் போலும்!

இக்கதாநாயகியாகிய ஹெலனா கம்பர் கையில் அகப்பட்டிருப்பாளானால் அவள் கதி என்னவாயிருக்கும்? சீதைக்கு நேர்ந்த அவமானம் ஹெலனாவுக்கும் நேரிட்டிருக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ? துரதிஷ்டமுள்ள சீதை ஹோமர் கவியிடம் அகப்படாமல் கம்பரிடம் அகப்பட்டு உலகம் உள்ளளவும் அவமானமடைந்துவிட்டாள். நல்லதிர்ஷ்டமுள்ள ஹெலனா கம்பரிடம் அகப்படாமல் ஹோமரிடம் அகப்பட்டு மரியாதையும் புகழும் அடைந்தாள்.

இச்சிறு வியாசத்தை இங்கு எழுத நேரிட்டதன் காரணம் என்னவென்றால் நமது நாட்டுப் புலவர்களில் பெரும்பான்மையோர் எல்லாத்துறைகளிலும் குறுகிய நோக்கமுடையவர்களாயிருப்பதால் அயல் நாட்டு நூல்களைப் படித்தறிந்து விசால புத்தியடைந்து தாய் நாட்டுக்குத் தொண்டு புரிய வேண்டும் என்பதே.

அறிவு என்பது ஒரு நாட்டுக்கு ஒரு தேசத்துக்குச் சொந்தமானதல்ல. வெவ்வேறு பாஷைகளிலும் வெவ்வேறு அருமையான நூல்களும் புத்தகங்களும் இருக்கின்றன. அவைகளையெல்லாம் கற்று அவற்றை நமது பாஷையில் மொழி பெயர்த்துக்கொடுத்தால் நமது நாட்டு ஜனங்கள் அவைகளைப் படித்து அறிவு விளங்கப் பெற்று முன்னேற்றமடைவார்கள். இதை விட்டு தற்காலத் தமிழ்ப் புலவர்களில் சிலர் "சுயமரியாதைக்காரர்களை வைவதும்" பழம்பாட்டிக் கதைகளைப் பேசுவதுமாயிருந்தால் அதனால் யாருக்கு என்ன பலன் கிடைக்கும்? பண்டிதன், வித்துவான் என்று பெயர் படைத்து விடுவதனால் பயனில்லை. பண்டிதர்களே! வித்துவான்களே! உங்கள் பண்டிதத்தன்மையினால் உலகத்துக்கு, மனிதசமூக முன்னேற்றத்திற்கு, தேசத்தின் முற்போக்குக்கு ஏதேனும் பயன் உண்டா என்பதை யோசித்துப்பாருங்கள். லத்தீன், கிரீக், பிரெஞ்சு, இங்கிலீஷ், ஜெர்மன் முதலிய அயல் நாட்டு பாஷைகளையும் கற்று அந்தந்த பாஷைகளிலுள்ள சிறந்த சாஸ்திரங்களையும் நூல்களையும் தமிழில் மொழி பெயர்த்துக் கொடுப்பீர்களானால் அதுவே நீங்கள் தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் தொண்டு செய்தவர்களாவீர்கள். நமது தமிழ் பாஷையை விட ஏனைய பாஷைகளிலும் அருமையான விஷயங்கள் இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டவே கம்பரையும் ஹோமரையும் இங்கு எடுத்துக் காட்டப் பட்டது.

ண்டு போவதும் கதர் விற்பனை செய்வதும் கதரின் மேல் அவருக்குள்ள பற்றுதலும் மிகவும் சிலாக்கிக்கத்தக்கது என்றார், "இப்படிப்பட்டவர்கள் தேசத்துக்கு பாடுபட வந்திருப்பது நம் பாக்கியமே" என்றும், பலவாறாக புகழ்ந்து பேசினார். அப்போதே கூட்டத்திலுள்ளவர்கள் உப்பு சத்தியாக்கிரகம் தீர்ந்து ஜெயிலிருந்து வெளிவந்ததும் திரு. சிதம்பரய்யருக்கும் சர்க்கா சங்கத்தில் ஒரு வேலை கிடைக்கும் என்றும் பல பேர் நினைத்துக்கொண்டிருந்தார்கள். அதுபோலவே நினைத்த காரியம் கைகூடி விட்டது. திரு. சிதம்பரய்யர் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். இன்றுவரை 100 க்கு 90 பார்ப்பனர்கள் சர்க்கா சங்க நிர்வாகத்தில் இருந்தும் ஒரு முஸ்லிமுக்காவது அதில் இடம் கிடையாது. சர்க்கா சங்கம் என்றால் பார்ப்பன அக்கிராரம் என்று திரு. ஈ. வெ: ராமசாமியார் பொருள் சொன்னது திரு. N. S. வரதாச்சாரியார் காலத்தில் தான் முற்றுப்பெற்றது.

சுமார் நாலு வருஷ காலமாக ஷை சர்க்கா சங்கத்தில் வேலை பார்த்து வந்த திரு. கண்ணாயிரம் பிள்ளையவர்கள் ஷை சர்க்கா சங்கத்திலிருந்து நீக்கப்பட்டு காரியதரிசிக்கும் அவருக்கும் கடிதப்போக்கு வரத்து நடந்து இப்போது உள்ளூர்பிரமுகர்களுடன் சமாதான பேச்சு நடந்து வருகிறது. முடிந்த விபரம் பின்னர் விபரமாக பிரசுரிக்கப்படும்.

ஒரு நிருபர்.

ஆதிதிராவிடர் மகாநாடு.

திருச்சினாப்பள்ளி ஜில்லா லால்குடி தாலூகா ஆதிதிராவிடர் முதலாவது மகாநாடு கல்லக்கம் கிராமத்தில் 30-5-31 சனிக்கிழமை திருச்சி ஜில்லா போர்டு தலைவர் உயர் திரு: டி. எம். நாராயணசாமிபிள்ளை எம். ஏ. பி. எல். எம். எல். சி. அவர்கள் தலைமையில் நடைபெறுமென மகாநாட்டின் காரியதரிசி எழுதுகிறார்:

அர்ச்சகர்-ஜோசியர் சம்பாஷணை.

(சித்திரபுத்திரன் எழுதுவது.)

அர்ச்சகர்:- என்ன ஜோசியரே கோவிலுக்கு முன்போல் ஆளுகள் வருவதே இல்லையே! குடும்ப நிர்வாகம் வெகு கஷ்டமாகவல்லவா இருக்கிறது.

ஜோசியர்:- என்ன காரணம்?

அர்ச்சகர்:- இந்த எழவு எடுத்த சுயமரியாதைதான்.

ஜோசியர்:- சுயமரியாதை காரணம் என்றால் சுயமரியாதைக்காரர்கள் சாமி இல்லை, பூதம் இல்லை என்று சொல்லி மக்களைக் கோவிலுக்குள் போகக்கூடாது என்று பிரசாரம் செய்கின்றார்களே அதனாலா?

அர்:- இல்லை—இல்லை அதற்கெல்லாம் நமக்கு பயமில்லை. இன்னமும் ஆயிரந்தடவை வேண்டுமானாலும் சாமியில்லை, பூதம் இல்லை என்று சொல்லட்டும்; கோவிலைவேண்டுமானாலும் இடிக்கவேண்டுமென்று சொல்லட்டும் அதனால் நமக்கு ஒன்றும் கெட்டுப் போகாது.

ஜோ-ர்:- மற்றென்ன காரணம் என்று சொல்லுகிறீர்கள்?

அர்:- கோவில்களுக்குத் தேவதாசிகள் வருகின்றதான முக்கிய கைங்கரியத்தைப் பற்றிகண்டபடிபேசி, அதை நிருத்திவிட்டார்களல்லவா அதனால்தான்.?

ஜோ-ர்:- இதற்கும் பக்திக்கும் சம்மந்தமென்ன? இதனால் எல்லாம் மக்களுக்குக் கடவுள் பக்தி குறைந்து விடுமா?

அர்:- கடவுள் பக்தி என்றால் என்ன என்கிறீர்? கடவுள்தான் எங்கும் நிரைந்தவராயிற்றே. இதற்காக ஒரு மனிதன் கோவிலுக்கு வர வேண்டுமா?

ஜோ-ர்:- மற்றெதற்காக வருகின்றார்கள்?

அர்:- இரண்டு காரியத்திற்காகத்தானே கோவிலுக்கு வருகின்றார்கள்.

1. தன்னை பக்திவான் என்று பிறர் மதிக்கவேண்டும்.

2. அங்குவரும் நல்ல பெண்களை ஆண்கள் பார்க்கவும், ஆண்களைப் பெண்கள் பார்க்கவுமான காரியங்களுக்கு என்றாலும், இரண்டாவது விஷயத்திற்குத்தான் அதிகம் பேர் வாலிபர்கள் சற்று ஷோக் பேர்வழிகள் சிறிது வயதானவர்களாயிருந்தாலும், சபலமுடையவர்கள் ஆகியவர்கள் வருவது. இப்படிப்பட்ட ஆண்கள் தாராளமாய் வராவிட்டால் குடும்பப் பெண்களும் வருவதில்லை, ஆக இப்படிப்பட்ட இரண்டு கூட்டம் வந்தால்தானே காணிக்கை, கட்டளை, இணைப்புத்தரகு ஆகியவைகள் கிடைக்கும். ஆகவே நமக்குக் கோவிலில் மணியடிப்பதில் என்ன பிரயோஜனம்? கோவில் சம்பளமாகிய மாதம் 1—12—0 ரூ. சம்பளமா நமக்குக் கட்டும்?

ஜோ-ர்.- அப்படியா சங்கதி. அவர்கள் இப்படிச் செய்தால் நமக்கு வேறு வழிகிடைக்காதோ?

அர்:- என்ன வழி?

ஜோ-ர்:- நம்ம ஆளுகளே ஒன்று சேர்ந்து நாம் ஆளுக்கு இரண்டு மூன்று வீதம் பெண்டாட்டிகள் கட்டி, நன்றாய் அலங்கரித்து, தினம் காலை, மாலையில் கோவிலுக்கு வரும்படி செய்தால் என்ன?

அர்:- அப்படிச் செய்வது சாத்தியமாகுமா? அவர்களுக்கு நகை, புடவை, மினுக்கு, கண்ட கண்ட இடங்களுக்கு எல்லாம் சென்று அறிமுகம் செய்து கொள்ளுவது முதலாகிய இதெல்லாம் செய்யவேண்டாமா? பிறகு நமது வீடுகளிலும் போதிய சௌகரியம், வீடு, வாசல், கட்டில், படுக்கை முதலிய சௌகரியம் ஆகியவைகள் வேண்டாமா இவற்றிற்கெல்லாம் பணத்திற்கு எங்கே போவது?

நாம் ஏதோ தாசிகள் செல்வாக்கினால் கோவிலுக்கு வருகின்றவர்களில் ஒன்று இரண்டு ஆள்களைப் பிடித்து சரி பண்ணி அதுவும் இரகசியம் என்றும், அவசரமென்றும் பயப்படுத்தி .0, 5 பெற்றுக்கொண்டுகஷ்டமில்லாமல், நஷ்டமில்லாமல் சம்பாதிப்பது நலமா? அப்படிக்கின்றி நம்மபெண்களையே தாசிபோல் நடக்க ஏற்பாடு செய்துகொள்ள முடியுமா?

ஜோ-ர்:- என்னமோ கஷ்டகாலம் உங்களுக்கு மாத்திரமல்ல நமக்கும் கூடத்தான் வந்துவிட்டது.

அர்:- உங்களுக்கு என்ன வந்தது?

ஜோ-ர்:- இப்போது எந்தத் 'தேவடியா' மகன் நம்மிடம் ஜோசியம் பார்க்க வருகிறான்? பிள்ளைக்கும், பெண்ணுக்கும் பொருத்தம் பார்க்கின்ற வேலையே மிகவும் குறைந்து போய்விட்டது.

அர்:- ஏன்?

ஜோ-ர்: ஏன் என்ன அததுகளே பெண்ணும்—மாப்பிள்ளையுமே பொருத்தம் பார்த்துக் கொள்ளுகின்றன.

அர்:- இருந்தாலும் கிரகதோஷம் பார்க்கவாவது வருவார்களே?

ஜோ-ர்:- அதாவது வந்தாலும் பரவாயில்லை. அதற்குத்தான் எங்கு வருகின்றார்கள். 'திருட்டுத் தேவடியா பிள்ளைகள்' காயலா வந்தால்—தலைவலி வந்தால் உடனே டாக்டர்கள் இடம் போய் விடுகின்றார்கள். நம்மிடம் வருவதே இல்லை. நம்மைக் கண்டால் சிரிக்கின்றார்கள். என்னடா என்று கேட்டால் சுயமரியாதையடா என்கின்றார்கள்.

அர்:- சரி, இவ்வளவு ஆனதற்கப்புரம் எனக்கு ஒன்று தோன்றுகின்றது.

ஜோ-ர்:- என்ன?

அர்:- நாமும் சுயமரியாதைப் பிரசாரம் செய்வதாகச் சொல்லி ஏமாற்றி மெள்ளமெள்ள உள்ளே இருந்தே அதை ஒழித்து விடுவது எப்படி என்றால் இப்பொழுது எத்தனையோ தமிழ் பண்டிதர்கள் அப்படித்தான் அதாவது "நானும் சுயமரியாதைக்காரன்" என்று சொல்லிக்கொண்டு அதற்குள் பிரவேசித்து அதை ஒழிக்கப்பார்க்கின்றார்களே அதுபோல.

ஜோ-ர்:- அது நல்லவழிதான். நம்முடைய பெரியவாள் பௌத்தர்கள் காலத்திலும் இப்படித்தான் செய்தார்கள். ஆனால், இந்த சு—ம. பயல்கள் (சுயமரியாதைக்காரர்கள்) இது தெரிந்துதான் பு—ம. பயல்களை (புராண மரியாதைக்காரர்களை) அதாவது பிராமணர்களைச் சேர்ப்பதில்லை என்று தீர்மானித்து விட்டார்களே.

அர்:- அதுவும் அப்படியா அப்படியானால் இந்தப்படி ஏழைகளை வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ளும் இந்த சு—ம காரன்கள் நாசமாய் நிர்மூலமாய்ப் போகட்டும், நாம்போய் இனி காங்கிரசில் சேர்ந்துகொள்ளுவோம்.

ஏன்?

கடவுளையும், மதத்தையும், சாஸ்திரத்தையும், காங்கிரசையும் காப்பாற்றும் கவலை பார்ப்பனர்களுக்கு மாத்திரம் ஏன் இருக்க வேண்டும்?

மோக்ஷமும் சுயராஜியமும் சம்பாதித்துக் கொடுக்க பார்ப்பனர்கள் மாத்திரம் ஏன் பாடுபட வேண்டும்?

வேதத்தைப்படிக்க பார்ப்பனர்களுக்கு மாத்திரம் உரிமை ஏன்?

இன்றைய காங்கிரஸ் பிரசாரத்தில் அனேகமாய் எல்லோரும் பார்ப்பனர்களாகவே இருப்பார்களேன்?

காங்கிரஸ் பிரசாரம் செய்யப் புரப்பட்டதாய் சொல்லும் பார்ப்பனர்கள் போகுமிடங்களில் எல்லாம் புராணப்பிரசாரங்கள் செய்வானேன்?

சுதேசமித்திரன் தலையங்கத்தில் கங்கா நதி தீர்த்தத்தின் பெருமையைப்பற்றி கங்கைப்புராணம் எழுதி அதை ஐரோப்பிய ரிஷி சொன்னதாகக் குறிப்பானேன்?

வித்தியாசம் தெரிகின்றதா?

ஒருகுடிகாரனுக்கும், குடியானவனுக்கும் அவனுடைய வாழ்க்கையின் பலன்கள் வித்தியாசமாய்க் காணப்படுகின்றன.

ஒரு விலைமாது, வேசி ஆகியவர்கள் சாவகாசம் வைத்து விவகாரம் செய்து கொண்டிருப்பவனுக்கும், அந்தப்படி செய்யாமல் இருப்பவனுக்கும் அவனவனது வாழ்க்கையில் வித்தியாசமான பலன்கள் காணப்படுகின்றன. இது போலவே மற்றும் கொலை, களவு, சூது ஆகிய காரியங்கள் செய்பவர்களுக்கும், செய்யாதவர்களுக்கும் அநேகமாய் வாழ்க்கையில் பலன்கள் மாறுதலாய்க் காணப்படுகின்றன.

ஆனால் கடவுள் உண்டு என்று நினைத்துக் கொண்டிருப்பவனுக்கும், இல்லையென்று நினைத்துக் கொண்டிருப்பவனுக்கும் அதாவது ஆஸ்திகனுக்கும், நாஸ்திகனுக்கும் அவனவனது வாழ்க்கைகளில் ஏதாவது வித்தியாசம் காணப்படுகின்றதா?

'நவசக்தி'

"காந்தியடிகள் முதலாளி சார்பினர் என்று தொழிலாளர் தலைவர்கள் சொல்லுகின்றார்கள்,

இந்தப்படி பய்பாயில்தான் பலமாகக் கிளர்ச்சி செய்யப்படுகின்றது". திரு. வி. க.

"வில்லியரஸ் என்பவர் திரு. காந்தி முதலாளிகள் வழி ஆடுகின்றார் என்று சொல்லி இருக்கிறார்" திரு. வி. க.

இரண்டு தமிழ் தினசரி பத்திரிகைகள்.

இவ்வாரம் "திராவிடன்" "இந்தியா" என்கின்றதான இரண்டு தமிழ் தினசரிப் பத்திரிகைகள் வெளிவந்திருக்கின்றன. இவற்றுள் முன்னையது முன்னாலேயே இருந்துவந்தது சிறிது காலம் நிறுத்தப்பட்டு, மறுபடியும் புத்துயிர்பெற்றுத் தோன்றியதாகும். பின்னையது புதிதாகவே தோன்றியதாகும்.

எப்படி இருந்த போதிலும் இவைகள் இரண்டும் சமய சமூக மத விஷயங்களுக்கு வக்காலத்து பேசும் வகையில் நமக்கு எச்சரிக்கை செய்து கொண்டே புறப்பட்டிருக்கின்றபடியால் நமது கொள்கைகளுக்கு இவைகளால் ஆதரவு எதிர் பார்ப்பதற்கில்லை என்றே கருதவேண்டியிருக்கின்றது.

ஏனெனில் நாமோ பல மதங்களையும் பல சமயப் பிரிவுகளையும், சமூகப் பிரிவுகளையும் ஒழித்து மக்கள் யாவரையும் ஒரே சமூகமாக்க வேண்டும் என்னும் கொள்கையின்மீது பல சமயக் கொள்கைகளையும், பல மதக் கொள்கைகளையும், பல சமூகக் கொள்கைகளையும் அவற்றுள் இருக்கும் உட்பிரிவுக் கொள்கைகளையும் அதனால் இருந்து வரும் வேற்றுமை, உயர்வு, தாழ்வு வித்தியாசத்தையும், தங்களுடைய சமூகமோ, சமயமோ மேலானது என்கின்ற எண்ணத்தையும் அடியோடு தொலைத்தாகவேண்டும் என்று முடிவு செய்து கொண்டிருப்பது யாவரும் அறிந்ததாகும். அதோடு மாத்திரமல்லாமல் "கடவுளுக்கும், ஆத்மாவுக்கும் சம்மந்தமுண்டாக்குவதே மதம்" என்றும், அல்லது "கடவுளுக்கும், ஆத்மாவுக்கும் உள்ள சம்மந்தத்தை உணரச் செய்வதே மதம்" என்றும் சொல்லும்படியான மதக்கொள்கையையும், சமயக் கொள்கையையும் கண்டித்து, அவைகள் முட்டாள்தனம் என்பதாக நிரூபித்து மக்களின் இவ்வுலக வாழ்க்கைக்கு மட்டும் ஏதாவது ஒரு மத(கொள்கை) இருப்பதானால் அதற்குத்தகுந்தபடி இருக்கட்டும், இல்லாவிட்டால் ஒழியட்டும் என்பதன் மூலம் மதங்களிடம் துவேஷிக்கின்றோம் என்னும் பெயர் பெற்று இருக்கின்றோம்:

அதுபோலவே சில சமூகத்தாரும், சில சமயத்தாரும் மக்களை ஏமாற்றி, தங்கள் சமூகமே மேலானதென்று வஞ்சித்து, ஆதிக்கம் பெற்று, அவ்வாதிக்கத்தை நிலைநிறுத்த "அரசியல்" என்றும், "தேசீயம்" என்றும், "காந்தியம்" என்றும், "சத்தியாக்கிரகம்" என்றும் பல சூழ்ச்சித் துறைகளை உண்டாக்கி, அதன் மூலம்மேலும்மேலும் மக்களை வஞ்சித்துவரும் அயோக்கிய சமூகசமயத்தை ஒழிக்கும் முறையிலும், அவர்களது தந்திரங்களை வெளியாக்கிக்கிளர்ச்சி செய்யும் முறையில் சில சமயக்காரருடனும், சில சமூகக்காரருடனும் சண்டை தொடுக்க வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம். இதனால் பல சண்டைகளை கிளப்ப வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம்.

இதனால் "தேசீய ஒற்றுமை" கெடுவது மாத்திரமல்லாமல் "தேசீய உணர்ச்சி" கூட ஒழிவதானாலும் நாம் லட்சியம் செய்யாதவர்களாகவும் இருக்கின்றோம். ஆதலால் மேல்கண்ட கொள்கைகளையுடைய நமக்கு மேல்கண்ட இரண்டு பத்திரிகைகளும் அனுகூலமில்லாததோடு எதிர்ப்பாக இருக்க நேரிடும் என்பதை அவைகள் தாராளமாய் வெளிப்படுத்தி இருக்கின்றன.

எப்படி எனில் ஒன்று. அதாவது "திராவிடன்" தனது முதல் இதழில் "சமயத் துவேஷம், சமூகத்துவேஷம், மதத்துவேஷம் முதலியன இல்லாமல் காக்கும்" என்று தன்னை விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

இரண்டு. "இந்தியா" தனது முதல் இதழில் சமய சமூகச்சண்டைகளை கிளப்பி தேசீய ஒற்றுமைக்கு இடர் செய்யும் இயக்கங்களை எப்பொழுதும் எதிர்த்துப் போராடும் என்று எழுதிக் கச்சைகட்டி நின்று கொண்டு இருக்கின்றது.

ஆகவே "இந்தியா" "திராவிடனை" விட ஒருபடி முன்னேறி இருக்கின்றதென்றே சொல்லுவோம். எனவே குடி அரசுக்கும், சுயமரியாதை இயக்கத்திற்கும் முன்னுள்ள எதிரிகளைவிட மற்றும் சற்று அதிகபலம் கொண்ட சரியான எதிரிகள் இருவர் தோன்றி இருக்கின்றார்கள் என்று தான் முடிவு கட்டிக் கொண்டு தயாராயிக்கவேண்டும்.

மற்றபடி காங்கிரசுக்கும் சமயத்திற்கும், மதத்திற்கும் (ஆதிக்கம் பெற்ற) சில சமூகங்களுக்கும், கூட்டத்தாருக்கும் ஆதரமான இரு நண்பர்கள் தோன்றி இருக்கின்றார்கள் என்றும் சொல்ல வேண்டும். அப்படி இருப்பினும் பொது மக்களுக்கு "உலக நட்பை உணர்த்துவது பத்திரிகைகளாகும்" என்னும் கருத்தின் மீது அப்பத்திரிகைகளையும் ஆதரித்து, அதன் உள் எண்ணமனப்பான்மையை உணர்ந்து கொள்ளுவதைக் கொண்டு தள்ளுவதைத் தள்ளும் உறுதியானமனதோடிடத்தில் ஆதரிக்க வேண்டுமாய் மறுபடியும் பொது மக்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்:

இப்பத்திரிகைகளின்பத்திராதிபர்கள் இருவரும் பார்ப்பனரல்லாதார்கள் என்பதோடு இருவரும் பத்திராதிபர்களாகவும் இருந்தவர்களாவார்கள். ஆதலால் அவர்களது கருத்தையும், திறத்தையும், நலனையும் மக்கள் ஏற்கனவே நன்றாய் உணர்ந்தவர்களாவார்களாதலால் அதைப்பற்றி அதிகம் எழுத வேண்டியதில்லை என்றே விட்டுவிடுகின்றோம்,

விலாசம்:—

"திராவிடன்"
14-மவுண்ரோட், சென்னை.

"இந்தியா"
11-ஜெனரல் பாட்டர்ஸ் ரோட், மவுண்ட் ரோட், சென்னை,

புருஷன் விபசாரம் செய்ய மனைவியின் அனுமதி.

பால்டிமோரிலுள்ள செயிண்ட் ஆக்னெஸ் ஆஸ்பத்திரியில் மோட்டார் விபத்தால் இறந்துபோன ஒரு மனிதனுடைய ஜேபியில் ஒரு விசித்திரமான பத்திரம் இருந்தது. அவனுடைய பெயர் ஜேம்ஸ் இ. ஹாஃட். அப்பத்திரம் அவனுடைய மனைவி ஸ்ரீமதி ஹாஃட் என்பவளால் அளிக்கப்பட்டது. அதில், "என்னுடைய புருஷன் இஷ்டமான இடங்களுக்குப் போகவும், இஷ்டமானபடி குடிக்கவும், இஷ்டமானபடி பரஸ்திரீகளோடு பழகிக்குலாவவும், இந்தப்பத்திரத்தால் அனுமதி கொடுக்கிறேன். ஏனெனில் அவர் பெருந்த ரசிகர். அவர் வெகு காலம் ஜீவிப்பாரென்று எனக்குத் தெரியும். ஆதலால், வாழ்க்கையில் சுகமாக்காலங்கழித்துச் சந்தோஷப்பட வேண்டுமென்று நான் விரும்புகிறேன்" என எழுதியிருந்தாள்

புருஷனைக்கொன்ற மனைவி பொறுமையால் வந்தவினை.

பிரான்சில் பியரிபெனட் என்ற பாங்கு குமஸ்தா ஒருவன் வெகுகாலம் தன் மனைவியோடு சுகமாக வசித்துவந்தான் ஒரு சமயம் அவன் ஒரு அழகிய யௌவன மாதைக்கண்டு அவளிடம் மோகங் கொண்டான். அதை அறிந்த அவனுடைய மனைவி மிகுந்த பொறுமை கொண்டாள். இருவருக்கும் சண்டையுண்டாயிற்று. தன்னுடைய மோகவாழ்க்கையில் தலையிட்டு, அதைக் கெடுக்கப் பிரயத்தனம் செய்தால் தன்னுடைய மனைவியையும், குழந்தையையும் வீட்டைவிட்டுத் துரத்திவிடுவதாக அவன் பயமுறுத்திப்பார்த்தான். ஒரு நாள் அவன் அவளை, கடைசியாக நெருங்கி கழுத்தை முறித்துக் கொல்லப்பார்த்தான். அப்போது அவள் சாமர்த்தியமாக ஒரு கைத்துப்பாக்கியை எட்டி எடுத்துக் கொண்டு அவனை 4 தரம் சுட்டாள் 2 காயங்கள் அபாயகரமானவைகளாகப்போகவே அவன் இறந்தான். ஆனால், மரணத்தருவாயில் தன்னை மன்னிக்கும்படியாக மனைவியைக் கேட்டுக்கொண்டான்.

கோயமுத்தூர் மின்சார சப்ளை சர்க்கார் அறிக்கை.

பைகாராவிலிருந்து கோயமுத்தூருக்கும், அதையடுத்த இடங்களுக்கும் மின்சார சப்ளை செய்வதைக்குறித்துத் தாங்கள் தீர்மானித்திருப்பதைப்பற்றி சர்க்கார் இன்று அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். முனிசிபல் எல்லைகளிலும், வெளிப்புறங்களிலும் அதிக டென்ஷன் சக்திமின்சாரம் சப்ளை செய்யப்படுமென்றும், குறைவு சக்தி மின்சாரம் சில நிபந்தனைகளின் பேரில் முனிசிபல் சங்கங்களுக்குச் சப்ளை செய்யப்படுமென்றும் தெரிவிக்கிறார். நிபந்தனைகள் என்னவென்றால் முனிசிபல் சங்கங்கள் கட்டிடங்களுக்கும், வேலைக்காரர்களமைப்பதற்கும் பணம் தரவேண்டும். சர்க்கார் கட்டிடங்களைக்கட்டி முடித்து லாபம் ஏற்படுகிற காலம் வரையும் அவைகளுக்காக விவகாரங்களைகவனித்து வருவார்கள். குறைந்த பக்ஷமாக 3 வருஷகாலம் ஏற்பட்டிருக்கிறது. முனிசிபல் சங்கங்கள் கோயமுத்தூர் ஜில்லா போர்டு சங்கத்தினிடமிருந்து கடன் வாங்கிக்கொள்ளும் என்று தெரிய வருகிறது.

(தமிழ்நாடு)

போய்க்கு முடிவுகாலம்,

உண்மையைக்கிரகிக்க மருந்து.

சிகாகோநகரத்திலுள்ளவடமேற்குசர்வகலாசாலை பண்டிதர்கள்

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

உபாத்தியாயர்கள்.

நமது நாட்டில் உள்ள தொழில் வகுப்புத்தொகுதிகளில் உபாத்தியாயர் வகுப்புத்தொகுதி என்பதே மிகவும்மோசமானதும், மூட்டாள் தனமானதுமான தொகுதி என்று சொல்லுவோம்.

அக்கூட்டத்தாரில் பெரிதும் அநேகருக்குச் சிறிதும் பகுத்தறிவு என்பதும், உலக கல்வி என்பதும் இடையாது என்பது நமது 40, 50 வருஷத்திய அனுபவமாகும். அதிலும் பார்ப்பன உபாத்தியாயர்களைப் போன்றதும் பண்டித உபாத்தியாயர்களைப்போன்றதுமான முட்டாள்தனமும் அசந்தர்ப்பகுணமும் அதிகப்பிரசங்கித்தனமும் மற்ற உபாத்தியாயர்களிடம்சற்று குறைவாகவாகஇருக்கலாம்.

பொதுவாகவே உபாத்தியாயர்கள் என்பவர்களுக்குப் பகுத்தறிவுஉதயத்திற்கு வழியில்லாமலே போய் விடுகின்றதான தன்மையே அவர்களது மூடத்தனத்திற்குக் காரணமாகும்.

முதலாவது உபாத்தியாயர் தொழில் என்பது இப்போது நமது நாட்டில் கிராமபோன் யந்திர வேலையாகவேதான் இருக்கின்றது.

என்னவெனில், ஏதோ ஒன்றைப் படிப்பது, அதை ஒப்புவிக்கும்முறையில் பரீட்சை கொடுப்பது, மறுபடியும் அதை பிள்ளைகளுக்கு கிராம்போன் மாதிரி போதிப்பது ஆகிய காரியங்களைத்தவிர வேறு பகுத்தறிவு பெற சிறிதும் நேரமும், அவசியமும், சௌகரியமும் இல்லாத வாழ்க்கையிலேயே இருந்து வருவதால் அவர்கள் மூடர்களாகவே இருக்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் அவர்கள் படிக்கும் புஸ்தகமும் சொந்தவாழ்க்கையும்பெரிதும்மூடநம்பிக்கையும் இயற்கைவிரோதமும் இழிதகைமையும் கொண்ட சமய சம்மந்தமான நூல்களும் கொள்கைகளுமாகவே ஏற்பட்டு விட்டால் இவர்களது அறிவுத்திறத்தை வர்ணிக்கவும் வேண்டுமா என்று கேட்கின்றோம்.

இந்த மாதிரியான மூடர்களிடமே மாணாக்கர்களாயிருந்து கல்வி பெறும் நமது மக்களுக்கு எவ்வளவு அறிவு இருக்கும் என்பதை நாம் விளக்கவேண்டியதில்லை.

இன்னும் நல்ல உதாரணம் வேண்டுமானால் வடமொழியிலும் தென்மொழியிலும் வல்லவர்கள் என்கின்ற சாஸ்திரிகள், வித்துவான்கள் ஆகியவர்களின் சொந்த பகுத்தறிவுகளை நிதானமாய் தனித்துத்தனித்து கவனித்துப் பார்த்தால் அதிலிருந்தே மற்ற படித்தவர்கள் யோக்கியதைகள் எல்லாம் கூட விளங்கும்.

இவற்றை உத்தேசித்துத்தான் பல சுயமரியாதை மகாநாடுகளில் உபாத்தியாயர்களை தற்காலம் தற்பித்து செய்யும் முறை தவறு என்றும், அவர்களுக்ப்பாடப்புத்தகமாகவைக்கும் புத்தகங்கள் இனன இன்னமாதிரி இருக்கவேண்டும் ன்றும், பல தீர்மானங்கள் செய்து வருகின்றோம். ஆனாலும் நாடு இன்னமும் பார்ப்பன ஆதிக்கத்திலேயேயும் வைதீக அழுக்கு மூட்டைகள் ஆதிக்கத்திலேயும் இருப்பதாலும் அரசியல் ஒழுக்க இயல், அறிவுஇயல் முதலியவைகளை சம்மந்தமான ஸ்தாபனங்கள் எல்லாம் சமய ஆதிக்கத்தினால் வாழும் பார்ப்பன ஆதிக்கத்தில் இருப்பதாலும் நமதுகருத்துக்களுக்கு ஒருசமயம் மதிப்பு ஏற்பட்டாலும் அவை நடைமுறைக்கு சாத்தியமில்லாமல் இருக்கின்றன. நிற்க,

இந்த சந்தர்ப்பத்தில் ஒரு உபாத்தியாயரின் யோக்கியதையைப்பற்றி சிறிது விளக்குவோம். அதாவது:-

நமது ஜில்லாவில் ஒரு கனவானிடம் ஒரு பார்ப்பன உபாத்தியாயர் ஒரு தக்க சிபார்சுடன் வந்து தனக்கு ஜீவனத்திற்கே மிகக்கஷ்டமாயிருப்பதாகவும், எப்படியாவது தனக்கு ஒரு உபாத்தியாயர் வேலை போட்டுத்தரவேண்டுமென்றும் கேட்டார் அக்கனவான் தன்னிடம் உபாத்தியாயர் உத்தியோகம் காலி யில்லையென்று சொல்லியும் பட்டினிக்கிடப்பதாக துக்கப்பட்டதனால் மனமிளகி, டெம்பரவரியாக, தற்கால சாந்தியாக ஒரு உத்தியோகத்தை காலியாக்கி பதிலியாகக் கொடுத்தார்-மற்றும் இந்தப்படியே அடிக்கடி காலிவேலைகளை பதிலியாகவே இவருக்குக்கொடுத்துக் கொண்டும் வந்தார்.

ஆகவே இந்த உபாத்தியாயருக்கு அப்பெரியார் தன்னுடைய ஜில்லா எல்லைக்குள் ஏற்படும் தற்கால காலி ஸ்தானங்களை எல்லாம்இவருக்கு அப்போதைக்கப்போது கொடுத்துக்கொண்டுவந்திருக்கிறார்,என்றாலும்டெம்பரரியாக நியமிக்கப்பட்ட இப்படிப்பட்டவருக்கு பள்ளிக்கூட வெயில் கால நீண்டவிடுமுறைச்சம்பளம் கொடுக்க சட்டப்படி நியாயம் கிடையாது என்பது யாவரும் அறிந்ததாகும்.

இப்படி இருக்க சென்ற வருஷம் ஒரு நாள் அதாவது வேலையில்லாத காலத்தில் உபாத்தியாயர் அப்பெரியார் வீட்டிற்கு வந்து தனக்கு சாப்பாட்டிற்கே வழி இல்லையென்றும் இரண்டு மூன்று நாள் பட்டினி கிடப்பதாகவும் சொன்னார்-இதை நம்பி அப்பெரியார் தனது சொந்தப்பணத்தில் இருந்து ஒரு ரூபாய் கையில் கொடுத்து அனுப்பினார். இதைப் பெற்றுக்கொண்டு ஊருக்குபோன உபாத்தியாயருக்கு பள்ளிக்கூடம் திறந்தஉடன் மறுபடியும் ஒரு காலி ஸ்தான பதிலி உத்தியோகம் கொடுத்தார்- இந்தப்படியாக இந்த உபாத்தியாயருக்கு அக்கனவான் அடிக்கடி வேலைகொடுத்து காப்பாற்றி வந்திருக்கின்றார். இப்படிப்பட்ட பெரியாருக்கு அந்த உபாத்தியாயர் எழுதி ரிஜிஸ்டர் செய்து அனுப்பி இருக்கும் கடிதத்தில் கண்டசில குறிப்புகளை குறிப்பிடுகின்றோம். அதாவது:-

ஐயா..

"நான் தங்களிடம் வேலைபெற்றதில் ஒருவருஷம்தான் கோடைகால லீவு சம்பளம் கிடைக்கப்பெற்று இருக்கிறேன். மற்ற வருஷ விடுமுறை காலங்களில் சம்பளமில்லாமல் தவித்து இருக்கிறேன்.......................... ஒரு பிராமணன் இவ்வாறு அலைக்கப்படுவது நியாயமா?

உங்களுக்கும் இந்தக்கதியை நான் விரும்பாவிட்டாலும் நீங்கள் இம்மாதிரி கஷ்டப்பட்டால் உங்கள் மனம் எப்படி இருக்கும்?

செல்வம் தங்கி இராது, அதிகாரம் நிலைக்காது........................தங்கள் ஆத்மா பாவத்தைச் செய்யலாகாது.

நான் சென்ற மேமாதத்தில் தங்கள் வீட்டில் பட்டினி விரதமிருந்த போது தாங்கள் ஒரு ரூபாய் கொடுத்தீர்கள். அந்த ஒரு ரூபாய்க்கு ஸ்டாம்பு இதில் அனுப்பி இருக்கிறேன்.

எங்கள்குடும்பம் வேதம்ஓதிய பெரியவாள் வம்சம்.

உங்கள் ஆத்துமா பரிசுத்தமடைய வேண்டுமானால் அந்த பக்தர்கள் நிறைந்த வம்சத்திற்கு தீங்கு செய்யலாகாது.

என்னைக் காப்பாற்றுவதன் மூலம் தங்களை காத்துக்கொள்ளுவீர்கள் என்று நம்புகின்றேன்.

வேதம் உண்மை-கடவுள் சத்தியம், காயத்திரி ஜபம் வீணாகாது, பதிவிரதைகள் வாக்கு பலியாமல் போகாது.

பிராமணர்களை சதா கஷ்டத்திற்கு உள்ளாக்கவேண்டாம்.

தாங்கள் அடைந்துள்ள பதவியில் மனமமதைக்கொண்டு......பதவி பூர்வ புண்ணியத்தால் உண்டானது.

அடுத்த ஜன்மத்திற்கு உங்கள் குலத்தின் க்ஷேமலாபத்தைத்தேடுங்கள்.

ஏழைகளுக்குச் செய்யும் தீமை தங்களுக்குசெய்து கொண்டதாகும்.

நான் அடையும் இன்ப துன்பம் பகவான் சத்திய ரூபிக்கு சாறும்"

என்பதாக எழுதியிருக்கிறார். இவர் ஒரு பார்ப்பனர் ராமச் சந்திரன் என்ற பெயர் கொண்டவர்.

இன்றைய உபாத்தியாயர்களில் 100-க்கு 90க்கு மேற்பட்டவர்களின் யோக்கியதையும் இப்படிப்பட்டதாகும் என்பதற்கு இன்னும் பல சான்றுகள் நம்மிடமிருக்கின்றன.

மற்றொரு சமயம் ஒரு ஹெட்மாஸ்டர் ஒரு பள்ளிக்கூட காரியதரிசிக்கு கடிதம் எழுதும்போது ஆனால் கையெழுத்தில்லாமல் மொட்டை கடிதமாய் எழுதப்பட்டது, அதாவது "ஐயா நீர் இப்போதுதான் சீமைக்கு அனுப்பி கல்வி கற்பித்த உம்முடைய மகனைத்தின்று இருக்கிறீர். இன்னும் ஒரே ஒரு பெண்தான் இருக்கிறது. எனக்கு துன்பம் செய்தால் பகவான் அந்த ஒரு பெண்ணையும் தின்ற விடும்படி செய்துவிடுவார்" என்று எழுதியிருந்தார்.

இதிலிருந்து இந்த உபாத்தியார்கள் வேதம் முதலியவற்றைப் போற்றுவதைப்பற்றியும் நன்றி விசுவாசம் முதலிய குணங்கள் இல்லாததைப்பற்றியும் நாம் குற்றம் சொல்ல வரவில்லை. ஆனால் இவர்கள் எவ்வளவு மூடர்கள், இவர்களது மூடநம்பிக்கை எவ்வளவு, இவர்களின் அற்பபுத்தியின் நிலைமை எவ்வளவு? இந்த மாதிரி தரமுள்ள மக்களை பிள்ளைகளுக்கு படிப்பு கற்றுக்கொடுக்கும்படி சொன்னால் அந்தப்பிள்ளைகள் உருப்படுவார்களா? அறிவு பெறுவார்களா? என்றுதான் கவலைப்படுகின்றோம். ஆகவே இன்று நம் நாட்டு மக்களில் படித்தவர்கள் என்பவர்களிலேயே 100க்கு 90 பேர்கள் பகுத்தறிவற்ற மூடர்களாய் இருப்பதற்கும் மூட பக்திகாரராய் இருப்பதற்கும் காரணம் எல்லாம் இந்தமாதிரி முழு மூடர்களான உபாத்தியாயர்களிடம் படிப்புப் பெறச்செய்திருக்கும் முறையேயாகும். இந்த நிலையில் இவர்களுக்கு இந்த உபாத்தியார்களுக்கு கொடுக்கப்படும் சம்பளமோ நினைத்தால் அளவுக்கு எத்தனையோ மடங்கு மீறியதாகும். சாதாரணமாக இன்றைய நிலையில் உபாத்தியார்களுக்கு மீ 20 ரூக்கு கம்மி இல்லாமலும் 50 ரூக்கு மேற்படாமலும் சம்பளம் கொடுத்தால் தாராளமான சம்பளமாகும். ஆனால் இன்றைய சம்பள திட்டம் ஏழைகள் படிக்கக் கூடாது என்றும், உடல்பிரயாசைப்பட்டு சம்பாதிக்கின்ற தொழிலாளி பிள்ளைகள் படிக்கக்கூடாது என்றும், ஆனால் ஊரை ஏமாற்றி சோம்பேரியாய் இருந்து அயோக்கியத்தனம் செய்து பாட்டாளிகளின் பலனைக் கொள்ளை அடிக்கும் அயோக்கிய வஞ்சகர்களின் சந்ததிகளே படிக்க வேண்டும் என்றும், அவனும் மூடனாகவும் அயோக்கியனாகவுமே இருந்து இந்த நிலைமையை வளர்க்கவேண்டும் என்றும அடிப்படையான தத்துவத்துடனேயே கல்வித்துறையை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றதென்றே கருதவேண்டியிருக்கின்றது. ஆகவே சம்பள விகிதத்தைப்பற்றியும், அதன் தகுதியைப்பற்றியும் பின்னால் எழுதுவோம். இப்போது அவர்களது தகுதியைபபற்றி குறிப்பிடவே இதை எழுதினோம். இந்தப்படி இன்னும் பல உதாரணங்கள் உண்டு.

கரூர் முனிசிபல் நிர்வாகம் அரசாங்கத்தாரின் பாராட்டுதல்.

"மிகவும் சாமார்த்தியகரமாகவும், விர்த்தியாகத் தக்க வழியிலும், ஸ்தல ஸ்தாபன ஆட்சியின் கருத்துக்கள் நிறைவேற்றும்படியான முறையில் வெற்றிகரமாகவும் கரூர் முனிசிபல் நிர்வாகம் நடத்திக் காண்பிக்கப்பட்டிருக்கின்றது" என்று சென்னை அரசாங்கத்தார்இந்தமாகாண ஜில்லா முனிசிபலிடிகள் சம்மந்தமாக எழுதி வெளியிட்ட 29—30 வருஷத்திய பொதுநிர்வாகக்குறிப்பில்குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

இந்த பாராட்டுதலைப் பார்த்து நாம் மிகுதியும் மகிழ்ச்சி அடைவதோடு கரூர் முனிசிபல் அக்கிராசனரையும், அங்கத்தினர்களையும் மனமாரப்பாராட்டுவதோடு கரூர் முனிசிபாலிட்டிக்கு இந்த மாதிரியான ஒரு நன்மையையும், கௌரவத்தையும், நற்சாக்ஷிப் பத்திரத்தையும் சம்பாதித்துக் கொடுக்கத்தக்க அங்கத்தினர்களையும், தலைவரையும் தெரிந்தெடுத்த கரூர் மகாஜனங்களையும் பாராட்டி போற்றுகின்றோம்.

குடி அரசு

ஈரோடு 1931௵ மே௴ 10௳

பிரிட்டிஷ் ஆக்ஷியின் இன்றைய தீமைகள்.

—:0:—

I.

நியாயம் வழங்கு முறை

சிவில் இலாகா.

பிரிட்டிஷார் ஆக்ஷியின் பயனாய் இந்திய மக்களுக்குள்ள கஷ்டங்களில் முக்கியமான கஷ்டங்கள் இரண்டு. அவை வரிக் கஷ்டமும் அல்ல, வியாபாரக் கஷ்டமும் அல்ல.

ஆனால் இந்திய அரசியல் பிழைப்புக்காரர்கள் பாமரமக்களை ஏமாற்றி தாங்கள் தான் இந்திய ஜனப்பிரதிநிதிகள் என்று காட்டிக்கொண்டு அரசாங்கத்தாரிடம் உத்தியோகம், பதவி, பட்டம் பெற வரியைப்பற்றியும், வெளிநாட்டு வியாபாரத்தைப்பற்றியும் கள்ளைப்பற்றியுமே எடுத்துச் சொல்லி மக்களை ஏமாற்றுவார்கள். அறிவோடு கூடி நடுநிலைமையில் இருந்து ஒரு மனிதன் யோசித்துப் பார்த்தானேயானால்இவைகள் யெல்லாவற்றையும் விட முக்கியமாய் இருக்கும் குறைகள் தானாகவே புலப்படும். அதாவது வக்கீல் தன்மைகளும் உத்தியோக தன்மைகளுமேயாகும். இவ்விரண்டும் இந்தநாட்டில் பிரபுத்தன்மையைக் காப்பாற்ற இருக்கின்றதே ஒழிய நியாயத்தைச்செய்யவோ ஏழைகளைக் காப்பாற்றவோ இல்லவேயில்லை. அரசியல் துறையில் சம்மந்தப்பட்டதான வக்கீல் முறையும் உத்தியோக முறையும் இந்தியாவில் இந்த மாதிரி இல்லாதிருந்திருக்குமானால் இந்த நாட்டில் இவ்வளவு ஒழுக்கக்குறைவும் நாணயக்குறைவும் தரித்திரமும் மக்களுக்கு கஷ்டமும் அலைச்சலும் இருக்க முடியவே முடியாது என்பதோடு இவ்வளவு தூரம் வித்தியாசப்படும்படியான ஏழைத்தன்மையும் பணக்காரத் தன்மையும்கூட இருக்கமுடியாது என்று உறுதியாச் சொல்லுவோம்.

ஏழைகளையும் மத்திய தரத்தாரையும் இந்த நாட்டில் தலையெடுக்க வொட்டாமல் செய்து வருவது இந்த வக்கீல் முறையும் உத்தியோக முறையுமே தவிர வேறு ஒன்றுமேயில்லை.

ஏனெனில் சாதாரண மக்களுக்கு நீதி கிடைப்பதில்லை என்பதோடு பணக்காரனாயிருப்பவன் தனது பணத்தின் மகிமையினால் 100க்கு 90 விஷயங்களில் தன் இஷ்டப்படியே நியாயம் பெறுகின்றான். நியாயாதிபதிகள் என்பவர்களும், வக்கீல்களும் ஏழை மக்கள் நீதி பெறுவதற்கு இடையூறாகவும், பணக்காரர்கள் தங்கள் இஷ்டப்படி நீதி பெறுவதற்கு அனுகூலமாகவுமே இருக்கின்றார்கள்.

இன்றைய வக்கீல் முறையே மனித சமூகத்தின் ஒழுக்கத்திற்கும், நாணயத்திற்கும், சாந்திக்கும், ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் நேர்விரோதமானதாகும். அதுமாத்திரமல்லாமல்தேசத்தின் ஒழுக்கமும்,நாணயமும், சுயமரியாதையும் கெட்டுப் போனதற்கு வக்கீல்களே காரணஸ்தர்கள் என்று சொல்லுவது சிறிதும் மிகைபடக் கூறுவதாகாது என்பதே நமதபிப்பிராயம்.

நமது நாட்டுப் பணக்காரர்களில் அநேகருக்கு அயோக்கியத்தனமும், ஆணவமும், நாணயக் குறைவும் ஏற்படவும், அவர்கள் நாட்டின் நலனுக்கு பொருப்பற்ற தன்மையாய் நடந்து கொள்ளவும் காரணமே நமது வக்கீல்களாவார்கள்.

இந்த நாட்டு விவசாயக்காரர்கள் பெரிதும் கடன்காரர்களாக இருக்கவேண்டி ஏற்பட்டதற்கு காரணமும் இந்த நமது வக்கீல்களே யாவார்கள்.

மக்களுக்கு விவகாரத்தில் அதிக நம்பிக்கையும், ஆசையும் ஏற்படுவதற்கு காரணமும் வக்கீல்கள் தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அன்றியும், நாளுக்கு நாள் வழக்குகள் அதிகரித்துக்கொண்டு போவதற்கும், நியாயஸ்தலங்கள் அதிகமாவதற்கும், வக்கீல்கள் தான் காரணஸ்தர்களாவார்கள். இன்னும் உண்மையை ஒளிக்காமல் தெளிவாய்ச் சொல்லவேண்டுமானால் மக்கள் அயோக்கியர்களாவதற்கும், நாணயக்குறைவாயிருப்பதற்கும்கூட நமது வக்கீல்களே பெரிய பொறுப்பாளிகளாவார்கள்.

இதற்கு காரணம் பிரிட்டிஷ் அரசாங்கமா? இந்திய மக்களா? என்று பார்ப்போமேயானால் பிரிட்டிஷ் அரசாங்கத்தைவிட இந்திய மக்களே மிக அதிகமான பொருப்பாளியாவார்கள்.

ஏனெனில். பிரிட்டிஷ் இந்திய ஆட்சியில் இந்திய மக்களுக்கு சம்மந்தமும், பங்கும் இருக்க வேண்டும் என்று கேட்க ஆரம்பித்த காலத்திலேயே இந்த வக்கீல் கூட்டங்களேதான் இந்திய மக்களின் பிரதிநிதிகளாயிருந்து வக்கீல் தொழில் விர்த்தியாகி வக்கீல்கள் தாராளமாய் பிழைப்பதற்கு ஏற்றதான திட்டங்களையே இந்திய சுதந்திரத்திற்கும், அரசாட்சியில் பங்கும், சம்மந்தம் பெறுவதற்கும் அனுகூலமான கொள்கை என்று பாமர மக்களுக்குச் சொல்லி நம்பச்செய்து, ஏமாற்றி அரசாங்கத்தாரையும் ஒப்பச்செய்து அரசாங்க சீர்திருத்த மூலமாகவும் சட்ட மூலமாகவும் அவைகளைப் பெற்றுக்கொண்டு, தங்கள் தொழிலில் மிக்க தாராளமாகவும், தைரியமாகவும், அயோக்கியத்தனங்களையும் நாணயககுறைவுகளையும் உபயோகித்து வந்து, நாளுக்கு நாள் அது முதிர்ந்து, இன்று நாட்டிற்கும் சமூகத்திற்கும் இந்தநிலை ஏற்பட்டு விட்டது.

இந்தமாதிரி வக்கீல் ஆதிக்கமானது இன்றைக்கும் நமது பாமர மக்களுக்குயோக்கியமாகவும், நாணயமாகவும் இருக்க முடியாத வக்கீல்களின் பிரதிநிதித்துவம் தான் பிடிக்கச்செய்கின்றதேஒழிய, உண்மையான பிரதிநிதித்துவம்ஏற்படுத்திக்கொள்ள யோக்கியதை இல்லாமல் செய்துவிட்டது.

ஆகவே இதன் பயனாய் வெள்ளைக்கார வக்கீல்களிடமும் வெள்ளைக்கார அதிகாரிகளிடமும் காணமுடியாத அநேக ஒழுக்கக்குறைவுகளும், நாணயக்குறைவுகளும்,நடுநிலையற்ற தன்மையும் நம்மவக்கீல்கள் இடமும், நம்ம உத்தியோகஸ்தர்கள் இடமும் தாராளமாய் இருந்துவருகின்றன. அதுமாத்திரமல்லாமல் ஒழுக்கமும், நாணயமும் உள்ளவர்கள் வக்கீலுக்கும், உத்தியோகத்திற்கும் அருகதையற்றவர்களாகியும்விட்டார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் சிவில் இலாகா என்று சொல்லப்படும் அதாவது சொத்துக்களின் உரிமைகளைப் பொறுத்த விவகார இலாகாக்களை எடுத்துக்கொண்டால் கீழே இருந்து அதாவது ஒரு சம்மன் சார்வுசெய்யும் சேவகன் முதல் குமாஸ்தா இலாகா உள்பட உள்ள சிப்பந்திகள் வரை உள்பட அவர்களது ஒழுக்கமும், நாணயமும், யோக்கியப்பொறுப்பும் மிக மிக மோசமானதாகவே நடைபெற்றுவர வெகுகாலமாய் அனுமதிக்கப்பட்டிருக்கின்றதென்றே சொல்லவேண்டும். இவ்விலாகாவில் லஞ்சமும், மாமூலும், மோசமும் ஹைகோர்ட் ஜட்ஜிகள், இலாகா தலைவர்கள் என்பவர்கள் ஆகிய எல்லோருக்குமே தாராளமாய் தெரிந்து வேண்டுமென்றே அனுமதித்துக்கொண்டு இருக்கும் அளவை மனிதனால் சொல்லத்தரமுடையவைகள் அல்ல என்றே சொல்லுவோம். வக்கீல்கள் தொல்லைகளும்,நீதிபதிகள் தொல்லைகளும் ஒருபாகம் என்றால் மேல்கண்ட சிப்பந்திகள், நடுத்தர உத்தியோகஸ்தர்கள் ஆகியவர்களின் தொல்லைகள்சகிக்கமுடியாதவையாகும். இந்தத்துறைகளில் சீர்திருத்தமோ ஒழுங்கோ செய்ய இன்றையதினம் இந்தநாட்டில் ஒரு அரசியல் வாதியாவது ஒரு தேசியவாதியாவது கிடையவே கிடையாது. இதனால் வலுத்தவன் இளைத்தவனை நேருக்கு நேராய் உதைத்துத் தொல்லைப்படுத்தி அவனிடம் உள்ளதை கையைத்திமிரிப் பிடுங்கிக் கொள்ளுவதைவிட கோர்ட்டு மூலமும், வக்கீல்கள் மூலமும் பிடுங்கிக்கொள்வதோ தொல்லைப்படுத்தி அவனை ஒழிப்பதோ மிகவும் சுலபமானதும் சட்டபூர்வமானதுமான காரியமாகவே இருந்து வருகின்றது.

ஆகவே இந்தமுறையானது பணக்காரர்களுக்கு மிகவும் அனுகூலமாகப் போய்விட்டதால் அவர்களும் அதாவது நம்நாட்டுப் பணக்காரர்களும் சந்தோஷமாகத்தங்கள் முழுபலத்தோடு இதை ஆதரிக்க வேண்டியவர்களாகி விட்டார்கள்.

எனவே இந்தமாதிரியான நடுநிலைமை யற்ற அதிகாரிகளும் நாணயமும்.ஒழுக்கமும், யோக்கியப்பொறுப்புமற்ற வக்கீல்களும் நியாயஇலாகா சிப்பந்திகளும் தாங்கள் இந்த காரியங்கள் செய்தவற்காக அடையும் ஊதியத்தை, வரும்படியைப்பார்த்தால் உலகத்தில் எந்த யோக்கியமான, நாணயமான மனிதனும் தொழிலாளியும் அடையும் ஊதியத்தைவிட எத்தனையோ மடங்கு அதிகமாகவே பெறுகின்றார்கள். ஒரு முனிசீப்பு என்பவர் 300 ரூபாயில் ஆரம்பமாகி மேல்கண்ட அக்கிரமங்களைச் செய்வதன் மூலம் படிப்படியாக மாதம் 4500 ரூபாய் வரை பெரும்ஹைகோர்ட் ஜட்ஜ்வரையில் உயர்த்தப்படுகிறார், ஒரு வக்கீல் மா-

தம் 100 ரூ. முதல் அக்கிரமும், அயோக்கியத்தனமும், நாணயக் குறைவும், பித்தலாட்டமும் செய்யும்அளவுக்குத் தக்கபடிபடிப்படியாய்கெட்டிக்காரனுகிமாதம்10 ஆயிரம், 20ஆயிரம் 50ஆயிரம்ரூ. வரை பெறும்படியான யோக்கியதையுடையவனுகிருன்.

உலகத்தார் எல்லோராலுமே ஒழுக்கமற்றதென்றும், நாணயமற்றதென்றும் வெளிப்படையாய் தெரியும்படியாக நடந்துகொள்ளும் ஈனத்தன்மையுடைய ஒரு தொழிலில்சட்டப்பூர்வமாகவே இந்தப்படி கொள்ளை அடிக்க இடமிருந்தால்,இந்த அரசாங்கத்தின் வேறு எந்தவரியை-யார் செய்யும் காரியத்தை நாம் அக்கிரமம் என்று சொல்லுவது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்தத்தொழில்களில் இவ்வளவு அக்கிரமம் செய்வதற்கு இவர்களுக்கு எப்படி வழிகிடைத்தது என்று பார்ப்போமானுல்,

1. வக்கீல்களும், நியாயாதிபதிகளும் ஒரேகூட்டத்தினராயிருப்பது. அதாவது வக்கீலே நியாயாதிபதி ஆவதும்,நியாயாதிபதி வக்கீலாவதுமான முறை இருப்பது முதல்- குற்றமாகும்.

2. சட்டமானது ஒரு வர்ஜா வர்ஜநமில்லாமல் பத்ததி நிர்ணயம் ஆகியவை இல்லாமல் ஒவ்வொரு மனிதனுடைய இஷ்டமும் ஒரு சட்டமாவதும், ஒருவனுடைய இஷ்டத்தை மற்றொருவன் இஷ்டப்பட்டால் பின்பற்றலாம், இல்லாவிட்டால் பின்பற்ற வேண்டியதில்லை என்பதும், மற்றும் தனக்கு இஷ்டமானவர்கள் அபிப்பிராயத்தை பின்பற்றலாம் என்பதும், அவற்றை யெல்லாம் விட்டுவிட்டு தன் இஷ்டப்படி நடக்கலாம் என்று இருப்பதுமான லா ரிப்போர்ட்டுகளை அதாவது வேறுபல ஜட்ஜுகளின் அபிப்பிராயங்களை சட்டமாக ஏற்றுக்கொள்ள வசதி இருக்கும் முறைகளே சட்ட உலகத்தில் நீதி உலகத்தில் இவ்வளவு ஒழுக்க ஈனங்களை கற்பித்து நீதிபதிகளையும், வக்கீல்களையும் இவ்வளவு ரூபாய்கள் கொள்ளை அடிக்க வசதி செய்து கொடுத்து வருகின்றது.

நியாயஉலகம் சீர்படவேண்டுமானுல் அதில் ஒழுக்கத்திற்கும், கிரமத்திற்கும் சிறிதாவது இடமிருக்க வேண்டுமானுல் முக்கியமாக மேல்கண்ட இரண்டு முறைகளையும் ஒழித்துவிட வேண்டும்.

மேலும், வக்கீல்கள் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுவதையும், கணக்குவழக்கில்லாமல் வக்கீல்களை தொழில் நடத்த அனுமதி கொடுக்கப்படுவதையும் நிறுத்திவிட வேண்டும்,

இந்தக்காரியங்கள், அதாவது இந்தமாதிரி வக்கீல்கள் பெருகுவதான காரியங்கள், இந்த நாட்டின் நியாயத்தையும் ஒழுக்கத்தையும் சாந்தியையும் கெடுப்பதற்கு ஏற்பட்ட விஷக்கிருமிகளை வளர்ப்பதற்கே ஒப்பாகும்.

இனி விவகார முறையில் இருக்கும் அக்கிரமங்கள் இந்த ஒரே வியாசத்தில் சொல்லக்கூடியதல்ல. உதாரணமாக ஒருவிவகாரம் தொடுத்து 20 வருஷத்திற்கு மேலாகியும் இன்னமும் முடிவுபெருத விவகாரங்கள் பல இருக்கின்றதென்ருல் விவகார முறையின் யோககியதையைச் சொல்லவேண்டுமா என்று கேட்கின்ருேம்.

ஆகவே அவற்றைப்பற்றி மற்றொரு சமயம் எழுதுவோம்.

கதரும்-ஹிந்தியும்.

இந்திய நாட்டின் சுயராஜ்யத்திற்குகதரும்,ஹிந்தியுமே முக்கியமான மந்திரங்களாகப் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றன. சென்ற ஒத்துழையாமையின் போது கதர் கட்டாதவர்களுக்கு ஓட்டு இல்லாமல் இருந்தது. இப்போது மில் முதலாளிகளின் தாக்ஷண்யத்திற்குக் கட்டுப்பட்டு அந்நிபந்தனை கைவிடப்பட்டு விட்டாலும், இப்போது வேறு ஒன்று அதாவது ஹிந்தி படிக்காதவர்களுக்கு பிரதிநிதித்துவமே இல்லை என்கின்ற கட்டளை ஏற்பட்டு அதனுல் தென்னுட்டாருக்குப் பிரதிநிதித்துவம் கூட இல்லாமல் செய்தாய் விட்டதாக சொல்லப்பட்டாய் விட்டது. கதரைப்போன்ற ஒரு மோசடியான வியாபாரம் வேறு எதுவுமே இல்லை என்றே சொல்லவேண்டும்.

சாதாரணமாக வியாபாரத்தில் அதிக மோசடி செய்கின்றவர்கள் மருந்து வியாபாரிகளேயாவார்கள். கதரைப்பார்த்த பின்பு (பேடண்ட் மெடிஷன் என்று) உரிமை செய்துகொண்ட மருந்து வியாபாரிகள் மோசடி எத்தனையோபங்கு நல்லதென்பதோடு அவைகளில் அநேகம் சில சமயங்களில்நல்ல பலனையும் கொடுத்துவருகின்றது.

ஆனுல் இந்தக் கதர். ஆரம்பம் முதல் அந்தம் வரை ஏமாற்றமானதாகவே முடிவு பெறுகின்றது. திரு. காந்தியவர்கள் மில்லுகளை ஒப்புக்கொண்டாய் விட்டது. மில்துணிகளை கட்டவேண்டியது அவசியம் என்றும் தீர்மானித்தாய் விட்டது. இப்படி இருக்க இனி கதர் எதற்கு என்பது நமக்கு விளங்கவில்லை. அதுவும் மனதார மோசடியாக ஏன் நடைபெறவேண்டும் என்பதும் நமக்கு விளங்கவில்லை.

சாதாரணமாக, பஞ்சு பாரம் ஒன்றுக்கு 360 ரூபாய் விலையிருக்கும் போது கதர் விற்று வந்த விலையையே இன்றும் அதாவது பஞ்சு பாரம் ஒன்றுக்கு 125 ரூபாய் விலையிருக்கும்படியான காலத்திலும் விற்க அனுமதி கொடுத்திருப்பதானது எவ்வளவு அக்கிரமமானது என்பதை வாசகர்கள்தான் உணரவேண்டும். பாரத்துக்கு 100 ரூபாய் இரங்கினுல் கதருக்கு ஒரு கெஜத்திற்கு ஒரு அணு குறைத்ததாக பெயர் செய்கின்ருர்கள்.

சாதாரணமாக இன்றைய விலைக்கு பஞ்சு ராத்தல் 1க்கு 0-4-0 அணுவே ஆகின்றது. மில்லில் நூற்ருல் ராத்தலுக்கு இரண்டணுக் கூலியானுல் கையில் நூற்பதால் ராத்தலுக்கு ஐந்தணு கூலி ஆகின்றதானுலும் அதையும்சேர்த்தே ஒரு ராத்தல் நூலுக்குசேதாரம் உள்பட 0-9-6 அணு விலையேயாகின்றது. 10 அணு வென்றே வைத்துக்கொள்ளுவோம். 54 இஞ்சு அகல முள்ள 10 கெஜம் துணிக்கு 4 ராத்தல் இடை நூல் செல்லும் இதற்கு நெசவு கூலி 10 கெஜத்திற்கு இப்போதும் ரூ. 1—14—0 கொடுப்பதாகவேவைத்துக்கொண்டுபார்த்தாலும்பீசுஒன்றுக்கு ரூ 4-6-0 ஆகின்றது. அதாவது, கெஜம் 1க்கு 7 அணு ஆகும். இந்த விலைப்படி பார்த்தாலும் மில் துணிக்கும் கதருக்கும் 100க்கு 100 பங்கு அதாவது ஒன்றுக்கு இரண்டாகவே கெஜம் 0-3-6 அணுவுக்கு 7 அணு கொடுகக வேண்டியதாகின்றது.

ஆனுல் இப்போது காங்கிரசால் நற்சாட்சிப் பத்திரமும் அனுமதிச்சீட்டும் பெற்ற கதர் கடைகளில் 10 கெஜம் பீசு 1க்கு ரூ. 6-4-0க்கு விற்கப்படுகின்றது. அதாவது கெஜம் ஒன்றுக்கு 10 அணு வீதம் விற்பதில் அதில் 100க்கு 30 வீதம் அதிகமாக விலை கொடுக்கவேண்டியதாயிருக்கின்றது. காங்கிரஸ் சின்னத்திற்காக, அர்த்தமில்லாத சுயராஜ்யத்திற்காக ஒன்றுக்குமூன்ருக பணம் அதிக செலவு செய்வதின் மூலம் இன்று கதர் வியாபாரிகள் கொள்ளை அடிக்கின்ருர்கள் என்பதைத்தவிர நாட்டிற்கு விளைந்த நண்மை என்ன என்பது விளங்கவில்லை.

இது ஒருபுறமிருக்க திருப்பூரிலுள்ள கதர் வியாபாரிகள் எல்லாம் இந்த பத்து வருஷ காலத்தில் தங்களின் செல்வ நிலைமை எவ்வளவோ பெருக்கிக்கொண்டு வெறும் ஆட்கள் எல்லாம் இப்போது கையில் 10 ஆயிரம்முதல் 40, 50 ஆயிரம் ரூபாய் வரையில் தங்கள் செலவு போகமீத்து இருக்கின்ருர்கள். கோயில் அர்ச்சகர், சாமி பக்திக்காரர் ஆவது போல் கதர் வியாபாரிகள் காந்தி பக்தர்கள் ஆகியிருக்கின்ருர்கள்.

அல்லாமலும் குறிப்பாக இந்த வருஷத்தில் மாத்திரம் அதாவது உற்சவ காலங்களில் அர்ச்சகர்களுக்கு வரும்படி வருவதுபோல் சத்தியாக்கிரக காலங்களில் கதர் வியாபாரிகள் ஆளுக்கு 5 ஆயிரம் 10 ஆயிரம் சம்பாதித்து இருக்கின்ருர்கள் என்ருலும் இவர்கள் எல்லாம் அநேகமாக சாதாரணமான வியாபாரிகள் என்றே சொல்லலாம். இப்படியிருக்க இவர்கள் இத்தனை பேர்களுடையவும் வியாபாரத்திற்கும் எத்தனையோ பங்கு மேலாகவே உற்பத்தி செய்து வட்டியில்லாத முதலை வைத்து வியாபாரம் செய்து வந்த காங்கிரஸ் கதர் போர்டுக்குச் சென்ற வருஷத்தில் இந்தப்படி நூற்றுக்கு 30 வீதம் லாபம் வைத்து விற்று வந்தும் கூட மொத்தத்தில் 15 ஆயிரம் ரூபாய் நஷ்டம் என்று கணக்குக் காட்டியிருப்பதாக ஒரு நண்பர் தெரிவித்திருக்கின்றதைப் பார்க்கும்போது காங்கிரசில் கதர் என்பது எவ்வளவு மோசமானதுறையாயிருந்து வருகின்றது என்பதை வாசகர்களே யோசித்துப் பார்த்து உண்மை உணரவேண்டுகின்ருேம்.

தவிர அந்த இலாகாதான் இன்று தமிழ் நாட்டின் சத்தியாக்கிரகத்திற்கு பெரிதும் உதவி செய்து இருப்பதைப்பார்க்கும் போது வியாபார முறையிலேயே சத்தியாக்கிரகம் நடத்த கதர் இலாகா ஆயுதமாய் இருந்து வருவதும் பார்ப்பனர்கள் காங்கிரஸ் வாதிகளாகவும், தேசபக்தர்களாகவும் தியாகிகளாகவும் இருப்பதற்காக கதர் இலாகாஇருந்து இம்மாதிரி மக்களை கொள்ளை அடித்தும் நஷ்டம் காட்டி வரவேண்டி வருவதும் உண்மை என்பதை இப்பொழுதாவது பொது ஜனங்கள் உணர்வார்கள் என்று நம்புகின்ருேம்.

அன்றியும் அரசாங்க உத்தியோகத்தில் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் வந்ததன் மூலமாக ஏதோ ஒரு சில பார்ப்பனருக்கு உத்தியோகம் கிடைக்கவில்லையா

னாலும் கூட காங்கிரசு, கதர், ஹிந்தி ஆகிய திட்டங்கள் அக்குறையை பூர்த்திசெய்வதோடு அதிகமாகவும் பங்கு கிடைக்கும்படி செய்யவே இவைகள் காப்பாற்றப்பட்டு பார்ப்பனருக்கு பயனளித்து வருவதை யார் மறுக்கக்கூடும் என்றும் கேட்கின்றோம்.

நிற்க கதரின் புனிதத்தன்மை இங்ஙனமிருக்க இனி ஹிந்தியின் புனிதத்தன்மையை சற்றுகவனிப்போம்.

ஹிந்தியென்பது பார்ப்பன ஆதிக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட புரட்டு என்பதைத்தவிர அதில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லை என்பதை அறிவுள்ள எவரும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள் என்றே கருதுகின்றோம். இந்தியா நாட்டில் முப்பத்தைந்தரை கோடி மக்கள் இருந்தாலும் பல பாஷை, பல மதம், பல நாகரீகம், பலநடை உடை பாவனைகளாக இருந்துவருவதை யாவரும் மறுக்கமுடியாது. அப்படி இருந்தாலும் மக்களுக்குள் மதத்தின் பேராலும், ஜாதியின் பேராலும் பாஷையின் பேராலும் போட்டிகள் நடந்து வருவதும் மறுக்கக்கூடியவை அல்லவென்றே சொல்லுவோம்.

இந்தநிலைமையுள்ள சமூகங்களைபிரிவினைக்கு ஆதாரமாய்இருப்பதை கண்டுபிடித்துஅவைகளை ஒழிக்க முயற்சிக்காமல் கண்மூடித்தனமாய் யெல்லோரையும் ஹிந்தி கற்றுக்கொள்ள வேண்டுமென்று அரசியலின் பேரால் நிர்பந்திப்பது எப்படி ஒழுங்காகும் என்றுகேட்கின்கின்றோம். ஹிந்தி என்பது அனேகமாக வடமொழியின் சாபோ, அல்லது திரிபோ ஆகும். இந்த நாட்டில் ஆரியர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட வடமொழிக்கு உயர்வு கொடுக்க பல வழிகளிலும் சூழ்ச்சிசெய்து உலகவாழ்க்கையில் ஒரு ஒடிந்துபோன குண்டூசிக்கும் பயன்படாத பாஷையாகிய அவ்வடமொழிக்கு எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டு வருகின்றது என்பது வெகுநாளாக தமிழ்மக்கள் கவனித்து வரும் சங்கதியாகும். இப்போது மறைமுகமாய் வடமொழியை ஆதரிக்கவும் ஆரிய நாகரீகம் சமயக்கொள்கை ஆகியவைகளை நிலைநிறுத்தவும் ஹிந்தியை அரசியல் விஷயமாகஆக்கி அதைக்கதரைப் போல் ஏன் கதரைவிட அதிகமாக ஒவ்வொருவருக்குள்ளும் புகுத்தப்பார்ப்பது எவ்வளவு வஞ்சகமான காரியம் என்பதை நமது சோணகிரிகள் அனேகர் இன்னும் உணரவே இல்லை. தமிழ்பண்டிதர்கள் சாம்பலையும் மண்ணையும் குழைத்து சூடுபோட்டதுபோல் மேலெல்லாம் தீட்டிக்கொண்டு சிவ, சிவ, சிவ என்பதற்கும் ராம, ராம, ராம என்பதற்கும் உதவுவார்களே தவிர மற்றபடி நமது மக்கள் மீது அனுவசியமான ஒரு பாஷை சூழ்ச்சித்திறத்தில் சுமத்தப்படுகின்றதே என்கின்றஅறிவும், கவலையும் சிறிதும் கிடையாதுஎன்றே சொல்லவேண்டியிருக்கின்றது. இன்றையதினம் இந்தியமக்களுக்கு அவரவர்கள் சொந்த பாஷை தவிர வேறுபாஷை தெரியவேண்டுமானால் அது இங்லீஷ்பாஷை என்றே நாம் தைரியமாய்ச் சொல்லுவோம்.

உலகமே தங்கள் கிராமம்தான் என்று எண்ணிக்கொண்டிருந்த காலம் மலையேறி இப்போது நிலப்பரப்பு, நீர்பரப்பு முழுதும் தெரிந்து 200கோடி மக்களையும் சகோதரர்களாகப் பாவித்து வாழவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்போது உலக செலாவணி பாஷை ஏதோ அதை மனிதன் அறியாமல் கபீர்தாஸ் இராமாயணத்தை படிக்க வேண்டிய ஹிந்திபாஷை எதற்குப்படிக்க வேண்டும் என்று கேட்கின்றோம்.

தமிழ் மக்களுக்கு சுயமரியாதை என்பது பல துறைகளிலும் வரவேண்டியிருப்பதை ஹிந்தியின் ஆதிக்கம் இனியும் அதிகமாய் வலியுறுத்துகின்றது என்றே சொல்லுவோம்.

தமிழ்பாஷையின் பாண்டித்தியம் என்பது இப்போதே அனேகமாய் பார்ப்பனர்களிடமேயிருக்கின்றது, தமிழ் பாஷையின் சங்கத்தலைவர்கள் பார்ப்பனர்களாய் இருக்கின்றார்கள் என்பதோடு இந்தப் பார்ப்பனர்கள் தமிழர்களை ஹிந்தி படிக்கக் கட்டாயப்படுத்துகின்றார்கள் என்றால் தமிழ்பாஷைக்காரர்களின் சுயமரியாதை எவ்வளவு என்பதை தமிழர்களே உணர்வார்களாக.

அரசியல் தத்துவத்தின் பயனைப் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார் பணத்தில் ஹிந்தி கற்று இந்தியத் தலைவர்களாகிய வடநாட்டுத்தலைவர்கள் இடமெல்லாம் பார்ப்பனர்களே போய் காரியதரிசிகளாய் அமர்ந்து அவர்களே தென்னாட்டுப் பிரதிநிதிகளாகி அவர்களது ஆதிக்கத்திற்கே இந்திய அரசியலைத் திருப்பி பயன்படுத்திக்கொண்டு வருகின்றார்கள்.

ஆகவே அரசியல் துறையில் இருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் அறிவு இருந்தாலும் அதை பார்ப்பனர்களுக்கு தக்கவிலைக்கு விற்றுவிட்டார்கள் எனினும் அரசியலில் இல்லாத பார்ப்பனரல்லாதார்கள் அறிவையாவது தக்கவழியில் உபயோகித்து தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டாமா என்று கேட்கின்றோம்:

ஹிந்து.

இந்த வியாசமானது ஹிந்து மதம் என்பது என்ன? ஹிந்துக்கள் என்பவர்கள் யார்? ஹிந்துமதத்தால் மக்களுக்கு விடுதலை உண்டா? என்பதைப்பற்றி ஆராய்தல் என்னும் தன்மையில் எழுதப்படுவதாகும்.

இதற்குமுன் பல தடவைகளில் இதைப்பற்றிய ஆராய்ச்சிகள் பலரூபமாக வெளிவந்திருந்த போதிலும் அவ்வாராய்ச்சியில் நமது முக்கிய தத்துவங்கள் சிலவற்றிற்கு அநுகூலமாக அதாவது நமது கருத்துக்களை ஒத்ததாகக் காணப்படும் சில விஷயங்கள் இவ்வார "நவ சக்தி"யின் உபதலையங்கத்தில் காணப்படுவதால் அதனை எடுத்துக்காட்டவும் மற்றும் அவைகளிலிருந்து இந்துக்கள், இந்துமதம் ஆகியவைகள் எவ்வளவு தூரம் சமய சமூகம் என்பவைகளுக்கு பொருப்பற்ற தன்மையாகவும், ஒரு நாட்டின் கேட்டிற்கே இவை முக்கிய ஆதாரமாகவும் இருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டவும் இதை எழுதுகின்றோம்.

அதாவது, "நவ சக்தி"யின் 6-5-31உ உபதலையங்கம் இந்துக்கள் யார்?என்னும் தலைப்பில் திரு திரு. வி. கல்யாணசுந்திர முதலியார் அவர்கள் எழுதி இருப்பதின் சுருக்கமாவது:—

"வடநாட்டில் சத்பந்திகள் என்று ஒரு சமூகத்தார் இருக்கின்றார்கள். அவர்களில் சாங்தேஷ் என்னும் ஜில்லாவில் மாத்திரம் 40000 பேர் இருக்கின்றார்கள். அவர்கள் தங்களை இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளுகின்றார்கள்.

ஆனால் அவர்களது நடவடிக்கைகள் சிலது இந்துக்களைப்போலவும் சிலது முஸ்லீம்களைப்போலவும் காணப்படும். இதனால் இந்துக்கள் வருணாச்சிர தர்ம மகாநாடு கூட்டி மேல்கண்ட சத்பந்திகள் என்னும் சமூகத்தார்களை இந்துக்கள் அல்ல என்று தீர்மானித்து விட்டார்கள். பிறகு சத்பந்திகள் சங்கராச்சாரி சாமியாருக்கு அப்பீல் செய்ததில் சங்கராச்சாரியும் அவர்களை இந்துக்கள் அல்ல என்று சொல்லிவிட்டார். பிறகு சங்கராச்சாரியார் கட்டளை மீது மேல்கண்ட சத்பந்திகளை மற்ற இந்துக்கள் மத பகிஷ்காரம் செய்தார்களாம், சத்பந்திகள் இதனால் தங்களுக்கு மான நஷ்டம் ஏற்பட்டு விட்டதாக கோர்ட்டில் ஒரு வழக்கு தொடுத்தார்கள். நீதிபதி சத்பந்திகள் இந்துமுஸ்லீம் ஆகிய இருவர் வழக்க ஒழுக்கங்களையும் பின்பற்றுவதாய் காணப்படுவதால் மானநஷ்டமில்லை என்று வழக்கைத்தள்ளிவிட்டார்.

இதில் நீதிபதி தீர்ப்பு ஒரு புறமிருக்கட்டும். மற்றபடி வருணாச்சிரம மகாநாட்டாரும், சங்கராச்சாரியாரும் கொண்ட முடிவு ஆராய்ந்து பார்த்தால் சத்பந்திகள் வேதம்தான் இந்து மதத்தின் ஆதாரம் என்பதை ஒப்புக்கொள்ளாததாலும், ஏகாதசி முதலிய விரதம் இல்லாததாலும், பசுவை போற்றாமையினாலும், மற்றும் வெள்ளிக்கிழமை உபவாசமிருப்பதாலும், மேற்குநோக்கிபிரார்த்தித்துவணங்குவதாலும் சத்பந்திகள் இந்துக்களாக மாட்டார்கள்என்று முடிவு சொல்லி இருக்கின்றார்கள்.

இன்னார் இந்து, இன்னார் இந்து அல்ல என்று வரையறுத்து கூறும் அதிகாரம் யாருக்குண்டு? வேதத்தை ஆதாரமாகக்கொள்ளுபவர்கள் தான் இந்துக்களாவார்கள் என்று எங்கு சொல்லப்பட்டிருக்கின்றது? அதற்கு ஆதாரம் எது? இந்து சமூகத்தில் வேதத்தை பொருட்படுத்தாதவர்கள் அநேகர் இல்லையா? இந்துக்கள் எல்லோருக்கும் வேதம் தெரியுமா? வருணாச்சிரம இந்து மதத்தில் எல்லோருக்கும் வேதம் படிக்க உரிமையுண்டா? வேதம் படிக்கவே உரிமையில்லாதவர்கள் வேதத்தை எப்படி ஒப்ப முடியும்? சங்கராச்சாரியார் எல்லா இந்துக்களுக்கும் குருவா? சங்கராச்சாரியார் கொள்கைகளை ஒப்புக்கொண்டு நடப்பவர் மாத்திரமா இந்து?

(என்றபல கேள்விகளை கிளப்பி விட்ட பிறகு, திரு. திரு. வி. கல்யாணசுந்திர முதலியாரவர்கள் தமது அபிப்பராயமாகக்கூறுவதாவது):—

இந்து மதம் என்று சொல்லுவதானது எக்கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டதல்ல. அதற்கு சந்மார்க்கம் என்று பெயர். அதில் எல்லாக்கொள்கைகளுமடங்கும். அது யாருக்கும் உரிமையுடையதாகும். அதை ஒரு கட்டுப்பாட்டிற்குள் அடிமைப்படுத்துவது அறியாமை. சமரசக்கொள்கையுடையோரனைவரும் இந்துக்கள்.

இந்து என்னும் பெயர் பிற்காலத்தில் வந்தது.

ஒருவன் கோவிலுக்குப் போவது, போகாமலிருப்பது, மதசின்னங்கள் அணிவது, அணியாமலிருப்பது, உருவத்தை வழிபடுவது, வழிபடாமலிருப்பது, ஆத்திகம் பேசுவது, நாத்திகம் பேசுவது ஆகிய காரியங்கள் எது வேண்டுமானாலும் செய்து கொண்டும் செய்யாமலிருந்து கொண்டும் இந்துவாக இருக்கலாம்.

இந்து மதத்தில் நாஸ்திகத்திற்கு இடமுண்டு.

பிறப்பினால் ஜாதி கற்பிப்பதே வருணாச்சிரமாகும்.

இதனை எல்லா இந்துக்களும் ஏற்றுக்கொள்ளுவதில்லை.

வருணாச்சிரமத்தை ஒப்புக்கொள்ளாதவர்களை இந்துக்கள் அல்லவென்று யாரும் தள்ளுவதில்லை.

வேதாந்த மதக்கார சங்கராச்சாரியார் வருணாச்சிரமத்தில் ஏன் விழ வேண்டும்.

வேதத்தை ஆதாரமாகக்கொண்டு இவர்இந்து, இவர் இந்துவல்ல என்று சொல்லும் சங்கராச்சாரியார் வேதத்தின்படி நடக்காதவர்களையெல்லாம் இந்துவல்ல என்று விலக்குவாரா?

பார்ப்பன வக்கீல்கள் இந்துக்களாவார்களா?

அவர்களை இந்துக்கள் அல்லவென்று சங்கராச்சாரியார் ஏன் கூறவில்லை?

சமரசம் சன்மார்க்கம் ஏற்பட்டு வரும் இந்நாளில் இடைக்காலத்தில் ஏற்பட்ட வருணாச்சிரமத்திற்கு ஆதிக்கம் தேடுவது அக்கிரமமாகும்.

நால்வருண மாசிரம முதலா நவின்றகலைச் சரிதமெலாம் பிள்ளை விளையாட்டே..............."

என்பதாக திரு முதலியார் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவற்றுள் இந்துமதத்தைப்பற்றி நாம் அவ்வப்போது சொல்லிவந்த பல விஷயங்களையே திரு முதலியார் அவர்களும் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது'

இந்துமதத்திற்கு என்று ஒரு குறிப்பிட்ட கொள்கை இல்லை என்று நாம் சொல்லிவந்ததை ஏற்றுக்கொண்டு மேலும் கோவிலை ஒப்புக்கொள்ளாமலும் உருவ வழிபாட்டைச் செய்யாமலும் மதச்சின்னத்தையும் அணியாமலும் கடவுள் உண்டு என்பதை ஒப்புக்கொள்ளாமலும் இருப்பவர்கள் கூட இந்துமதஸ்தர்கள்தான் என்பதாகவே குறிப்பிட்டிருக்கின்றார். மற்றும் அதுமாத்திரமல்லாமல் சமரசக்கொள்கைகள் உடையாரையும் இந்துக்கள் என்றே குறிப்பிட்டிருப்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

இவற்றையெல்லாம்விட மற்றொன்று அதாவது ஒவ்வொருவருடைய மனச்சாக்ஷிக்கும் மதிப்புக் கொடுப்பது இந்து மதம் என்றும் சொல்லி இருப்பதாகும்.

எனவே வாசகர்களுக்கு இப்போதாவது இந்துமதம்என்பதின் கொள்கையும் யோக்கியதையும் நடைமுறையின் யோக்கியதையும் அதன்பேரால் மக்களை அடிமைகொண்டு கசக்கிப் பிழிந்து பார்ப்பனச்சோம்பேரிகள் புரோகித அர்ச்சக சாஸ்திரி கூட்டத்தார்கள் கொள்ளையடித்து வரும் யோக்கியதையும் விளங்கவில்லையா என்று கேட்கின்றோம்.

இந்த நிலைமை உள்ளமதத்தை உத்தேசித்து காங்கிரசில் "மத நடு நிலைமை வகிப்பது" "மனச்சாக்ஷிக்கு மரியாதைகொடுப்பது" என்கின்றதான வார்த்தைகளை "பூரண சுயேச்சைத் திட்டத்தில்" சேர்த்திருப்பது என்றால் இந்தக்கொள்கையின்படி மக்களுக்கு விடுதலையுண்டா என்று கேட்கின்றோம்.

சங்கராச்சாரியின் மனச்சாக்ஷியும் சந்தேகஷ் ஜில்லா இந்துக்கள் என்பவர்களின் மனச்சாக்ஷியும் சத்பந்திகளை இந்துக்கள் அல்லஎன்று சொல்லச்செய்து விட்டது என்பதோடு இதை ஆக்ஷேபிக்க யாருக்கும் உரிமை இல்லையென்பதாகவும் ஏற்பட்டுவிட்டது. மற்றும் திருமுதலியாரவர்கள் இந்து மதத்திற்கு வேதம், ஆதாரம் என்று சொல்லுவது பொருந்தாது என்றும், எல்லா இந்துக்களுக்கும் சங்கராச்சாரியார் குருவாயிருக்க முடியாது என்றும், வேதத்தை ஓத எல்லா இந்துக்களுக்கும் உரிமை அளிக்கப்படவில்லை என்றும், வேதம் ஓதவே உரிமை இல்லாதவன் வேதத்தை எப்படி ஒப்புக்கொள்ளமுடியும் என்றும் விளங்கக் குறிப்பிட்டு இருப்பதில் இருந்து வேதத்தை ஒப்புக்கொள்ளாத அனேகர் இந்துக்களாக இருக்கின்றார்கள் என்பதும் புலனாகின்றது.

இதானது குருவை ஒப்புக்கொள்ளாதவர்கள் இல்லாமாகவும், பைபிளை ஒப்புக்கொள்ளாதவர்கள் கிறிஸ்துவர்களாகவும் இருக்கலாமென்பது போலவே இருக்கின்றது.

ஆகவே ஒருவனை மத விரோதி என்றோ மதத்தலைவர் விரோதி என்றோ சொல்லுவதற்கு இடம் எங்கே இருக்கிறது? என்று கேட்கின்றோம்.

இவைகளையெல்லாம் கவனித்தால் நமது நாட்டுக்கு ஏதாவது ஒரு வகையில் விடுதலையோ, முன்னேற்றமோ ஏற்படவேண்டுமானால் நமது திரு. திரு.வி. கல்யாணசுந்தரமுதலியாரவர்கள் எடுத்துக்காட்டிய கொள்கைகள் கொண்டதான இந்துமதம் என்பதை அடியோடு அழித்து ஒழித்தாகவேண்டும் அதை ஒழிக்காமல் சன்மார்க்கமோ சமரசமோ இல்லை என்பது உறுதி. ஏனெனில், இந்தமாதிரி கொள்கையற்ற---ஒரு ஆகாயக்கோட்டை மதத்தின் பேரால் இந்தியாவில் 22-கோடி மக்களை மூடர்களாக்கி, மானமற்றவர்களாக்கி---மனிதத்தன்மை யற்றவர்களாக்கி-வேசியாக்கி-வேசிமக்களாக்கி-தீண்டாதாராக்கி-சூத்திரராக்கி சில சோம்பேரிகளும் சில அயோக்கியர்களுமே அடக்கி ஆண்டு ஆதிக்கம் செலுத்திவரும் கொடுமை ஒழியாமல் வேறு எவ்வழியிலும் இந்நாட்டுக்கு விடுதலை இல்லை என்பதினால்தான்.

கடைசியாக நாம் கூறுவதாவது:- திருமுதலியார் அவர்கள் இந்துமதத்திற்கு சொல்லும் வியாக்கியானங்கள் முழுவதும் ஒரு மதத்திற்கு இருப்பது என்பது மக்களின் மிருகப்பிராயத்தை காட்டுவதானாலும் அதில் அவர் சிறிதுகூட நடப்பிற்கு விரோதமாய் எதையும் கற்பித்துக்கூறவில்லை என்பதை நாம் மனமார ஒப்புக்கொள்ளுகின்றோம்.

[10ம் பக்கத் தொடர்ச்சி]

உலகம் முழுவதிலும் உள்ள பொய்யர்களை எல்லாம் மெய் சொல்லச்செய்வதற்கு ஒரு மருந்துகண்டு பிடித்திருக்கிறார்கள். கொடிய குற்றவாளிகளுக்கும், கொலையாளிகளுக்கும், இம் மருந்தைக் கொடுத்து, அவர்கள் வாய்ப்பிறப்பைக்கொண்டே குற்றத்தை நிரூபித்துவிடலாம். இந்த மருந்தின் முக்கிய அம்சங்களில் மார்பைன். அகோபோலோமைன் என்னும் சரக்குகள் இருக்கின்றன. இவை இரண்டும் மனிதனுக்கு நரம்புத்தளர்ச்சியையும், பாதி மயக்கத்தையும் உண்டு பண்ணிவிடுகின்றன: மருந்து உட்சென்றதும் அந்த நிலையில் அவன் உள்ளதை உள்ளபடியே சொல்லுகிறான்.

"மனதில் உண்மை தங்கியிருக்கின்றது. பொய்க்கற்பனைக்கு ஆதாரமான மூளையின் வேகத்தை இம்மருந்து கெடுத்துவிடுவதால் அவர்கள் மெய்யை உடனே கூறிவிடுகிறார்கள்" என்று இம்மருந்தைக்கண்டுபிடித்த டாக்டர்களிருவரும் சொல்லுகிறார்கள். மருந்தை நிரப்பரீக்ஷித்தும் பார்த்தாயிற்று.

அரசியல் மாகாண மகாநாடு.

மதுரையில் சமீபத்தில் நடக்கப்போகும் அரசியல் மாகாணமகாநாடு தலைவர் ஸ்தானத்திற்கு திரு. சத்தியமூர்த்தி ஐயர் அவர்களை சிபார்சு செய்தது சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் ஓர் தீர்மானம் நிறைவேறியது.

சரியான குட்டிக்கரணம். காந்தியும் பாதிரிகளும்.

"பாடசாலை, வைத்தியசாலை முதலியவைகள் ஏற்படுத்துவதின் மூலம் மக்களை வேறு மதத்திற்கு இழுத்துக் கொள்வதே ஐரோப்பிய பாதிரிகளின் நோக்கமானால், நான் அவர்களை இந்நாட்டை விட்டுப் போய் விடும்படியாகக் கேட்டுக் கொள்ளுவேன்"

என்று முதலில் கூறிய திரு. காந்தியவர்கள் இப்பொழுது அதாவது 5,6 வாரத்துக்குள்,

"இந்தியா சுயராஜ்யம் பெற்ற காலத்தில், தவறான தென்று நான் கருதும் முறையிலும் கூட பிறமதத்தினரைத்தம்மதத்திற்கு மாற்ற அயல்நாட்டுப் பாதிரிகளுக்குச் சர்வ சுதந்திரமும் உண்டு" என கூறியிருக்கின்றார்.

பம்பாய் காங்கிரஸ் தேர்தல் மும்முரம்

பம்பாய் மாகாண காங்கிரஸ் ஸ்தாபனங்களுக்கு இம்மாதம் 31ந்தேதி தேர்தல் நடைபெறும். போட்டி பலமாக இருக்கிறது. "காந்தி கக்ஷி"யென்றும், "சமதர்மகக்ஷி" யென்றும் காங்கிரசில் இருகட்சியினரும் 'மெம்பர்களை பிரதி தினமும் ஆயிரக்கணக்காக சேர்த்து வருகின்றனர், "காந்தி கட்சி"யார் தாங்கள் சமதர்மக் கொள்கையில் யாருக்கும், எவ்விதத்தும் பின் வாங்கியவரல்லவென்றும், "சமதர்மகட்சி"யார் தாங்கள் மகாத்மா ஜியின் சிஷ்யர்களென்றும் கூறுகின்றனர். கார்ப்பொரேஷன், சட்டசபை தேர்தல் களைவிட, காங்கிரஸ் தேர்தல் பலத்த போட்டியுடன் நடைபெற்று வருகின்றது.

துருக்கியில் குடிஅரசுக்கு வெற்றி

கமால்பாக்ஷா.

உயர்திரு.வீரர்கமால்பாக்ஷா அவர்கள் துருக்கி குடி அரசு ஆட்சித்தலைவராக 4-வது தடவை துருக்கி மகா ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதிலிருந்து கமால்பாக்ஷா அவர்களின் குடியரசுக் கொள்கையையும், சீர்திருத்தக் கொள்கையையும் துருக்கியர்கள் ஒப்புக்கொண்டு விட்டார்கள் என்பது தெளிவு.

கோலாலம்பூரில் சுயமரியாதைப்பிரசாரம்

கோலாலம்பூர் செந்துலை குடி அரசு வாசகசாலை ஏற்படுத்தி அதனுள் உண்மை நாடுவோர் சங்கம் என்பதாக ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் திருவாளர்கள் சடையன், மா. செ. பண்டாரம், சு. ம. சுப்பையா, இராஜகோபால் எஸ். முனிசாமி, கு. மா. கி. மாரிமுத்து, அ. ம தனம், திருவெங்கிடம், அருணாசலம், அ. குமாரசாமி முதலியவர்கள் வாரா வாரம் சுயமரியாதைப் பிரசாரம் செய்து வருவார்கள்.

பெண்ணின் சாமர்த்தியம்.

மிஸஸ் செண்டாஸ்ட்டுவர்ட் என்னும் பெண்மணி ஒரு ஆண் உதவியுடன் மோட்டாரை 24 மணி நேரத்தில் 2242 மைல் ஓட்டி இருக்கிறார். இது மணி 1க்கு 94-மைல் வேகம் ஆகின்றது.

"முன்னேற்றம்"

புதுச்சேரியில் சீர்திருத்த வெற்றி

புதுச்சேரியில் நடந்த நகர நிர்வாகத்தேர்தலில் தீவிர சீர்திருத்தவாதியும், சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவருமான உயர்திருவாளர் ஆர். செ லேன் அவர்கள் வெற்றி பெற்றிருக்கின்றார் என்று கேட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்:

ஊத்துக்குளி ஜமீன்தாரர்மரணம்.

ஊத்துக்குளி ஜமீன்தாரர் (பாளையதார்) உயர்திரு. திவான்பகதூர் முத்துராமசாமி காளிங்கராயர் அவர்கள் 1—5—31 தேதி வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்கு ஊத்துக்குளியில் தமது அரண்மனையில் முடிவெய்தினர். எனக்கேட்டு மிகவும் வருந்துகின்றோம்.

ஜமீன்தாரர் அவர்கள் கோயமுத்தூர் ஜில்லாவில் புராதனமும், பிரபலமும், கீர்த்திவாய்ந்ததுமான ஒரு பாளையதார் ஆவார்கள். இவர் 1864-ஞு ஜனவரி மீ 24-ந்தேதி பிறந்தார். இன்றைக்கு இவரதுவயது 67 ஆகின்றது. 1881-ல் பட்டத்துக்கு வந்தார். இவர் பட்டத்துக்கு வந்து இன்றைக்கு 50 வருஷம் ஆகின்றது. இந்த ஜமீன் பாரம்பரைக் கிரமத்தில் இவர் ஒருவரே 50 வருஷம் பட்டம் ஆண்டார் என்பதோடு இவர் 33-வது பாளையதாரர் ஆவார். இவர்களது பரம்பரியர்களால்தான் பவானியிலிருந்து ஈரோடு வழியாக கொடுமுடி வரை வெட்டப்பட்டிருக்கும் காளிங்கராயன் வாய்க்கால் என்னும் 50 மைல் நீளமுள்ள வாய்க்கால் வெட்டப்பட்டதாகும். இந்த ஜமீன்தாரர் அவர்கள் பட்டம் ஏற்றுக்கொண்டது சிறு வயதாய் இருந்தாலும் ஒரு ஆங்கில உபாத்தியாயர் மூலமே கல்வி பழக்க ஒழுக்கம், நாகரீகம் முதலியவை கற்பிக்கப்பட்டு வந்தார். இவருடைய 50 வருஷ ஜமீன்தாரர் வாழ்க்கையானது இவரைப் போன்ற இரண்டு பங்கு, மூன்று பங்கு வரும்படியுள்ள பெரியஜமீன்களையெல்லாம் விட மிகப் பெருமையாகவும், பிரபலமாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

கோயமுத்தூர் ஜில்லாப் பொது வாழ்வுக்கு ஒரு திலகம்போல் இருந்தவர் என்று சொல்வது மிகையாகாது. இவர் கொங்குவேளாள சமூகத்தைச் சேர்ந்தவர். அச்ஜில்லா வாசிகளான மற்ற பிரமுகர்கள்போல் அல்லாமல் ஜில்லாவிலுள்ள எல்லா சமூகப் பிரபலஸ்தர்களிடமும் நெருங்கின பழக்கமும், நேசமும் உடையவராயிருந்ததோடு ஜில்லாவின் சகல காரியங்களுக்கும் தலைவராக இருந்து மக்களுக்கு யோசனை சொல்லி வந்தார். ஜமீன்தாரர், சர்காட்கப்பெரிய மனிதர்கள்போல் ஜாதி பேதங்களில் தங்களைப் பார்ப்பனர்களுக்குக் கீழ்ப்பட்ட ஜாதி என்றும், தாங்கள் சில ஜாதிகளுக்கு மேல்பட்டவர்களென்றும் கருதி வருணாச்சிரம தர்மத்தைக் காப்பாற்றி பிராமண விசுவாசத்தாலும், பக்தியாலுமே நாகரீகமடைந்தவர்கள் என்று காட்டிக் கொள்வதுபோல் இல்லாமலும், பார்ப்பனர் வீடு தவிர மற்றயார் வீட்டிலும் சாப்பிடுவதில்லையென்று வேஷமாகச் சொல்லிக் கொள்வதாலேயே பெரியவர்கள் என்று கருதும்படியாகவும் இல்லாமல், அதற்கு நேர் விரோதமாய் ஊண், உடை, மரியாதை ஆகிய விஷயங்களில் ஜாதிவித்தியாசம் என்பதே இல்லாமல் எல்லாருடனும் சமத்துவம் காட்டுவதும், பட்லர்கள் ("பறையர்கள்") என்பவர்களைக்கொண்டு சமையல் வகையரா செய்வித்து சாப்பிட்டு வந்தார்.—கடவுள் என்னும் விஷயத்தில் மாத்திரம் சற்று அதிகமான உணர்ச்சி இருந்து வந்தபோதிலும், புதியநாகரீகம் அதாவது (*Uptodate fashion*) என்கின்ற விஷயத்தில் இந்தியாவுக்கு மேல்நாட்டு நாகரீகம் எது இறக்குமதி யானாலும் அது முதலில் ஜமீன்தாரர் அவர்கள் வீட்டில் வந்து புகுந்து அவர்கள் மூலம்தான் அது மதிப்புப்பெற்று உலாவும்படியாக இருக்கும்.

தவிர, ஜமீன்தாரர்கள் என்ற பேரால் அநேகர் இந்நாட்டில் இருந்தபோதிலும், மரியாதை கொடுத்து, மரியாதை வாங்குவது என்பதிலும், யாருடனும் பட்சமாய்ப் பேசுவது என்பதிலும், ஒரு மனிதனிடம் முதல் நாள் பழகும்போது எப்படிப் பழகினாரோ அதே முறையில் கடைசிவரை நடந்துகொள்வது என்பதிலும் மிக்க ஆசையும், கட்டுப்பாடும் உடையவர்.

திவான்பகதூர் முத்துராமசாமி காளிங்கராயர்.
முடிவெய்திய ஜமீன்தாரர்.

உயர்திரு. அ. முத்துகிருஷ்ணசாமி காளிங்கராயர்.
முடிபொறுத்த இப்போதைய (இன்றைய) ஜமீன்தாரர்.

ஆங்கிலத்தில் எட்டிக்கட் என்று சொல்லப்படும்அதாவதுமக்களிடம்மக்கள்பழகும்வாழ்க்கைப்பத்ததிஎன்னும் விஷயத்தில் வெள்ளைக்காரர்கள்கூட நமது ஜமீன்தாரரிடம் வந்து பழகிப் போகும்படியான உயர் நிலையில் இருந்தவர். தென்னாட்டு மற்ற ஜமீன்தாரர்களின் மரியாதையை மிகவும் பெற்றவர் என்பதோடு அவர்களின் மதிப்பையும் நன்கு பெற்றிருந்தார். பொதுக்காரியங்களுக்குத் தாராளமாய் பணம் உதவும் பிரபு. இவருக்கு 5-வது ஜார்ஜ் அரசர் பட்டாபிஷேக ஞாபகார்த்தமாய் 1913ம் வருஷம் திவான்பகதூர் பட்டம் அளிக்கப்பட்டது. இவரது குமாரர்கள் இருவரில் உயர்திரு. முத்துக்கிருஷ்ணசாமி காளிங்கராயர் அவர்கள் மூத்தவர். குமார ராஜாவாக இருந்து பட்டத்துக்கு வந்துவிட்டார்கள் இளையவர் லண்டன் சென்று உயர்தரக் கல்வி கற்று வந்து, திருவாங்கூர் மகாராஜாவின் பிரவேட் செக்ரிடரியாய் இருந்து இப்போது அதை விட்டு ஊருக்கு வந்து தாமதிக்கின்றார்.

இக்குடும்பம் மற்ற பணக்காரர்களைப்போல் பார்ப்பன தாசர்களாயல்லாமல் எப்போதும் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையில் மிகவும் கவலை கொண்ட குடும்பமாகும்.

தென் இந்தியாவுக்கே ஏன்? இந்தியாவுக்கே முதல் முதலாய் கோயமுத்தூரில் கூட்டப்பட்ட பார்ப்பனரல்லாதார் மகாநாட்டை முன்னின்று நடத்திய கனவான் நமது ஜமீன்தாரரவர்களே யாகும். அன்று முதல் இன்றளவும் எக்காரணம் பற்றியும் அக்கொள்கையில் சிறிதும் மாற்றமேற்பட இடமேயில்லாமல் இருந்து வந்திருக்கின்றது. இவர்கள் 67 வருஷகாலம் உயிருடன் இருந்து, 50 வருஷகாலம் ஆக்ஷியில் இருந்து காலமானதோடு, அடுத்த பட்டத்திற்கு தன்னிலும், எவ்விதத்திலும், குறையாத குணமும், மேன்மையும் உள்ள குமார ஜமீன்தாரர் வந்திருப்பதோடு மிக்க புத்தி சாதுர்யமும், தைரியமும், வீரமும் பொருந்திய இளைய குமாரர் நடராஜ காளிங்கராயர் உற்ற துணையாய் இருந்து பழையபடியே எல்லாக் காரியங்களும் நடைபெற்று வரும் என்பதில் எவ்வித ஆக்ஷேபத்திற்கும் இடமில்லை என்று இருந்தாலும், ஒப்பற்ற ஒரு பெரியாரை கோயமுத்தூர் ஜில்லா இழந்து விட்டது என்பதற்கு புதிய ஜமீன்தாரரும்அவரது சகோதரரும் தான் மக்களுக்கு ஆறுதல்கூற வேண்டுமென்று கூறி முடிக்கின்றோம்.

———

தென்னாட்டு சங்கீதமும், பார்ப்பனரல்லாத வித்வான்களும்.

(குடந்தை T. R. வரதன் எழுதுவது.)

தென்னாட்டில் சங்கீதத்தில் சிறந்து தகுந்த லக்ஷணத்தோடு பாடி கேட்பவர் மனதை பரவசமடையும்படி செய்யும் தியாகராஜகீர்த்தனைகளைப்பாடியருளிய ஸ்ரீ ஜத் தியாகராஜ சுவாமிகளின் உற்சவத்தை, ஷை சுவாமிகள் அடக்கமான திருவையாறு என்னும் ஸ்தலத்தில் ஒவ்வொரு வருஷமும் மார்கழி மாதத்தில் தென்னாட்டில் உள்ள சங்கீத வித்வான்களால் சுவாமிகள் அடக்கமான சமாதி மேடை என்னும் இடத்தில் நடத்தப்படுகிறது. ஷை உற்சவத்தை நடத்தும் வித்வான்களில் சின்ன செட்டு, பெரிய செட்டு என இரு பிரிவுகளாகப் பிரிந்து, இரண்டு செட்டும் தனித்தனியாக உற்சவங்களும், சத்காலக்ஷேபங்களும் சங்கீதக்கச்சேரிகளும், மற்றும் சமாராதனைகளும் வெகு சிறப்பாக நடத்துகிறார்கள். எப்பொழுதும் பெரிய செட்டில்தான் விசேஷங்களும், பெரிய சங்கீத வித்வான்களின் கச்சேரிகளும் நடப்பதுண்டு. அப்படி நடப்பதற்கு காரணமாயுள்ளவர்கள் திருச்சி பிடில் வித்வான் ஒருவரும், கும்பகோணம் மிருதங்க வித்வான் ஒருவரும் சேர்ந்து காரியதரிசிகளாக இருந்து மிகவும் பாடுபட்டு நடத்திவைக்கிறார்கள். ஷை இருவரும் பார்ப்பனரல்லாதார்கள். ஷை உற்சவம் ஐந்து அல்லது ஆறு நாட்கள் வரையிலும் நடைபெறும். தென்னாட்டில் உள்ள சங்கீத வித்வான்களெல்லோரும் எவ்வித பிரதிபிரயோஜனத்தையும் எதிர் பாராது தம் மூல குருவுக்கு மரியாதை செய்ய இரவும் பகலும் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு முன் தங்களுடைய வித்வத் தன்மையையும், பக்தியையும் காட்டி சங்கீத கச்சேரிகள் நிகழ்த்துவார்கள். இக்காட்சியைக் காண ஆயிரக்கணக்கான ஜனங்கள் வெளியூர்களிலிருந்தும் வருவார்கள். அப்படி வரும் பார்ப்பனர்களுக்கு மாத்திரம் உற்சவம் முடிவுவரைக்கும் தினம் மூன்று வேளையும் வடை, பாயாசத்தோடு சாப்பாடு போட்டு அவர்கள் தங்குவதற்கும் தகுதியான இடவசதி செய்து கொடுக்கிறார்கள். ஆனால் பார்ப்பனரல்லாதாருக்கோ எவ்வித சௌகரியமும் செய்து கொடுக்க முடியாமல் அவர்களின் புத்தி தடைபட்டு சுயமதிப்பு இழந்தவர்களாகிவிட்டார்கள். என்னே அவர்கள் புத்தி இவ்விதம் செல்லவேண்டும்! அந்த உற்சவ நிர்வாகிகள் எல்லாம் பார்ப்பனரல்லாதார். அந்த செலவுகளெல்லாம் அனேகமாய் பார்ப்பனரல்லாத கனவான்களிடமிருந்தும் நாட்டுக்கோட்டை செட்டிமார்களிடமிருந்தும், ஏழை பார்ப்பனரல்லாத பக்திமான்களிடமிருந்தும் சங்கீதப்பிரியர்களிடமிருந்தும் வசூல் செய்யப்பட்டதாகும். ஆனால் அங்கு இவர்களுக்கு ஒருவித சௌகரியமும் அனுபவிக்க உரிமையில்லையாம். என்னே இவ்வித்வான்களின் மூடமதி! இம்மாதிரி நாம் அனேக இடத்தில் இப்பார்ப்பனர்களுக்குச் சோறுபோட்டு சங்கீதத்தை சேட்சே செய்வதால் அவர்கள் கவலையின்றி தினமும் தின்றுவிட்டு கச்சேரிகளுக்கு முன்னே போய் உட்கார்ந்துகொண்டு முன்னையை முன்னுக்குப்பின்னால் நீட்டி நீட்டி. சுதியை வாங்கி விடுபவர்கள் போல பாவனை செய்வதில், கடைசியில் நின்றுகொண்டிருக்கும் பார்ப்பனரல்லாதார்கள் பாடகர்களையாவது பார்க்க கொஞ்சம்கூட இடம் கிடைக்காதா என்று ஏங்கி ஒருவருக்கொருவர் இடித்துப்பிடித்துக்கொண்டு முன்னுக்கு வருபவர்களின் கண்களை கலங்கும்படி செய்து விடுகின்றனர். இம்மாதிரி அவர்களுக்கு நாம் அழுது அழுது சங்கீத ஞானத்தை ஊட்டுவதால தென்னாட்டுப்பார்ப்பனர்களெல்லாம் சங்கீதத்தில் தேர்ச்சி அடைந்து இருப்பதும், பார்ப்பனரல்லாதார் வீட்டில் நடக்கும் விசேஷங்களுக்கு பார்ப்பனரைக்கொண்டு தகுந்த ஜமா அமைக்கச்சொல்லுவதும் அவர்களும் பார்ப்பன வித்வான்கள் கொண்ட செட்டையே அமைப்பதும் அப்படி தப்பித்தவறி முக்கியமான வித்வானை பார்ப்பனரல்லாதாராக அமைத்தால் மரியாதை செய்யும்போது பக்க வாத்திய பார்ப்பனனுக்கு மரியாதை செய்யப்புகும் இரகசியத்தை இன்னும் இப்பார்ப்பனரல்லாத வித்வ சிரோன்மணிகள் அறியவில்லை போலும்! ஷை உற்சவத்தை செய்யப்புகும் காரியதரிசிகள் தம் மூல குருவாகிய தியாகர் மேல் உள்ள பக்தியினாலோ, அல்லது பிரமாவின் முகத்தில் பிறந்ததினால் உயர்ந்தவர் என்ற காரணத்தினாலோ, அல்லது பார்ப்பனர்களுக்கு பணிவிடை செய்து அதனால் அவர்களுடைய வாயிலிருந்து தம்மைப்பற்றி புகழ்ந்து வரும் மொழியால் நாம் பேரின்பம் அடைவோம் என்ற குருட்டு எண்ணத்தாலோ அல்லது ஷை சுவாமிகளின் வம்சமாகிய பார்ப்பனர்களுக்குப்பணிவிடை செய்யவேண்டும் என்ற மூட நம்பிக்கையாலோ அவர்களுக்கு இவ்வளவு பணிவிடையும் சௌகரியமும் செய்து கொடுக்கிறார்கள் போலும்! "என்னே இவர்களின் மூட நம்பிக்கை!" இதுவரையிலும் நம் பார்ப்பனரல்லாத வித்வான்களின் மூடமதியால் நம்மவர்களை சங்கீத உலகில் ஆழ்த்திவைத்ததுமல்லாமல் இப்பொழுது பார்ப்பனரல்லாத ஸ்திரீ வித்வான்களின் வாயில் மண்ணைப்போட சில பார்ப்பனர் சில பார்ப்பன யுவதிகளை செட்டு சேர்த்து காலக்ஷேபம் செய்யும் லேடி பாகவதர்களாகவும், பாடகர்களாகவும்பக்கவாத்தியக்காரர்களாகவும் தயார் செய்து ஊருக்கு ஊர் கோவிலுக்கு கோவில் மடத்துக்கு மடம் சொன்னால் போதும், அட்வர்டய்ஸ்மெண்டாவது ஆகுமே என்று இனுமாகக் கூடசெய்துவிடும்படியாக நம்மவர்கள் இடம் கொடுத்துவிட்டார்கள். இவ்வளவு தூரம் பார்ப்பனர்கள் நம்மை ஆழ்த்தியும் இப்பார்ப்பனரல்லாத வித்வான்கள் இன்னும் கண் திறக்காமலிருப்பதை பார்த்த எந்த தமிழ் மகனும்வருத்தப்படாமலிருக்க முடியாது. அவர்களுக்குப்பணிவிடை செய்வதே தமக்கு மேன்மை என்ற எண்ணத்தைவிடாமல் இந்தப்படி கொஞ்சம் கொஞ்சமாக 'இடம் கொடுத்துவிட்டால் நம்முடையகெதி என்னவாகும் என்பதை இன்னும் பாாப்பனரல்லாத வித்வான்கள் உணரவில்லை. இனியாவது பார்ப்பனரல்லாத வித்வான்கள் கண்விழித்து பார்ப்பனரல்லாதார் இருக்கும் நிலைமையைப்பார்த்து நம்மவர்கள் சங்கீத உலகில் முன்னுக்கு வர பாடுபடுவார்கள் என்று நம்புகிறேன்.

காஞ்சீபுரம், போலீஸ் ஸ்டேஷனிலும் புத்தர், பிள்ளையார், விக்கிரகங்கள் பிரதிஷ்டையா?

பொதுவாக நகரங்கள் மாட மாளிகை, வீடு வாசல்களாலானவை. ஆனால் ஆக்ஸ்போர்ட் நகரம் கல்லூரிகளாலானதுஎன்றும், மான்செஸ்டர் நகரம் மில்களாலானது என்றும் சிறப்பு முறையில் வழங்கப்படுவது போன்று கோயில்களாலான நகரம் ஒன்று உலகத்தில் உண்டு என்று கூறுவதானால் காஞ்சீபுரத்தைத் தான் கூறவேண்டியிருக்கும். காஞ்சீபுரத்தின் வீடுகளின் எண்ணிக்கையை மிஞ்சிடும் அந்நகரத்துக் கோயில்களின் எண்ணிக்கை. குளக்கரைகளெல்லாம் கோயில்கள். கழனி, தோட்டங்களெல்லாம் கோயில்கள். வீட்டுப் புறக்கடைகளெல்லாம் கோயில்கள். சாமிகள் கணக்கோ சொல்லித் தொலையாது. கோயிலில்லாது கேட்பாரற்று வெயிலிலுலர்ந்து, மழையில் நனைந்து வாடுவதக்கும் சாமிகளைப் பார்க்கவும் பரிதாபமாயிருக்கும். ஒரு கோயிலில் ஒரு சாமியல்ல, ஒன்று போலவே ஆயிரக்கணக்கான சாமிகள். சில கோயில்களில் சாமிகள் நட்டு விட்டிருக்கிறது. ஒரு லிங்கத்திலேயே 108, 1008 லிங்கங்கள். இரடிவிழுந்தாலும் சாமியல்ல, சாமிகளின்மேலும், கோயிலன்று கோயில்களின் மேலுந்தான் விழவேண்டும். நகரத்தைவிட்டு ஒரு மைல் சென்று தனியிடம் தேடி வெளிக்கு உட்காருவதானாலும் அங்கும் ஒரு கோயிலோ, சாமியோ யிருக்கப் பார்க்கலாம்.

அதிலும் சிக்கியர் மடம், சங்கர மடம், போன்ற பல வகுப்பினர் மடங்களும், கிறிஸ்தவாலயம், மகமதிய பள்ளிவாயில்கள், சைன புத்த கோயில்கள், சிவாலயங்கள், தென்கலை வடகலை வித்தியாசமுள்ள வைணவக் கோயில்கள் இவையன்றி பல ஜாதி வகுப்பினர் ஆதிக்கங்களிலுள்ள தனிப்பட்ட கோயில்கள் முதலிய எல்லாமத ஜாதி வகுப்பினரின் ஆலயங்களாலும் நிரம்பப்பட்டு மதவேற்றுமைகளுக்கு ஆஸ்பதமான சரித்திர சம்பந்தமுடையது இக்காஞ்சிமாநகரம். இன்றும் ஒவ்வோராண்டைய வைகாசித்திருவிழாவிலும் நடக்கும் தென்கலை வடகலைச்சண்டையில் போலீஸ் காவலிருந்தும் போதெமண்டையோடுமண்டையுருண்டு கோர்ட்டுக்கும் போவதைக்காணலாம்.

இத்தகைய அருஞ்சிறப்புக்களமைந்த இக்காஞ்சீபுரத்தில் பெரிய காஞ்சீபுரம் போலீஸ் ஸ்டேஷனுக்காக சமீப காலத்தில் ஒரு புதியகட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு விசேடமென்ன வென்றால் உள் நுழையும் வழியின் இருமருங்கிலும் மதிற்சுவருக்குள், ஒரு பக்கலில் நிர்வாண புத்த சிலையொன்றும், மறுபக்கத்தில் பிள்ளையார் சிலையொன்றும், பிரதிஷடை செய்யப்பட்டுள்ளது. போலீஸ்ஸ்டேஷனுக்கும், புத்த சிலைக்கும், பிள்ளையார் விக்கிரகத்துக்கும் உள்ள தொடர்பென்ன? இதற்கு முன்பு அச்சிலைகள் அக்கட்டிடத்துக்குச் சமீபத்திலுமிருந்ததில்லை. அவ்விடமும் ஓர் கக்கூஸ் கட்டப்பட்டிருந்தவிடம். ஆகையால் பழைமை பாராட்டவும் நியாயமில்லை. ஊரில் சாமிகளில்லை, அதற்காக வைத்திருப்பார்களென்றாலும், காஞ்சீபுரத்தைப்பற்றி முன்பே வர்ணிக்கப்பட்டாய்விட்டது. அவ்வக்கால அரசர்கள் தாங்கள் பின்பற்றிய மதங்களை தங்கள் ஆட்சியில் நிலை நாட்டி வந்தது போலிருக்குமோ வென்று பார்த்தாலும், அரசாங்க மதத்துக்கும் இச்சிலைகளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. பிறகு, ஏன், எப்படி அச்சிலைகள் அங்கு வைக்கப்பட்டன? அதிகாரியின் சம்மதமின்றியும், அவர் இடங்கொடாமலும் அவைகள் அவ்விடத்தில் பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கவழியில்லை. அவ்வாறு நேர்க்கினும் தம்மதத்தை நிறுவ ஒரு ஜைன விக்ரகத்தையல்லவோ ஒரு நயினாரானவர் வைத்தோ அன்றி அனுமதித்தோ யிருக்க வேண்டும்? புத்த சிலை நாட்டப்படுவானேன்? ஓர்வேளைபிறமதத்

தினர்க்கஞ்சி ஜைன விக்ரகத்துக்குப் பலவழிகளில் வேற்றுமையில்லாது ஏறக்குறைய ஒத்ததான புத்த சிலையை நாட்டியிருக்கக்கூடுமோ என்னும் சந்தேகமுண்டாகிறது. இருப்பினுமிருக்கலாம். அப்படியானால் பெரும் பாலோரான பிற 'இந்து'க்கள் என்று சொல்லிக் கொள்பவர்களை திருப்திப்படுத்த பிள்ளையார் விக்ரகமும், இடம் பெற்று விட்டதில் ஆச்சரியமில்லையல்லவா?

மக்களின் அறிவு விருத்தியடைந்துவரு மிக்காலத்தில், மதங்களைபற்றிய ஆராய்ச்சிகளும் சர்ச்சைகளும், நடந்துவருமிக்காலத்தில், அறியாமையும், மூடக்கொள்கையும், குருட்டு நம்பிக்கையும் பஞ்சாய்ப்பறந்துவருமிக்காலத்தில், கோயில்களையும், சாமிகளையும், பற்றிய ஓர் புத்துணர்ச்சி உலக முழுவதும் பரவி அவைகளை யொழிக்க முயற்சிக்கப்பட்டுவரு மிவ்விருபதாம் நூற்றாண்டில், எல்லா மதத்தினரும், எல்லா வகுப்பினரும், எல்லா கொள்கையினரும், வரக்கூடிய, எல்லோருடைய பணத்தினாலும், கட்டப்பட்டு எல்லோருக்கும் பொதுவான, அதிலும் அரசாங்கக்கட்டிடத்தில் புத்த, பிள்ளையார் சிலைகளை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதென்றால், அதன் பொருள்தானென்ன? மேலும் இக்காஞ்சீபுரத்தின் நிலைமை தெரிந்திருந்தும், இங்கு நடக்கும் மதச்சண்டைகளையறிந்திருந்தும், அச்சண்டை சச்சரவுகளையடக்கி சமாதானத்தை நிலை நாட்டிவரவேண்டிய போலீஸ் இலாகாவுக்கு சம்பந்தப்பட்ட போலீஸ் ஸ்டேஷனிலேயே இத்தகைய சிலைகளை நாட்டப்பட்டிருப்பது பொது மக்களுக்கு மன வருத்தத்தையுண்டுபண்ணக்கூடியதாயுள்ளது.

ஆகையால், காஞ்சீநகர போலீஸ் தலைமையதிகாரியும், போலீஸ்மேலதிகாரிகளும் இவ்விடயத்தையூன்றி கவனித்து கூடியவிரைவில் அச்சிலைகளை அவ்விடத்தைவிட்டகற்றி பொது மக்களுக்கு திருப்தியையளிக்க முன்வருவார்களாக.

ஒரு நிருபர்.

வங்காள மாகாண பெண்களுக்குக்கூட காங்கிரசின் மீது கசப்பு.

கல்கத்தா டவுன் ஹாலில் வங்காள ஸ்திரீகள் மகாநாடு ஸ்ரீமதி சாரளா தேவி சௌத்ராணி தலைமையில்நடைபெற்றது. ஸ்திரீகளின் உரிமைகள் வற்புறுத்தப்பட்டும் அதை எவரும் சட்டை செய்யவில்லை என்றும், சிறப்பாக பண்டித ஜவர்லால் நேரு கூட அதை அசட்டைசெய்தது ஆச்சர்யமானதென்றும் சென்குப்தாவை மாகாண இளைஞர் மகாநாட்டில் தலைமை வகிக்காது தடுத்தது ரொம்பவும் சரி என்று ஆதரித்தும், பலர் பிரசங்கமாரி பொழிந்தார்கள்.

பிறகு அங்கு செய்யப்பட்ட தீர்மானங்களாவன:—

சாரதா சட்டம் உடனே அமுலில் கொண்டுவரப்பட வேண்டுமென்றும், பெண்களுக்கு விவாகரத்து உரிமை இருக்கவேண்டுமென்றும், கலப்பு மணம், விதவை மணம், இவைகளை அனுஷ்டிக்க வேண்டுமென்றும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே பாதிரியான ஒழுகக முறை இருத்தல் வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சிறைபுகுந்த வங்க நாட்டு பெண்களை நமது நாட்டு வீரர்கள் போற்றுகிறார்கள், புகழுகிறார்கள், வீரமணிகளென்கிறார்கள். இவர்கள் வங்க நாட்டு வீரப் பெண்மணிகளின் அடிகளை பின்பற்றவேண்டுமென்றே சுயமரியாதைக்காரர்கள் விரும்புகிறார்கள். கேரள நாட்டில் காந்தி காந்தி என்று கதறிக்கொண்டும், தேசிய மகாநாடுகளில் தலைமை வகித்து பிரபலஸ்தராக விளங்கும் சென்குப்தாவுக்கு ஸ்ரீமதிசாரளாதேவிசௌத்ராணி தலைமையில்கூடியவங்கநாட்டுப் பெண்கள் மகாநாட்டில் ஆதரவு இல்லாமல் போனதேன்? இதையும் தென்னாட்டார் தெரிந்து தெளிதல் அவசியம்.

திருச்சினாப்பள்ளி ஜில்லா முதலாவது சுயமரியாதை மகாநாடு.

எஸ். இராமசாமியின் வேண்டுகோள்.

சென்ற வாரம் "குடி அரசி"ல் ஜில்லா மகாநாடு நடைபெறப் போவதாக அறிக்கை வெளிவந்ததைப் பார்க்க மகிழ்ச்சியேயாயினும், ஏனைய ஜில்லாக்களில் சுயமரியாதை உணர்ச்சி தீவிரமாகப் பரவி அங்குள்ள பெரியோர்களும் வாலிபர்களும் ஜில்லா மகாநாடுகளும், தாலூகா மகாநாடுகளும் எவ்வித எதிர்ப்புக்கும் அஞ்சாது நடத்தி ஜெயக்கொடி நாட்டிவருவதைப் பார்த்து என் போன்ற இளைஞர்களுக்கு பொறாமையே யாயினும், நமது திருச்சி ஜில்லா மட்டும் சுயமரியாதை இயக்கத்தில் அதிக பற்றுள்ள பிரபல வழக்கறிஞர்களும், பிரபல வர்த்தகர்களும், பிரபல மிராசுதாரர்களும் தன்னகத்தே வைத்துக்கொண்டு உறங்கி வருவதைக் கண்டு என்போன்றவர்கள் வருத்தமடையாமலிருக்க முடியவில்லை. நமது ஜில்லாவில் நாட்டுப்புறங்களிலும் நகரங்களிலும் பார்ப்பன ஆதிக்கம் எவ்வளவு தூரம் நிலைபெற்று பார்ப்பனரல்லாதாரை எவ்வளவு தூரம் அந்தகாரத்தில் மூழ்க வைத்திருக்கிறதென்பது நமது இயக்கப்பற்றுள்ள அனைவருக்கும் தெரிந்ததாகும்,

தவிர தற்காலம் உள்ள தேசியப்போராட்டத்தை சுயநலத்திற்கு பயன் படுத்திக்கொண்டு காங்கிரஸ் என்ற வேஷத்துடன் பார்ப்பனக்கூட்டம் பகட்டு வார்த்தைகளால் பாமர மக்களை ஏமாற்றக் காத்திருக்க புறப்பட்டு விட்டார்கள். ஒருக்கால் சுயராஜயம்கிடைத்து விட்டாலும் பாமர மக்களும் ஏழைகளும் ஷெ கூட்டத்தாரால் (சுயராஜ்யத்தால்) அடையும் நன்மை இன்னதென இவர்களால் விளக்கிக் கூற முடியவில்லை. இந்த அருமையான, நெருக்கடியான தருணத்தில கரூரிலுள்ள பெரியோர்கள் ஜில்லா மகாநாட்டை நடத்த முன்வரும் சமயத்தில் நாமும் நமது முசிரி தாலூகாவின் சார்பாக கூடுமான உதவி செய்யத்தயாராயிருக்கிறோம். ஏனைய தாலூகாவிலுள்ள பெரியோர்களும் மகாநாட்டிற்கு வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமெனவும் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆகையால் கரூரிலுள்ள பெரியோர்கள் மகாநாட்டின் நிர்வாக கூட்டத்தையும், வரவேற்புக்கழகத்தைதேர்ந்தெடுக்கவும், கூடிய சீக்கிரம் முயற்சி எடுத்து இந்த விடுமுறை நாட்களிலேயே தக்க தலைவரின் கீழ் மகாநாட்டைச் சிறப்புற நடத்தி இன்புற வேண்டுமென எனது வேண்டுகோளை விடுத்துள்ளேன்.

திருச்சினாப்பள்ளி பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம்.

3-5-31-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-30 மணிக்கு ஷெ சங்கத்தின் நிர்வாக சபை திரு: டி. சிவன் அவர்கள் தலைமையின் கீழ் கூடி கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) நமது தேசத்திற்குத் தொண்டு புரிந்துவந்தவரும் சமீபத்தில் நடந்த லண்டன் வட்டமேஜை மகாநாட்டிற்குப்பிரதிநிதியாகசென்றுவந்தவருமாகிய தலைவர் மிராசுதிரு- கே. டி: பால் அவர்கள் அகாலமரணத்தால் ஏற்பட்ட ஈடு செய்ய முடியாத நஷ்டத்தை குறித்து இச்சங்கம் வருந்துவதோடு அன்னவர் குடும்பத்திற்கு தனது அநுதாபத்தைத்தெரிவித்துக்கொள்ளுகிறது.

(2) சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழாவை மே மாதம் 17-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று நடத்துவதாகத் தீர்மானிக்கிறது.

(3) ஆண்டு விழாவிற்கு முதலில் (1) திரு. எஸ். லட்சுமிரத்தினபாரதியார் (மதுரை) (2) எச். எச். மகாராணியார் (ஜூனியர்) திருவிதாங்கூர் அவர்களை தலைமை வகிக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறது. அவர்கட்கு சௌகரியமில்லாவிடில் முறையே மிஸ்ஸஸ் சுப்பராயன் அவர்களையும், மிஸ்ஸஸ்நல்லமுத்து அம்மாள் அவர்களையும் கேட்டுக்கொள்ளுவதாக தீர்மானிக்கிறது.

(4) வரப்போகும் ஆண்டுவிழாவிற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய திருவாளர்கள் டி: வி. சோமசுந்திரம் பி. ஏ. பி. எல், சிவன், டி. பி. வேதாசலம் பி. ஏ. பி எல்., கே. என். வாசுதேவன், டி. எஸ். சஞ்சீவி, ஏ. ராமச்சந்திரன், டி. சின்னசாமி அடங்கிய ஒரு கமிட்டிநியமனம்செய்கிறது.

(5) சங்கத்து வரவு செலவு கணக்குகளைப் பரிசீலனை செய்து முடிக்குமாறு திருவாளர்கள் டி. வி. சோமசுந்திரம் பி. ஏ. பி. எல். கே. என். வாசுதேவன், வி. டி. ஜேம்ஸ், டி.எஸ்.சஞ்சீவி அடங்கியஒருகமிட்டி நியமிக்கப்பட்டது.

(6) விருதுநகரில் நடைபெறப்போகின்ற மூன்றாவது சுயமரியாதை மகாநாட்டிற்கு சீர்திருத்த நாடகம் நமது சங்கத்தாரால் நடத்த ஒப்புக்கொண்டு அதற்கு வேண்டிய செலவுகளை அநுமதிக்கப்பட்டது.

(7) நாடக விஷயமாக மகாநாட்டு வரவேற்பு கமிட்டி அங்கத்தினர்களையும், மற்றும் நமது இயக்க அன்பர்களையும் வேண்டிய உதவி புரியுமாறு கேட்டுக்கொள்ளுகிறது.

(8) நிர்வாக சபை அங்கத்தினர்களான திருவாளர்கள் என். ஆராமுதம் பி. ஏ., டி. ஆர். துரைராஜன் ஆகியவர்கள் சென்னைக்குச் சென்றுவிட்டபடியால் அவர்களுக்கு பதிலாக திருவாளர்கள் ஏ. இராமச்சந்திரன், எம். நடேசன் இவ்விருவர்களை நியமிக்கிறது.

இத்துடன் கூட்டம் 1 மணிக்கு முடிவடைந்தது என்று காரியதரிசி அறிவிக்கிறார்,

தீண்டாமை விலக்கு. கோபியில் கிணற்றுரிமை.

ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணிக்கு கூகலூரில் பொதுக்கூட்டம்.

திருவாளர் கே. டி. வெற்றிவேல் பி. எ., பி. எல்., வக்கீல் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். முதலில் திருவாளர் கே. கே. சுப்பண கவுண்டர் அவர்கள் தான் பள்ளர்களை தன் கிணற்றிலிறங்கித்தண்ணீர் எடுக்க அநுமதித்தது, தாழ்த்தப்பட்ட ஜாதியாருக்கும் தங்களுக்கும் வித்தியாசம் இல்லை என்றதை நடைமுறையில் நடத்திக்காட்ட வேண்டுமென்ற கருத்தோடுதான் செய்தார் என்றும், தான் செய்தது சரி என்றும் சொல்லி அதை நிலைநிறுத்தப்போவதாகவும் சொன்னார். பிறகு திருவாளர் கரட்டுப்பாளையம் கே. எம். ராமசாமி பி. எ. அவர்கள், மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் இல்லை யென்றும், தீண்டாமை விலக்க வேண்டுமென்றால் சிலர் தீண்டாதாருடன் சமபந்தி போஜனம் வைத்துக்கொள்ளுகின்றீர்களா என்று கேட்கின்றார்கள் என்றும், தங்கள் கூட்டத்தார் இனியும் வேண்டுவதானகாரியத்தை செய்யப்போகின்றோம் என்ற கருத்தோடு தான் இதை முதலில் ஆரம்பித்தோம் என்றும், தான் தீண்டாதார் வீட்டிலேயும் சாப்பிட்டிருப்பதாகவும் மனிதர்கள் பிறவியில் வித்தியாசமில்லை என்றால் சம்பந்தம் வைத்துக்கொளவதில் ஆக்ஷேபணையில்லை யென்றும் எல்லோரும் இக்காரியத்தைச்செய்து தான் ஆகவேண்டுமென்றும் தாங்கள் அந்த பிரசாரமே இனிசெய்யப்போவதாகவும் சொன்னார்.

பிறகு ஐயம்பாளையம் திருவாளர் ராஜாக்கவுண்டர் குமாரர் திரு. எ. ஆர். சோமசுந்தரக் கவுண்டர் பி. எ., பி.எல்., அவர்கள் எழுந்து திருவாளர், கே. கே. சுப்பண கவுண்டரவர்கள் செய்தது மிகவும் சரி யென்றும் உலகத்தார் அவரை மெச்சுவார்களென்றும், எல்லாக்கவுண்டரும் சென்னைக்கு வருகின்றவர்கள் எல்லா இடங்களிலும் சாப்பிடுகிறார்கள் என்றும் ஆனால் ஊரில் சொல்லிவிட வேண்டாமென்று மாத்திரம் சொல்லிவிட்டுப்போய் விடுகிறார்கள் என்றும், தான் சென்னையிலிருந்த எட்டு வருஷத்தில், அனேகம் பேர் வெள்ளாளர்கள் சென்னை வந்து எல்லா இடத்திலும் சாப்பிட்டுச் சென்றிருக்கிறார்கள் என்றும், தங்களை ஜாதியை விட்டு தள்ளவேண்டுமானால் எந்தப் பட்டக்காரருக்கு ஓலை எழுதவேண்டுமோ, அந்தப்பட்டக்காரர்களும் தானும் மாஜி மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்கள் கன்னிமாரா ஓட்டலில் ஒரு விருந்து அளித்த காலத்தில் பட்டக்காரர் பக்கமாகத் தான் உட்கார்ந்து சாப்பிடவேண்டிய சந்தர்ப்பம் கிடைத்தது என்றும், அப்பொழுது தங்களுக்கு ஆகாரம் வழங்கினது பட்லர்கள் (அதாவது "பறையர்கள்") தான் என்றும், ஆகையால் (பொது ஜனங்களைப்பார்த்து) தாங்கள் எதற்கும் பயப்படவேண்டியதில்லை என்றும், தங்களை ஜாதியை விட்டு ஒருவரும் தள்ளிவிடமாட்டார்கள் என்றும், தங்களை ஜாதியை விட்டு தள்ள உரிமை இருக்கிறவரே "பறையரிடத்தில்" சாப்பிட்டிருக்கிறார் என்றும், ஆகையால் அவர்கள் பயப்படவேண்டியதில்லை என்றும், தான் எல்லா இடத்திலும் சாப்பிட்டிருப்பதாகவும் தன்னை ஒருவரும் தள்ளிவிடவில்லை என்றும், தள்ளிவிட்டாலும் ஒன்றும் கவலையில்லை என்றும், தீண்டாதாரை சம அந்தஸ்திற்கு கொண்டுவர வேண்டுமென்றும் சொல்லி திரு. கே. கே. சுப்பண கவுண்டர் அவர்கள் செய்த காரியத்தைப் புகழ்ந்து அவரை எல்லோரும் பின்பற்ற வேண்டுமென்றும் சொல்லி முடித்தார்.

பிறகு திருவாளர் கள்ளிப்பட்டி பிரபல மிராஸ்தார் சி. கே. சுப்ரமணியகவுண்டரவர்கள் நாம் இந்த ஜாதி வித்தியாசத்தை ஒழிக்கவேண்டுமென்றும், அரசாங்கத்தார் இந்த வித்தியாசம் பார்ப்பதில்லை என்றும், பொதுக் கிணறுகளில், தீண்டாதாரெல்லோரும் ஜலம் எடுக்கலாமென்றும், அப்படி அவர்கள் ஜலம் எடுத்தால் அது குற்றமாகாதென்றும், திரு. கே. கே. சுப்பண கவுண்டர் செய்ததுசரியென்றும் சொல்லி முடித்தார். பிறகு கோபி திரு. கருங்கல்பாளையம் கே. சுப்பண்ணா அவர்கள் மனிதனுக்கு மனிதன் வித்தியாசமில்லை, எல்லோரும் ஒன்றுதான் என்பதற்கு வைதீகர்கள் ஆதாரமாகிய தேவாரத்திலிருந்தே ஒரு பாட்டும், சித்தர்கள் சொன்ன ஒரு பாட்டும் சொல்லிமுடித்தார். சித்தர்கள் சொன்ன பாட்டின் அர்த்தம் (நெருப்பில் மரக்கட்டைகளை போட்டால் சந்தனக்கட்டை சந்தனவாசமும், வேப்பங்கட்டை வேம்பு வாசமும், ஒவ்வொருகட்டையும் ஒவ்வொருவாசம் வீசுமென்றும், ஆனால் உயர்ந்த ஜாதியார் உடம்பையும், தாழ்ந்த ஜாதியார் உடம்பையும் நெருப்பில் போட்டால் எரிகிற பொழுது வித்தியாசமில்லாமல் ஒரே வாசனைதான் வீசுகிறதென்றும்) ஆகையால் மனிதனுக்கு மனிதன் வித்தியாசமில்லை என்று சொல்லி முடித்தார்.

பிறகு, தலைவர் வெற்றிவேல் அவர்கள் சபையோரைப்பார்த்து யாருக்காவது ஆக்ஷேபனையிருந்தால் எழுந்து பேசலாம் என்றார். ஒருவரும் வரவில்லை. திரு. கே. கே. சுப்பண கவுண்டர் செய்தது சம்மதம்தானே என்று கூட்டத்தாரைக் கேட்டு சம்மதத்தைப்பெற்று தானும் அவர் செய்த காரியத்தை ஆதரித்துப் பேசி முடித்தார். பிறகு வந்தனோபசாரம் கூறி கூட்டம் இனிது முடிந்தது.

கூட்டத்தில் இருந்தவர்கள் திருவாளர்கள் கோபி மாஜி பிரசிடெண்ட் பி. எல். முத்துவேலப்பகவுண்டர், புதுப்பாளையம் குப்பாண்டாக் கவுண்டர், குழந்தையண்ணன், கார்த்திகேய முதலியார், கோபி வக்கீல் நஞ்சையா, ஈரோடு ஈஸ்வரன், அப்பன், கள்ளிப்பட்டி சி. கே. சுப்பிரமணிய கவுண்டர், எ. ஆர். சோமசுந்தரக்கவுண்டர் பி.எ.பி.எல்., வெற்றிவேல் பி எ. பி.எல்., கே. எம். இராமசாமி பி. எ., சுப்பண்ணா முதலிய வெளியூர் கனவான்கள் வந்திருந்தார்கள் என ஒருநிருபர் எழுதுகிறார்

ஆண் பெண் சமத்துவம்.

(மயிலை, சீனி. வேங்கடசாமி)

"*Things Seen in Northern India*" என்னும் நூலாசிரியர் ஒரு ஆங்கிலேயர். இவர், இந்தியாவைப்பற்றி மேல் நாட்டார் அறிந்து கொள்ளும் பொருட்டு இப்புத்தகத்தை எழுதியிருக்கிறார். இப்புத்தகத்தில், இந்தியர்களின் நடை உடை பாவனை முதலியவைகளைப்பற்றிய விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றில் கீழ் கண்ட விஷயமும் ஒன்றாகும். அதாவது:' இந்தியாவில் பார்ஸி ஜாதியார் மேல்நாட்டாரைப்போல, தமது மனைவி அல்லது சகோதரிகளுடன் வீதிகளில் ஒன்றாக நடந்து செல்வதைப்பார்க்கலாம். ஆனால், பார்ஸி ஜாதியாரைத்தவிர்த்து, மற்ற எல்லா இந்துக்களும் தமது மனைவி அல்லது சகோதரிகளுடன் வீதிகளில் சமத்துவமாக கலந்து நடப்பதில்லை. ஒரு இந்து தனது மனைவி அல்லது சகோதரியுடன் தெருவில் நடப்பானானால் அவன் சற்று முன்னால் நடந்து செல்லுவான்: அவனுக்கு சற்றுப்பின்னால் ஸ்திரீ நடந்து செல்லுவாள் அவன் நடக்கும்போது ஒருவரையும் பாராமல் தலை குனிந்து நடப்பாள்." என்று அவர் அப்புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

இந்த மாதிரி பெண்களும் ஆண்களும் சமமாகச் செல்லாமல் முன்னும் பின்னுமாக நடக்கிறது வட இந்தியாவில் மட்டுமல்ல, தென் இந்தியாவிலும் சர்வ சாதாரணமாயிருக்கிறது. இவ்விதம் முன்னும் பின்னுமாக நடப்பது இந்தியராகிய நாம் நமது சகோதரிகளை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறோம் என்பதைத்தெளிவாகக்காட்டுகிறது.

இந்துக்கள் பெண்மக்களை அடிமைப்படுத்தி வைத்திருப்பதுபோல வேறெந்தத் தேசத்திலும் கிடையாது. இந்தியாவைத்தவிர வேறெந்த தேசத்திலும் ஆணும் பெண்ணும் முன்னும் பின்னுமாக நடப்பதில்லை.

இதுமட்டுமா? இந்துக்களில், புருஷன் பெயரைப் பெண்சாதி சொல்லக்கூடாதென்றிருப்பது புருஷனுக்குப்பெண்டாட்டி அடிமை என்பதைக் காட்டவில்லையா? இந்தியாவுக்கு வெளியேயுள்ள நாடுகளில் பெண்சாதி புருஷனை பெயரிட்டு அழைக்கிறாள் ஏனென்றால், அத்தேசங்களில் பெண்சாதி புருஷனுக்குச் சமம் என்று நினைக்கிறாள். புருஷனும் தன் பெண்சாதி தனக்கு சமம் என்று நினைக்கிறானே தவிர தனக்கு அடிமை என்று நினைப்பதில்லை.

இன்னும் வெட்கக்கேடான காரியம் ஒன்று உண்டு. அது என்னவென்றால், இந்துக்களில் கணவன் சாப்பிட்ட எச்சிலையில் மனைவி உட்கார்ந்து சாப்பிடுகிற அநாகரிக வழக்கம். இந்த அநாகரிகம் வேறெங்கேனும் உண்டா? இப்படிச்சாப்பிடுவது அன்பைக்காட்டுவதாகச்சிலர் சொல்லலாம். இது அன்பைக் காட்டுவதல்ல. அடிமைத்தனத்தைக் குறிப்பதாகும், அன்பைக்காட்டுவதாயிருந்தால், மனைவி சாப்பிட்ட இலையில் புருஷனும் ஏன் சாப்பிடுகிறதில்லை?

இவ்வித பழக்க வழக்கங்கள் நம்மவருக்குச் சாதாரணவிஷயங்களாகத் தோன்றினாலும், மேல் நாட்டார் நம்மை அநாகரீகர் என்று கருதி இழிவு படுத்த காரணமாயிருக்கின்றன.

சுயமரியாதையை விரும்புகிற நாம் நமது சகோதரிகளுக்குச் சமத்துவம் அளிக்கவேண்டியது கடமையாகும். பெண்மக்களை அடிமைப்படுத்தி வைக்கும் தேசம் முன்னுக்கு வருமா?

விதவா விவாகம்.

3 -4-31ந்தேதி திருநெல்வேலி ஜில்லா முடித்தானேந்தலில் நாடார் குலத்தில் சுமார் 25 வயதுள்ள ஒருவாலிபன் திடீரென இறந்து போய் விட்ட காரணத்தால், அன்னவரின், சுமார் பதினெட்டு வயதுள்ள வாழ்க்கைத் துணைவியையும் சுமார் ஒரு வயதுள்ள அன்னவரின் புதல்வனையும் காப்பாற்ற வேண்டி பழைய மூட பயங்காளித்தனத்தை நீக்கி சுயமரியாதைக் கொள்கைக் கிணங்க ஷையாரின் தம்பி சுமார் 20 வயதுள்ள வாலிபர் அண்ணன் தேவியை சுயமரியாதை முறைப்படி 25—4—31 தேதி திருமணம் செய்து கொண்டாரென ஷையூர் சுயமரியாதைத் தொண்டர் திரு: அருணாசலம் தெரிவிக்கிறார்.

பஞ்சமா பாதகங்கள்

எவை?
ஏன் நிகழ்கின்றன?
அவற்றை நிறுத்தச் சமய, சமூக, அரசாங்கச் சட்டங்கள் ஆதரவளிக்கின்றனவா?

இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்தீர்களா? இல்லையானால் இன்றே எழுதுங்கள். 52 பக்கங்கொண்ட புஸ்தகம் 0—2—6 அணா ஸ்டாம்புக்கு அனுப்பப்படும். விலாசம்: —

கோவை அ. அய்யாமுத்து
புஞ்சைப்புளியம்பட்டி,
(கோயமுத்தூர் ஜில்லா)

(5ம் பக்கத் தொடர்ச்சி.)

ப்பணிடுவதே முதலில் செய்யும் காரியமெனத் தீர்மானித்து நின்றாய். சமூகத்தில் ஓர் அற்ப சீர்திருத்தம் செய்யப்புகுந்தாலும், அதனோடு பிணைக்கப்பட்டிருக்கும் மதமும், மதத்தோடு பலமாகக்கட்டப்பட்டிருக்கும் கடவுளும் பாதிக்கப்பட்டு அல்லலுறுவது சகஜம். இந்நிலையில் நீ செய்யப்புகுந்தசமூக சீர்திருத்தத்தில்ஓர் சிறு மாறுதல் உண்மையாக ஏற்படும போதே மதம் ஆடி அசைய நேரிட்டு விட்டது. இதனால் மதத்தோடு பிணைக்கப்பட்டிருக்கும் கடவுள் வேரோடு வெளிக் கிளம்ப வேண்டியதாயிற்று. கடவுளது அகோர சப்பவத்தைக் கண்ட 'பக்திமான்கள்' 'ஆஸ்திக் சிகாமணிகள்' 'உயர்குல பிராமண மேதாவிகள்' பூகம்பத்தில் அகப்பட்டவர்கள் போல்திக்கு திசை தெரியாது தத்தளித்து மூலகாரணமான உன்னை சாம்பலாக்கக் கங்கணம் கட்டிக் கொண்டனர். அந்நிலையில் 'நீ வெளித்தோன்றினால் உன்உயிர் உடலிலிராது' என்பதாகஇரத்தத்திலேகையெழுத்திட்டெழுதிய கடிதங்களெத்தனை? அப்பயங்கரலிகிதம் உனது இரக்கமற்ற மனதான கற்பாறையை அணுவளவு கலங்கச்செய்ததா? கற்பாறையின் மீது இரும்பு பிணைக்கப்பட்டதுபோல் மேலுமேலும் உறுதிப்பட்டதேயொழிய வேறு ஒன்றும் ஆகவில்லையே! கடவுளது ஸ்தானத்தைக்காப்பாற்ற அவரது பிரதிநிதியான லோக குருக்கள் என்னும் ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் சாத்மீகமுறையில் உனக்கனுப்பிய ஸ்ரீ முகம் கண்டு உன் புத்தி மழுங்கி ஏமாந்து போனாயா? இல்லை. அதனால் உனது கூறிய புத்திக்கு ஏமாற்றுவதின் தன்மை,போக்கு இரண்டும் தெரிந்தன. உலகும் அதனை உணர்ந்து கண்விழிப்பாயிற்று.

நிற்க, பெண் உலகுக்கு நீ இழைத்த நீதி, நன்மை சொல்லப்புகுந்தால் அது சொல்லளவிலடங்காது. ஒவ்வொரு தமிழ் நாட்டுப் பெண்ணும், உள்ளூர உனது கொள்கைகளைக் கண்டு அகமகிழ்ந்து பூரித்து, உளகாங்கிதமடைந்து சுயமரியாதைக் கொள்கைகள் பூரணமாக நடக்கையில் வருவது எப்பொழுது? அன்றன்றோ நமது எண்ணம் முழுதும் முற்றுப் பெறும்காலம் என அனவரதமும் அகத்திலே தியானித்து நிற்பதொன்றேஅப் பெண்கள் மாட்டு நீ செய்யும்நன்மையை விளக்கப் போதுமானதாகும்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்து ஏழாவ தாண்டடையும் எனது சுயமரியாதை இயக்கமே! அநேக உலோகங்களோடும் மண்ணோடும் கலந்து கிடக்கும் உயரிய பொருளான சிறிய அளவுக்கு பொன்னை மனிதர் கனிகளினின்றும் எடுப்பது போல், பயனற்றவைகளோடு கலந்து நின்ற சுயமரியாதை ஆகிய உன்னைத் தனிப் பொருளாக்கி ஒருபொருளாய் உலகம் உன்னை எண்ணி மகிழுகிறது. நீயும் மாமதியோ மழைமுகிலோ என நினைக்குமாறு கைமாறு கருதாது உழைக்கிறாய். துன்ப நிலையிலிருந்த பெண்களும், அடிமை நிலையிலிருந்த ஆண்களும் உன்னை மனதாரப் போற்றி வாழ்த்தி நிற்கிறார்கள். இந்நிலையிலே நீஎன்றென்றும் தழைத்து நீடூழி வாழி! வாழி! வாழி!

சுயமரியாதைத் திருமணம்.

தென்காசி தாலூகா ஊர்மேனியழகியான் மிட்டா கஸ்பா கிராமத்தில் 29-4-31ல திரு.சொ. குழந்தைவேல் அவர்கள் முயற்சியால் ஷையார் குடும்பத்தில் அன்று ஒரு பார்ப்பன புரோகிதரில்லாத திருமணம் திரு ஜெகநாத. நாயக்கருக்கும், திருமதி குழந்தை வேல் அம்மாளுககும் நடந்தேறியது. இனிமேல் சிக்கனமாக கலியாணம் செய்வதை வற்புறுத்தி திரு சொ. குழந்தை வேல் அவர்கள்பேசி தம்பதிகளை வாழ்த்தி திருமணத்தை முடித்துவைத்தார்.

போறையார்.

எப்ரல் மீ 5உ ஞாயிற்றுக்கிழமை காலஞ்சென்ற திருவாளர் கதிர்வேல் நாடார் அவர்களின் குமாரர் நாராயணசாமி நாடார் கரும இறுதிச்சடங்கும் 8-4-31ந் தேதி புதன்கிழமை திருவாளர் ஷண்முகநாத நாடாரின் பாரி நாகையில் காலஞ்சென்ற அமர்து அம்மாளின் கரும இறுதிச்சடங்கும் நாளது ஏப்ரல்மீ 23உ பிராமணரை அறவே நீத்துநடைபெற்றதின் ஞாபகார்த்தமாக உலகமதிப்பு வாய்ந்த 'குடி அரசு' பத்திரிகைக்கு நன்கொடையாக ஒரு ரூபாய் அனுப்பப்பெற்றதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

கொழும்பில் 'குடி அரசு' கிடைக்குமிடங்கள்-

[1] ஏ. பாலகிருஷ்ணசாமி,
191, கோரிஸ் ரோடு.
[2] வி. என். கந்தய்யா,
41, கோரிஸ் ரோடு.
[3] எஸ். எம். மீராமொய்தீன்
80, மார்க் வீதி கோட்டை.
[4] P. M. Seyado Sahib,
10, Bristol Building Fort.
[5] எம். எஸ். சின்னதுரை
203, கல்லி ரோடு கொள்பட்டி.
[6] A. Raphial Pillai
214, Ward Place Borella.
[7] P. S. M. Kombiah,
100, Dam St, Pettah.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.

G. R. கணேசர் & Co.,
10|1 Cecil St.
Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.
India Novel depot
73, Serangoon Road.

கோலாலம்பூர்.

Visvanath Book depot,
9, Brickfield Rd.
R. S. Naidu,
86, Ampang St.
O. M. Ali Saiboo & Co,
27, Java Street
The Selanger Stamp Co.,
Market Street.
S. S. Abdulkadir,
South Indian Boookstore,
122, Pitty street, penang.
South Indian Trading Co,
Ipoh. Perok F. M. S.
Sorojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S.
The Central stores
61, Jalan Ibrahim,
Johore Bharu.
C. Kandiah,
85, Sultan street, Klang.
S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M. S.

அதிசயமான இரகசியங்கள்!

நீங்கள் இதுவரையில் கண்டிராத இரகசியங்கள் ஆச்சரியப்படும்படியான உண்மைகள் அடங்கிய புஸ்தகம் இனமாக அனுப்புகிறோம். இப்புத்தகத்தில் கெய்ரோடைன் டானிக் மருந்தை வாங்கிச்சாப்பிட்டுச் சுகமடைந்தவர்கள் புகழ்ந்து எழுதியிருக்கிற நற்சாட்சிக்கடிதங்களை வாசித்து அதிசயப்படுவீர்கள். தாதுபுஷ்டி மருந்துகளுக்கெல்லாம் அரசன்.

"கெய்ரோடைன்"

தாது புஷ்டிக்கும் கைகண்டது. வெள்ளை, மூலச்சூடு, மேகக்காங்கை, வாய்ப்புண், உஷ்ண வியாதிகள் தீரும். மலச்சிக்கல், வாய்வுகள், வயிற்றுவலி, க்ஷயம், இருமல், சுவாசகமாசம், நீர்நீர் வியாதிகள், வாதநோய்கள் நீங்கும். இரத்த சுத்தி, இரத்த விருத்தி, தேக புஷ்டி, பலம் அழகு தேகக்குளிர்ச்சி தரும். பத்தியமில்லை. பூர்ண சுகத்திற்கு ஒரு புட்டி போதுமானது.

80 வேளை மருந்து புட்டி 1க்கு விலை ரூ. 5—0—0. தபால் செலவு வேறு.

விலாசம்
தந்தி விலாசம்: சித்தர் மதுரை

ஆர். எஸ். பதி அண்டு கோ., (ரிஜிஸ்டர்ட்)
ஸ்ரீமீனாக்ஷி அம்மன் கோவில் மேலக்கோபுரம் உட்புறம்,
டிப்போ நெ. 5, மதுரை.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

ள்கை திரு. கிறிஸ்துவின் கொள்கையெனவும்-கிறிஸ்துமார்க்கம் அஹிம்சையெனும் அஸ்திபாரத்தின் மீதுதான் கட்டப்பட்டிருக்கிறதெனவும் அதுபோன்றேமகமதியமதமும் சகோதரத் தத்துவத்தை உலகிற்களிப்பதாயிருப்பதாகவும், ஆகையினால் தமக்கு சர்வமதங்களும் சம்மதந்தானெனவும் பொருள்படக் கூறிவந்துள்ளார். இம்மாதிரியான, இவரது அபிப்பிராயங்கண்டபிறமதஸ்தர்களும் இவரைஎற்றிப்போற்றிப்புகழ ஆரம்பித்தனர். கிறிஸ்துவர் இவரைக் கிறிஸ்துவின் அவதாரமெனவும், மகமதியர்கள் முகம்மதுநபியின் அம்சமெனவும், இந்துக்கள், கிருஷ்ணனின் தோற்றமெனவும், புத்தமதத்தினர் புத்தபிரானின் திருவுருவமெனவும் அந்தந்த மதஸ்தர்கள் தங்கள் தங்கள் மதப்பெரியார்களுக்கு ஒப்பிட்டுக்கூறி வானமளாவப் புகழ்ந்தனர். ஆனால் இன்று இவர் தம் உண்மை நிலை எது வென்பதை அவரவர் தெரிந்து கொண்டனர். திரு. காந்தியவர்கள் ஓர் "வைதீக மதவாதி" என்று வெளிப்படையாகக்கூறவும் ஆரம்பித்து விட்டனர், அவர்கள் அம்மாதிரி கூறுவதற்கு தகுந்த ஆதாரங்களில்லாமலும் போய்விடவில்லை. முதன்முதலாகதான் விரும்புவதும், அடையப்போவதும் "ராமராஜியம்" தான் என்று கூறிய பொழுதே முகமதியர்களுக்குச் சந்தேகம் விளைந்தது. அடுத்தாற்போல் "மகமதியர்கள் ராஜிக்கு வராவிடின் இனி எப்படிப்போரை ஆரம்பிப்பது" என்பது தமக்குத்தெரியுமெனக் கூறியவுடன் அவர்களது சந்தேகம் ஸ்திரமாய் விட்டது. அவர்களும் வெளிப்படையாய் எதிர்க்க ஆரம்பித்து திரு. காந்தியவர்களைப் போல் பதினாயிரம் காந்தியானாலும் தனியாகவே தன்னால் எதிர்த்துப் போராட முடியுமெனத் திரு. காந்தியவர்களின் பழைய பரமசிஷ்யரும் முகம்மதியமத தலைவருமான மௌலானா சௌக்கத்தலி அவர்களே கூறியுள்ளாரெனின் மகம்மதியர்கள் கண்முன்பு திரு. காந்தியவர்களின் சர்வமத சம்மதக்கொள்கை எவ்வாறு தோன்றுகின்றதென்பது புரியவில்லையா? மற்றும் கிறிஸ்தவர்கள் விஷயத்திலும் நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

தொடரும்

மதனலீலா படங்கள்

64 வகை சிற்றின்ப உருவ ஒரிஜினல் கிளேஸ் போட்டோ படங்கள் சதிபதிகளும், தனி மாதர்களும் கூடியது.

ஆல்பம் உள்பட விலை ரூ. 5-0-0.
சாம்பல் டஜன் ரூ. 1-8-0.
வெளிநாட்டினர் ஆர்டருடன் ரூ. 2 முன்பணம் அனுப்பவும்.

கே. ஜீ. ஸ்டோர்
8.வது பீட், வேப்பேரி, சென்னை.

திருப்பூர் காங்கிரஸ் பிரசாரமும், பணமுடிப்பின் யோக்கியதையும்.

சென்றவாரத்தில் இவ்வூருக்குதிரு இராஜகோபாலாச்சாரியுள்பட சில காங்கிரஸ் பிரசாரகர்கள் வந்து சேர்ந்தார்கள். உடனே பத்திரிகை நிருபருக்கு ஆள் அனுப்பினார்கள். நிருபரும் உடனே வந்து சேர்ந்தார். திரு. இராஜகோபாலாச்சாரியாரின் திக்விஜயங்களையும் அவருடைய பிரசாரத்தின் முக்கிய கொள்கைகளையும் பத்திரிகைக்கு தந்தி கொடுக்கப்பட்டது. பின்னர் பணமுடிப்புக்கு ஒரு புதிய வழி கண்டுபிடிக்கப்பட்டது. சிறை சென்ற திருமதி பத்மாவதி ஆஷருக்கு திருப்பூர் பொதுஜனங்களின் பெயரால் அவர் செய்த தியாகததை பாராட்டி ஒருபண முடிப்பு கொடுப்பதென்றும் ஷை யாரின் தலைமையில் கிராமபிரசாரத்துக்கு ஷை பணம் செலவழிக்கப்படுமென்றும் 'ஆனால் ஷை பணமுடிப்பை திரு. இராஜகோபாலாச்சாரியரிடம் கொடுத்துவிடவேண்டியதென்றும் முடிவு செய்யப்பட்டது. உடனே திரு. ஆஷர்கம்பெனியார் ரூ. 501 பிரபல பஞ்சு வியாபாரியும் காங்கிரஸ் தலைவரானவருமான ஒருகனவான் ரூ. 101 பட்டியல்போட்டுவிட்டார்கள். பிறகு சர்க்கா சங்கத்தின் சர்டிபிகேட் பெற்ற கதர் வியாபாரிகளுக்கு உடனே இந்த நிதிக்கு தொகைபோடும்படி கட்டளை பிறந்தது. உடனே கதர்வியாபாரிகள், தங்கள்நற்சாஷி பத்திரங்களை காப்பாற்றிக்கொள்வதற்காக வழக்கப்படி ரூ. 50 முதல் ரூ. 21 வரை பட்டியலிலபோட்டு தொகைகளும் கொடுத்துவிட்டார்கள். மற்றவர்களும் தொகை கொடுத்துவிட்டார்கள். தொகையும் சுமார் ஆயிரம்வரை ரொக்கம் பைகட்டியாய் விட்டது.

மாலை 7-மணிக்கு நொய்யல் நதிக்கரையில் கூட்டம் கூடியது. திரு. ஈஸ்வரமூர்த்தி கவுண்டர் பணமுடிப்பு கட்டி திருமதி. பத்மாவதி ஆஷரிடம் பணமுடிப்பை கொடுத்தார். திருமதி. அம்மையாரும் பெற்றுக்கொண்டு ஒப்பந்தப்படி திரு. ஆச்சாரியார் அவர்களிடம் உடனே கொடுத்துவிட்டார்கள்.

பின்னர் பிரசங்கம் ஆரம்பமாயிற்று. திரு. K. சந்தானம் அவர்கள் திருமதி. ருக்மணி லக்ஷிமிபதி அவர்களை புகழ்ந்துகூறினார். திரு. இராஜகோபாலாச்சாரியார் திரு. வேதரத்தினம், அவர்களை புகழ்ந்து சில வார்த்தைகள் கூறி, திரு. காந்தி அவர்கள் சொல்லி அனுப்பினாரென்று சிலஉபதேசங்களைச் சொன்னார். திரு.வேதரத்தினம் அவர்கள் நேற்றையதினம் கரூர் ஆற்றங்கரையில் திரு. T S, S. இராஜன் அவர்கள் பேசும்பொழுது இந்த ஆற்றங்கரையிலுள்ள மணல்களெல்லாம் இந்த 10 வருஷங்களாய் நடந்த உபந்நியாசத்தைக்கேட்டு கொண்டிருக், இப்போது அவைகளெல்லாம் பிரசங்கம் செய்புமென்று சொன்னார். ஆனால்நான் திருப்பூர் நொய்யல் ஆற்றங்கரைகளிலுள்ள மணல்கள் மாத்திரம் அல்லாமல் பக்கத்திலுள்ள மரம் செடிகளெல்லாம் உபந்நியாசம் செய்புமென்று நம்புகிறேனென்று சொல்லிவிட்டு இவ்வளவும் தெரிந்து கொண்டிருக்கும் திருப்பூரில் பொது ஜனங்களாயுள்ள நீங்கள் எல்லோரும் கதர் அணியவில்லையே என்றதான் வருத்தப்படுகிறேனென்று சொன்னார். பின்னர் திரு. திருகூடசுந்தரம் பேச எழுந்ததும் திரு. K. V. கிருஷ்ணசாமி அய்யர் என்பவர் ஸ்ரீனிவாச புறத்தில் பெண்களுக்காக ஒரு கூட்டம் ஏற்பாடு செய்திருப்பதாயும் அந்தக் கூட்டத்திற்கு திருமதிகள் பத்மாவதி ஆஷரும் ருக்மணி லக்ஷிமிபதியும் போகவேண்டியதிருப்பதால் திருகூட சுந்தரம் பேசப்போகும் கூட்டத்திற்கு திரு. விட்டல்தாஸ் ஆனந்தஜீசேட் அவர்களை தலைமைவகிக்கும்படிக்கும் சொல்லும்படியாய் திரு ஈஸ்வரமூர்த்தி கவுண்டரை கூட்டத்தில் சொல்லும்படி செய்து அவரும் அம்மாதிரி சொல்லவே திரு. திருகூடசுந்தரனுக்குபெருத்த அவமானம் ஏற்பட்டு தானும் இந்தக் கூட்டத்தில் அதிக நேரம் பேசப்போவதில்லை என்றும் 6 காரணங்கள்தான் சொல்லப் போவதாயும் அதிலும் 3 காரணங்கள் சொல்லிவிட்டு 3 நிமிஷத்தில் உட்கார்ந்துவிட்டார். இனிமேலாவது திரு. திருகூடசுந்தரனார் பார்பனசூழ்ச்சியை நன்கு தெரிந்து கொண்டு இவர்களுடன பின்பற்றுவதை நிறுத்திகொள்வாராக.

ஒருதிருப்பர்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யம்!! என்று வாய் கொண்டமட்டில் பிதற்றித்திரிவர். காரியத்திலோ ஒன்றுஞ் செய்யத்துணியார். ஏனெனில் இப்போவிச்சைவர்கள் தங்கள் முன்னோர் வழியைப்பின்பற்றும் சுபாவமுள்ளவர்களாதலினாலே இரக்கமற்று ஆயிரக்கணக்கான சமண மக்களை கழுவேற்றிய பெரியார்களின் அடிச்சுவட்டைப்பின்பற்றிவாழுமிவர்கள்எவ்வித ஜீவகாருண்ய உளத்தோடு வாழ்வர்? இன்று சமணர்கள் கழுவேற்றப்பட்டதை சுயமரியாதைக்காரர்கள் விளக்கியதும் சைவர்கள் அதற்கு அகச்சான்றில்லை, ஆகமச்சான்றில்லை, அதற்குப்பொருள்வேறு. இதற்குப்பொருள் இவ்வாறுதான் என்றெல்லாம் மறுப்புகள் கூறி சைவர்கள் கழுவேற்றவில்லை. மானம் பொருக்க மாட்டாது எண்ணாயிரம்பேரும் தானாககழுவேறி விட்டார்கள் என்று கொஞ்சமும் பகுத்தறிவிற்குப் பொருந்தாத முறையில் கூறி வருவதை ஒப்பினாலும் கழுவேற்றியவிழா இன்றுவரை நடப்பதும், திருவிளையாடற்புராணத்தின் கழுவேற்றிய படலத்தில் பின்பு நன்றி தெரியாத சமணர்கள் மானமழிந்து வெட்கங்கெட்டு திருஞான சம்பந்தப்பிள்ளையாருக்கு முன்னே நின்று இன்று நாங்கள் உமக்குத்தோற்றோம் நீரே வென்றீரென்று சொல்ல அதைக்கேட்ட சம்பந்தப்பிள்ளையார் அவர்கள் பிழைக்கும்வழியைக்கண்டு இன்னும் உங்களுக்குத்தரும வழியாகவே சொல்லுகின்றோம், நீங்களேன் வீணேயிறந்து போகிறீர்கள். எல்லோருக்கும் தாய்போற் சிறந்த எங்களுக்கு அடிமையாய்பிழையுங்கள் என்று சொல்ல அதற்குச் சமணர்கள் எடசிறு பிள்ளாய்! நீ என் தகாத மொழி சொல்லுகிறாயென்று மானங்கொண்டு தாங்களே கழுக்களிலேறி யிறந்தார்கள். அப்படிப்போயோராத சமணர்களையெல்லாம் சைவாசாரத்தைக்கொண்டவர்கள் ஒவ்வொருத்தராக பிடித்து அந்த முத்தலைக்கழுமரங்களிலே ஏற்றியிருத்திக் கொன்றார்கள் என்று கூறப்பட்டிருப்பதுபோன்று இன்னும் பல நூல்களிலும் கூறப்பட்டிருப்பதால் அம்முன்னோர் வழிபற்றியொழுகும் சைவர்களுக்கு ஜீவகாருண்ய மனப்பான்மையிருக்குமென்று எதிர் பார்த்தலே தவறு என்று கூறும் அன்பர்கள் பலரின் அபிப்பிராயத்தை காய்தல் உவத்தலகற்றி எதையும் ஆராய விரும்பும் அறிஞர்களெல்லாரும் ஒத்துக்கொள்வரென்பது திண்ணம்.

வட்டிக்குப்பணம் கொடுத்தலும் வாங்கலும் தவறென்று பிற சமயப் பெரியரொருவர் தெளிவாய்க் கூறியிருக்கின்றார். ஏனெனில் வட்டிக்குப்பணம் கொடுப்பவன் ஈர நெஞ்சமுடையவனாயிருக்கமுடியாது. ஈர நெஞ்சம் படைத்தவனாயினும் வட்டிவாங்குபவன் காலகதியில் கன்னெஞ்சனாய் விடுவான். அன்பு என்பது அவன் உள்ளத்தில் அணுவளவுமிராது. ஜீவகாருண்யம் என்பது அவன் சிந்தையிலுமிராது என்னும் நோக்கத்தோடு கூறியுள்ளார். இஃதுமெய்யேயானால் நம் நாட்டில் சைவத்தில் பிறந்து வளர்ந்த சோதரர் பலர் நூற்றிற்கு இரண்டு, மூன்று, ஐந்து, பத்து வட்டி (வாங்கு வதும்) நாள் வட்டி மணிவட்டி நாளிகை வட்டி முதலிய பலவழிகளிலும் மக்களின் இரத்தத்தையுறிஞ்சி அவர்கள் கஷ்டப்பட்டுத்தேடிய பொருள்களையெல்லாம் வட்டி, வட்டியென்று பெற்றுக்கொண்டு முதலை அவன் கொடுக்க வழியற்று நிற்கும் நிலைமையையுண்டுபண்ணி அதன் மேல் கோர்ட்டில் நம்பர் போட்டு டிக்ரி பண்ணி அவன் வீட்டை ஜப்தி செய்து அவன் பிள்ளை குட்டி முதலியன தெருவினின்று தியங்கியழச் செய்யும் காட்சியைக்கண்டவனும் சைவர்களுள்ளத்தில் ஜீவகாருண்யம் உண்டென்று கூற நினைப்பானோ?

ஆதிகாலந்தொட்டு நம்மோடு வாழ்ந்து வரும் ஒருசில சோதரர்களைத் தீண்டாதார் என்று ஒதுக்கிவைத்துவிட்டு அவர்களை மனிதர்களாய் எண்ணாது மிருகங்களாய்மதித்து நடத்து வருகின்றோம். சீர்திருத்தக்காரர்கள் சைவர்களே! அவர்களிடத்திலும் உங்களிடத்தில் அன்பெனும், நெறியும் அறிவெனும் சக்தியும் விளங்கின்றதல்லவோ? ஆண்டவன் வாழும் கோயிலில்

Page numbering incorrect.

நிலவற்றை தீண்டாத்திருமேனியென்று ஒதுக்கிவைப்பது நியாயமா? அவர்களுக்கு உங்களாலியன்ற நன்மை புரியவேண்டும். சமத்வம் நல்க வேண்டுமென மொழிந்தால், ஆம்சார் நீங்கள் சொல்வதெல்லாம் மெய்தான். ஆனால் இத்தாழ்த்தப்பட்ட கூட்டத்தார்கள் துப்புரவாயிருப்பதில்லை, எப்பொழுதும் அழுக்குடை அணிந்திருக்கிறார்கள். மேலெல்லாம் துர் நாற்றம் வீசுகின்றது. அவர்கள்கல்வி, நாகரீகம் முதலியன பெறாது நிரக்ஷரகுக்ஷிகளாயிருக்கிறார்கள். புலாலுணவு உட்கொள்ளுகின்றார்கள் என்றெல்லாம் பலகாரணங்கள் கூறுகின்றார்கள். ஆனால் நாம் ஜீவகாருண்யத்தோடு அவர்கள் துப்புரவாயிருக்க கிணறுவெட்டிக்கொடுத்தோமா? அல்லது நமது கிணறு, குளம் முதலியவற்றில் குளிக்கவும், தண்ணீர் எடுத்துக்குடிக்கவும் அனுமதித்தோமா? உயர்ந்த ஜாதியானுயிருப்பினும் பத்து நாள் குளியாமலிருப்பினும் அப்பரையரைப்போல் மேலெல்லாம் துர்நாற்றம் வீசும் என்பது எவருமறிந்த உண்மைதானே. தாழ்த்தப்பட்டோர் உயர்த்தப்பட கிறிஸ்தவர்கள் செய்யும் ஜீவகாருண்ய வேலையில் நூற்றில் ஒரு பங்காவது எடுத்துக்கொண்டு எங்காவது ஒரு பாடசாலை, கைத்தொழிற்சாலை வைத்து அவர்களில் எவரையாவது படிப்பித்தோமா? அல்லது தங்களுடைய கல்லூரிகளிலாவது சேர்ந்து படிக்க அனுமதித்தோமா? படிக்கவிரும்பும் மாணக்கர்களுக்கு பண உதவிபுரிந்து கல்வியிலுயர்த்தினோமா? புலாலுணவு உண்ணக்கூடாதென்று ஆதித்திராவிடர்களுக்கும் ஏனைய துன்புறத்தப்பட்ட கூட்டத்தாருக்கும் பிரசாரம் செய்தார்களா? புலாலுணவை ஒழித்து துப்புரவாயிருக்கு சைவாசாரத்தைக்கொள்ளும் தாழ்த்தப்பட்டமக்களை சமத்வமாய் நடத்துவோம். அவர்களை ஆலயத்திற்குள் அனுமதிப்போம் என்றவாக்குறுதி அளித்து அவர்களை உயர்த்த முயன்றோமா? அவர்களுக்கிந்த வாக்குறுதியை அளித்திருந்தால் தாழ்த்தபட்ட மக்களில் இன்று குடிக்கிறவர்கள், புலாலுணவு உண்பவர்கள், துப்புறக்குறைவாயிருப்பவர்கள் நூற்றிற்கு பதின்மர் இருப்பாராவென்பது சந்தேகம். ஆனால் இன்று சைவரென்று சொல்லிக்கொள்பவர்களில் நூற்றிற்கு இருபதின்பர் துப்புரவுக்குறைவாய் இருக்கின்றார்கள். குடிக்கின்றார்கள், புலாலுணவு உட்கொள்கின்றார்கள். கல்வியறிவுபெறாத மூடர்களாயிருக்கின்றார்கள். அவர்களை ஆலயத்தில் புக அனுமதிப்பதும அவர்களைத் தீண்டிக்கொள்வதும் அவர்களை சமத்வமாய் நடத்துவதும் நீதியா? ஒருவன் பிறப்பினால் சைவனாக முடியுமா? ஒழுக்கத்தினால் தான் ஒருவன் சைவனாக முடியுமென்று சைவசித்தாந்த சாஸ்திரங்களெல்லாம் கோஷிக்கின்றதே.

"ஒழுக்கமுடைமை குடிமையிழுக்கும்
இழிந்த பிறப்பாய் விடும்"

என்றல்லோ உங்கள் நான் மறையில் ஒன்றாகிய விதிவேதமாம் திருக்குறளில் கூறப்பட்டிருக்கின்றது. நாம் நமது சைவத்தின் அறிய கொள்கையை விட்டுவிட்டு பார்ப்பனர் ஏற்படுத்திய ஜாதி என்னும் மயக்கினில் வீழ்ந்து ஆதித்திராவிடர் என்றால் விலங்குகளைவிட கேவலமான பிராணியென மதித்து நடத்தல் நீதியா? பார்ப்பன சாஸ்திரங்களை மெய்யென நம்பி அவர்களை இழிபிறப்பாளரென்று கண்டாலும், தொட்டாலும், பேசினாலும், தீட்டு, பாபம் என்றெண்ணி அவர்களுக்கிழைத்து வரும் துன்பத்தை அநீதியைப்பார்த்தால் சைவர்களுக்கு ஜீவகாருண்யமுண்டென்று எந்தபைத்தியக்காரனாவது கூறுவானா? பார்ப்பன சாஸ்திரங்களிலே உங்களுக்கு எவ்வளவு மரியாதை கொடுத்திருக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்களா? யாம் ஆதித்திராவிடர்களுக்காகப்பரிந்து பேசுவதற்காக எமது ஊரில் ஆங்காங்குள்ள சுவர்களில் உயர் ஜாதி அறிவிலிகள் "ஈனவன் ஆதித்திராவிடன்" என்று எழுதிவருகின்றார்கள். என்னே இவர்களறிவீனம்! இந்நாட்டில் இரண்டு முக்கிய பிரிவார்களிருக்கின்றார்கள். ஒன்று ஆரியர், மற்றொன்று திராவிடர் (தமிழர்) இதினால்தான் தேவாரத்தில்கூட "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" என்ற செம்மொழியும் தோன்றியிருக்கிறது. ஆதித்திராவிடன் என்றால் பழந்தமிழன் என்பதுதானே பொருள். அவ்வாறிருக்க எம்மூர் சைவர்கள் எம்மை ஆதித்திராவிடன் என்றால் நாம் யார் என்பதை அறிவார்களா? இனி அவர்கள் ஆரியர் என்று கூறவேண்டும், அல்லது சூத்திரர் அதாவது வேசிமக்கள், ஒழுக்கமிலாதவர்கள், அடிமைகள், என்ற பட்டப்பெயரை ஒப்புக்கொள்ளவேண்டும். இதில் அவர்கள் எதை விரும்பினும் விரும்புக. யானோசைவர்களெல்லோரும் ஆதித்திராவிடரென்றே கூறுவேன். ஆராய்ச்சியுடைய சைவப்பெரியார்கள் இதை ஒத்துக்கொண்டிருக்கின்றார்கள். எனவே உண்மைச்சைவ நெறி "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற கொள்கையையுடையது என்பதையெண்ணி எல்லோரையும் சகோதர[illegible]ப்பாவித்து சமத்வமாய் நடப்பது [illegible] காருண்ய மாகும்.

அன்புமிக்க சைவர் சோதரர்காள்! "எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்றிக்கொண்டிருக்கலாம்" என்ற மூட எண்ணத்தை விட்டு விட்டு சைவம் ஜீவ காருண்ய சமயம் என்று இன்றே உலகிற்கு எடுத்துக் காட்ட முன் வாருங்கள். இன்றேல் சைவத்தை நீங்களே ஆழக்குழி தோண்டிப்புதைத்தவர்களாவீர்கள். இப்பொழுது சைவம் குற்றுயிராய்க் கிடக்கின்றது. அதைக்கொன்று புதைக்கப் போகின்றீர்களா? அன்றேல் அதை உயிர்ப்பிக்கப்போகின்றீர்களா? உயிர்ப்பிக்க விரும்பினால், தாழ்த்தப்பட்ட ஏழைகட்கிரங்குங்கள். ஆதித்திராவிடர் இல்லங்கட்கேகுங்கள். அங்கு நாவெலாம் நமக்காக உழைத்து தன் முழு சக்தியையும் செலவழித்து கஷ்ட நிலைமையிலிருக்கும் பல மக்களின் துன்ப நிலையைக் காணுவீர்கள். அந்தோ! எத்தனை எலும்புக்கூடு போர்த்த மனிதப்பிராணிகள்! எத்தனை ஒட்டிப்போன கன்னங்கள்! குழி விழுந்த கண்கள்! பட்டினியில் காதடைத்த பெண்கள்! அரை நிர்வாண மனித யந்திரங்கள்! எழுந்து நடக்கச் சக்தியற்று உருளும் கிழவர்கள்! பால் கொடுப்பார் யாருமற்று பரதவிக்கும் பாலர்கள்! ஐயகோ! எங்கும் அழுகைக்குரல், துன்பநிலை, இவைகளைக் காண, கேட்க உங்கள் மனம் உருகவில்லையா? கண்ணீர் சிந்தவில்லையா? ஆறு கோடி மக்கள் இவ்வித நிலையில் மேல் ஜாதிக்காரர்கள் கால்களால் நசுக்கப் பட்டுக் கிடக்கும் மக்களை மீட்க சைவர்கள் உங்கள் சமயத்திற்கு சக்தியில்லையா? உங்களுக்கு அன்பில்லையா? இவ்வாறு கோடிக் கணக்கான மக்கள் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாய் கஷ்டப் பட்டு வாழும்படி செய்யும் கொடிய இந்து மதத்தில் பிறந்த திரு. காந்தியும், கிறிஸ்தவப்பாதிரிமார்கள் தாழ்த்தப்பட்டமக்களை உயர்த்த தங்கள்மதத்தில் சேர்ப்பார்களாயின் அவர்களை இந்தியாவை விட்டு துரத்துவேன் என்று கூறுகின்றாரே? இது நீதியா? ஜீவகாருண்யமா? நாங்கள் (இந்துக்கள்) எத்தனை கொடுமை புரிந்தாலும் புரிவோம். பிற சமயத்தார் அவர்களுக்கு நன்மை புரிந்து தங்கள் மதத்தில் சேர்த்து அவர்களை உயர்த்தப் படாது என்பது திரு. காந்தியின் எண்ணமேயானால் "தீண்டாமை ஹிந்து மதத்தின் ஜீவதாரமென என்முன்னிலையில் உறுதிப் படுமேல் இந்துமதத்திற்கு நேர்மாறாக யான் கிளர்ச்சி செய்வேன்" என்றும் "தீண்டாமை இந்து மதத்தின் பாற்பட்டதென்று நான் நம்பவில்லை. அது அம்மதத்தின் பாறபட்டதென்று சொல்லப் படின், அந்த ஹிந்து மதம் எனக்குரிய தாகாது" என்று கூறியதெல்லாம் வீண் புரட்டன்றோ? சைவர்காள்! தீண்டப்படாத மக்களையும் மனிதர்களாகப் பாவித்து என்?— அவர்களை இறைவனாக எண்ணிபணியாற்றுவீர்களானால் தான் நீங்கள் ஜீவகாருண்ய மனிதர்களாக எண்ணபடுவீர்கள். சைவம் ஜீவகாருணய மதம் என்று உலகோரும் அறிவார்கள். (தொடரும்)

நான்காவது பௌத்தமகாநாடு

தென்னிந்திய பௌத்தர்களின் நான்காவது பௌத்த மகாநாடு, மே-மீ-16-17-18-இம்மூன்று தேதிகளில் கோலார் தங்க வயல் சாம்பியன்ரீப் பௌத்த சங்க சபாமண்டபத்தில் புரொபசர் பி. லக்ஷ்மிநரசு பி. ஏ. அவர்களின் தலைமையில் நடைபெறும். மகாநாட்டிற்கு வேண்டிய அநேக வேலைகள் நடந்து வருகிறது. பிரதிநிதிகளுக்கு ரூ2-0-0 கட்டணம். நமது மகாநாட்டிற்கு வரும் பிரதிநிதிகள் 15-5-31 க்குள்ளாக மேற்படி தொகையை செலுத்தி விடவேண்டும் என மகாநாட்டு காரியதரிசி எழுதுகின்றார்.

குன்னத்தூர் போர்டு ஆண்பாடசாலை மாணவர் கல்வி அபிவிர்த்தி சங்க முதலாவது ஆண்டு நிறைவு விழா.

ஷை வருடோற்சவம் இவ்வூர்போர்டு ஆண்பாடசாலைக்கருகே அமைத்திருந்தகொட்டகையில் திருமங்கலம்ரேஞ்சுஸ்கூல்டிப்டி இன்ஸ்பெக்டர் திரு. P.M. துரைசாமி B.A., L.T. அவர்கள் தலைமையின் கீழ் 28-4-31 மாலை நடைபெற்றது. பெண்பாடசாலை மாணவிகளும் உபாத்தினியம்மையார்களும் இன்னும் பலபிரமுகர்களும் விஜயம்செய்திருந்தார்கள். ஆண்பாடசாலை மாணவர்களால் உத்தமன் உயர்வு பெற்றது எனும் நடிப்புக்கதை, சம்பாஷணை, விகடம் முதலியவைகள் நடைபெற்றது. ஹெட்மாஸ்டர்திரு P.S. தாஸன் அவர்கள் ஆரம்பக்கல்வி, வாசகசாலைசங்கம் என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார். அனைவருக்கும்தாம்பூலம் சந்தனாதிகள் வழங்கப்பட்டதும் கூட்டம் கலைந்தன. ஒருநிருபர்

ஆராய்ச்சி அணிகலம் என்னும் தமிழ் நூல்:

கடவுளைப்பற்றிய மதங்களின் உண்மைக்கொள்கையின் பயனான கடவுட்பேறின்பம், உலகம் பொய்யென்ற உண்மையுணர்ச்சியிலடையும் அறிவின்பம், என்ற முடிவையும் இவைகளைத்தெரிந்துகொள்வதற்குக் கீழான படியாய் முன் அமைத்துள்ள சமூகக்கட்டுப்பாடுகள் அவ்வப்போதுள்ள காலத்தைப் பொறுத்ததெனவும் உலகவியகாரங்களில் சுயநலத்தின் பொறுட்டுச் சமூக; மத; அரசியற் கொள்கைகளிற் புகுத்தப் பட்டிருக்கும் திரிபான போலி அபிப்பிராயத்தையும் மற்றும் மக்களுக்கு எத்துறைகளிலும் வேண்டற்பாலதாய் சங்கதிகள்யாவையும் பலநூற் பிரமாணங்களோடு சுருக்கவகையில் 17 அத்தியாயங்களாய்த்தொகுத்து எளிய நடையில் எழுதப்பட்டது. 125 பக்கம். 8/4 சைஸ் புத்தகம் ஒன்றுக்கு ரூ. 0—12—0 மதுரை புதுமண்டபம் எல்லாபுக் ஷாப்புகளிலும் அடியிற் கண்ட என்னிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

தா. க. தாயுமான பிள்ளை
மேல்மங்கலம், வடுகபட்டி போஸ்டு
பெரியகுளம், மதுரை.

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலிக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி.	...	0—8—0
மனு நீதி மரும்ம்	...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு.	...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு.	...	0—2—0
சோதிடப் புரட்டு.	...	0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு)	...	0—2—0
சுயமரியாதைப் பாடல்	...	0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.	...	0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை	...	0—4—0
ஞானசூரியன்	...	0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம்		0—4—0
ஷை 2-ம் பாகம், அயோத்தியாகாண்டம்	...	0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு)		0—3—0
*அகத்தியர் ஆராய்ச்சி	...	0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?	...	0—2—0
*குறள்	...	0—8—0
* இயற்கைமதம்	...	0—?—0
* சிதம்பர ரகசியம்	...	0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை.		0—4—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்ப வேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாப்பீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி. கள் வாப்பீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி, ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ.	4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

"குடி அரசு" ஏஜண்டுகள்.

R. ராமலிங்கம், வியாபாரம்
கோட்டார்.

*ராஜரத்னம், தமிழன் ஆபீஸ்,
ஆண்டர்சன் பேட்டை.

*கான்மாபாளிட்டன் கிளப்
விருதுநகர்.

*A. V. பாலசுப்ரமணியம்
23, ஏடயதெரு,
திருவாரூர்.

பி. சாமுவேல் பிள்ளை,
கிரேட்காட்டன் ரோடு,
தூத்துக்குடி.

*எஸ். மாசிலாமணி பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்,
பாலக்கரை திருச்சி.

S. குற்றாலலிங்கம் பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்
மீனாட்சிபுரம்
திருநெல்வேலி.

S. P. கிருஷ்ணசாமி,
நாகப்பட்டணம்.

P. பழனியாண்டி செட்டியார்,
நாகூர்.

T. சேத்தராயடு
சித்திரக்காரத் தெரு,
மதுரை.

K. கணபதி, சாக்கோட்டை
கும்பகோணம்.

மானேஜர், 'புதுவைமுரசு'
புதுச்சேரி.

குமரன் பிரஸ்,
காஞ்சீவரம்.

A. S. முருகேசம், பஜார்
திண்டுக்கல்.

*T. சுப்ரமணியபிள்ளை,
17 பாரிஸ் வெங்கிடாஜல
அய்யர் தெரு
சென்னை.

A. R. M. சுந்திர பாண்டியன்
கடைவீதி,
அருப்புக்கோட்டை.

G. V. ராமசாமி
பெரிய கடைவீதி,
கரூர்.

*B. ரங்கசாமி, டைலர்
பெரிய கடைவீதி,
கோயமுத்தூர்.

ஹாஜி முகமது ஷேக் உசேன்,
57. சுண்ணாம்புக்காரத்தெரு,
காரைக்கால்.

*M. ரத்னம்,
கிரோசிங்மில் டிபோ,
நெல்லிக்குப்பம்.

K. N. தங்கவேலு,
காரியதரிசி
சமூகசீர்திருத்த சங்கம்
கல்லிடைக்குறிச்சி.

C. S. ஜோசப்
159 கேவல்ரி ரோடு,
பெங்களூர் Cant.

S. ராமசாமி
செங்குந்தர் தெரு,
தளவூர்.

முத்துசாமி
சர்டார் ஹைஸ்கூல்,
பொறையார்.

P. S. ஜீவரத்னம் பிள்ளை,
2. மலாய்வீதி, ஸ்லேவ்ஐலண்டு,
கொழும்பு.

A. S. பரமசிவம்
34. காரிக் ஹவுஸ்
டியன்சிகா ரோடு
ஹேவலக் டவுன்
கொழும்பு.

எட்வர்ட்பால்
திருமலாபுரம்.

செல்வராய கவுண்டர்
திருப்பத்தூர்.

S. அப்பாதுரை
மண்டி, ராசிபுரம்.

M. N. M. பாவலர்
நியூஸ் ஏஜண்ட்,
திருப்பாபுலியூர்.

* இந்த புள்ளியுள்ள விலாசதார்களிடம் குடி அரசு பதிப்பக புஸ்தகங்களும் கிடைக்கும்.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சொ. முருகப்பர்.

விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
இதன்வருடசந்தா ரூ. 4—0—0
அல்லது $. 2,25

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 செசில்ரோட், சிங்கப்பூர்

'நாடார் குலமித்திரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு „ 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0

வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—

மானேஜர் "தமிழன்"

ஆண்டர்சன் பேட்டை P.O.

கோலார் தங்கவயல் (S. I.)

'சண்டமாருதம்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0

வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: அ. பொன்னம்பலம்

மானேஜர், "சண்டமாருதம்"

கோட்டையூர்,

ராமனாதபுரம் ஜில்லா

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0

வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: S. குருசாமி B.A.

மானேஜர், "புதுவைமுரசு"

4 லல்லிதொலாந்தால் வீதி

புதுச்சேரி.

M. S. சித்தர்பார்மசி

எல்லா நோய்களுக்கும் மருந்துகளிருக்கின்றன. கேட்லாக் இனாம்.

விஷமை. விஷநோய் எதுவாலும் சரி 3 நாளில் தீரும்.

Dr. P. M. சங்கரலிங்கம் பிள்ளை,

கோவில்பட்டி S. I. R.

"GENUINE KHADDAR"

சுத்தமான கதர்.

அகில் பாரத சர்க்கா சங்கத்தாரால் நற்சாட்சிப் பத்திரம் பெற்றது.

எங்களிடம் கதரில் எல்லாத் தினுசுகளும் கிடைக்கும். வெளியூர் ஆர்டர்களை உடனே கவனிக்கப்படும். அட்வான்சுடன் ஆர்டரை அனுப்பவும்.

விலாசம்:—

எம். சென்னியப்ப முதலியார்

கதர் ஸ்டோர், திருப்பூர், S.I.R.

"பல் ஜாக்கிரதை"

தங்கள் விலாசம் தெரிவித்தால் கல்நார் பற்பொடி இனாமாக அனுப்புவோம்.

விலாசம்:—

A. N. காதர் அவுலியா,

வலங்கைமான்,

தஞ்சை ஜில்லா.

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

"முன்னேற்றம்" ஆபீஸ்,

152, சிலிகி ரோட்,

சிங்கப்பூர்.

சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்

அரசாங்க இஞ்சினீயர்களில் 14 பேர்களாலும், மற்ற பிறபலர்களாலும் மதிக்கப்பெற்ற

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆடர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாடசாலை சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர், சென்னை

மேயோ கூற்று,

"மேயோ கூற்று மெய்யா பொய்யா" என்னும் புத்தகம் முதற்பதிப்பு காப்பிகள் 2000மும் செலவாகி விட்டபடியால், அதன் இரண்டாம் பதிப்பு அச்சிட்டு வெளியிட்டிருக்கிறோம். இதன் விலை அணா 3. வேண்டுவோர் 4 அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். மானேஜர்.

"குடி அரசு" பதிப்பகம், ஈரோடு.

தீர்க்ஷ்சீகணக்கில் துணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறீர்?

சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல் வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடியதின் 1க்கு 1-4-0. தபால் கூலி அணா. 4.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மேடிகல் ஹால்,

அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S I

சோல் ஏஜண்டுகள்:—

தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெரு மதராஸ்.

K. S. மேத்தா & Co., 234, சைனாபஜார் ரோட் மதராஸ்.

வெள்ளைச்சாமி, No. 300, சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்

1920-ம் வருஷத்திய தமிழ் சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

1931ம் வருஷம் வரையில் திருத்தி அமைக்கப்பட்ட புதிய தமிழ் பதிப்பு.

உண்மையிலேயே ஒவ்வோரு கிராம நகரவாசிக்கும் தேர்தல்களில் ஈடுபடுபவர்களுக்கும் மிகவும் முக்கியமானது.

இச்சட்டமானது, இப்பொழுது நமக்கு கொடுத்திருக்கும் ஸ்தலஸ்தாபனங்கள் விஷயமாகவுள்ள ஒவ்வொரு டிஸ்டிரிக்டு போர்டு, தாலூகா போர்டு, (முன் யூனியன் போர்டுகளாகயிருந்து இப்பொழுது பஞ்சாயத்தென மாறு பட்டுள்ள) பஞ்சாயத்து போர்டு முதலியவைகளில் ஸ்தானம் வகித்தும், இனி ஸ்தானம் வகிக்கப்போவருமான ஒவ்வொரு மெம்பர்களுக்கும் அதிக முக்கியமானது.

ஓட்டுரிமையுள்ள ஒவ்வொருபட்டாதாரர்களுக்கும், ஜமீன்தார், சுரோத்திரியதார், மிராசுதார் முதலியவர்களுக்கும், ஒவ்வொரு லோக்கல் போர்டுகளில் உள்ள உத்தியோகஸ்தர், ஊழியர் முதலியவர்களுக்கும் லோகல்போர்டு கண்டிராக்டர்களுக்கும், போர்டு ஸ்கூல் உபாத்தியாயர்களுக்கும் காப்பி கிளப், சாப்பாடு ஹோட்டல் முதலியவைகளைப் பரிபாலிப்பவர்களுக்கும், பாக்டரி, ஒர்க்ஸ்ஷாப்பு, ஆலை, மில், தோல் ஷாப்பு, காளவாய் முதலியவைகளின் சொந்தக்காரர்களுக்கும், மோட்டார் பஸ், லாரி முதலியவைகளை உபயோகப்படுத்துபவர்களுக்கும், சினிமா முதலிய நாடக கொட்டகை முதலியவைகளின் சொந்தக்காரர்களுக்கும் இச்சட்டம் அதிகமுக்கியமானது.

வியாபார விஷயமாக லைசென்ஸ், பர்மிஷன் தொழில் வரி முதலிய வரிகள் விதித்து வசூலிக்கும் மார்க்கமும் பொது ஜனங்களின் க்ஷேமத்தைக்குறித்தும் இச்சட்டத்தில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

உயர்ந்த காகிதம். நல்லபதிப்பு. கெட்டியான பயிண்டு.

பெரிய புஸ்தகம் 1-க்கு விலை ரூபா 2,

விலாசம்:—

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு ஸ்ரீமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை